Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24 ரூபா 30.00
செப்ரெம்பர் 12 - 18, 2013

# வாரமலர் தினமுரசு




THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1031

## புலிகளும் போர்க்குற்றவாளிகள்



# காட்டிக் கொடுக்கிறது கூட்டமைப்பு!



## நல்லூரான் தேரிலே நடந்தது சுவாரசியங்கள்!

## படுவான்கரையில் வாழ்வுக்கான பாலம்

## தாமதிக்கும் சிரியா மீதான அமெரிக்க தாக்குதல்

## தர்ப்பையின் மகிமை

வைதீகக் காரியங்களை மேற்கொள்ளும்போது எந்த அமானுஷ்ய இடையூறும் ஏற்பட்டுவிடாதபடி தர்ப்பை காக்கிறது. அதனை மடக்கி, முடிச்சிட்டு பவித்திரமாக அணிந்துகொண்டு, நம்மைச் சுற்றிலும் இரண்டிரண்டாக தர்ப்பையைப் பரப்பி வைத்துக்கொள்வதும் இதற்காகத்தான். தர்ப்பையை அக்கினியின் பிரதிநிதி என்று சொல்வார்கள்.

காரியங்கள் செய்பவர் வேறானாலும் காரிய கர்த்தாவின் அம்சமாக தர்ப்பையே விளங்குகிறது. தர்ப்பை அஸ்திரம் போன்றது. மந்திரங்களை ஏற்றி ஏவினால் ஏவுகணைபோல பாயும் வீர்யம் கொண்டது. ஆலய கும்பாபிஷேகத்தின்போது தர்ப்பைமூலமாக மந்திரசக்திகளை கலசங்களில் ஆவாஹனம் செய்வார்கள்.

அதாவது, ஆண்டாண்டு காலமாக கோயிலின் சாந்நித்தியம் நிலைத்திருக்க இந்த தர்ப்பை உதவுகிறது. அதேபோல பிரம்மோற்சவம் போன்ற கோயில் திருவிழாக்களின் துவக்கக் கட்டமாக கோயில் கொடிமரத்தில் தர்ப்பையினால் ஆன கொடியை ஏற்றிவிட்டுதான் அடுத்தடுத்த கட்ட இறைப் பணிகளில் இறங்குவார்கள். தர்ப்பைப் பாயில் (தர்ப்பாசனம்) அமர்ந்து தியானம் செய்தால் மிக எளிதில் தியானம் சித்திக்கும்.

## ஆன்மீகம்

## விழிப்பாய் இருங்கள்

விழிப்பாய் இருங்கள். இதுதான் ஆண்டவர் தம் சீடருக்கு வழங்கிய எச்சரிக்கை மொழி.

எந்த நேரத்தில், எந்த நாளில் என்ன நடக்கும் என்று யாருக்கும் தெரியாது. எனவே, விழிப்பாக இருப்பதை ஒரு தாரக மந்திரமாகக் கொள்வோம். சாரண இயக்கத்தின் விருதுவாக்கு எப்போதும் தயாராக இருங்கள் என்பதுதான். எந்த நேரத்தில் எதுவும் நடக்கலாம். எதற்கும் சாரணர்கள் தயாராக இருக்கவேண்டும் என்பது அந்த இயக்கம் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கின்ற ஆரம்பப் பாடம்.

இயேசு தம் சீடராகிய நமக்கும் இந்தப் பாடத்தைக் கற்றுத் தருகின்றார். தொடர்ந்து விழிப்பாய் இருப்பதன் பொருளையும் இயேசு விளக்குகிறார். விழிப்பாய் இருக்கும் பணியாளர் தம் பணியை எந்த நேரத்திலும் தவறாது, பிறழாது செய்துகொண்டிருப்பவரே. இவரே அறிவாளி. நம்பிக்கைக்கு உரியவர் என்று இயேசு கூறுகிறார்.

எனவே, நாமும் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிற கடமைகளை, பணிகளை எந்த நேரத்திலும், நேர்மையுடன் செய்துகொண்டிருந்தால், நமக்கு எந்தக் கவலையும் இருக்கவேண்டிய தேவையில்லை. நமது கடமைகளை எப்போதும் நம்பிக்கைக்குரிய முறையில் ஆற்றுவோம். விழிப்பாய் இருக்கிறோம் என்று காட்டுவோம்.

## சாலச் சிறந்த சவாரி

இன்று பெண்கள் பிரயாணம் செய்யும்போது பலவித பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இதனால்தான் இஸ்லாம் பெண்களின் பிரயாண விடயத்தில் அறிவுரை ஆலோசனை வழங்கியுள்ளது.

ஒரு பெண் எப்பொழுதும் கணவருடனோ அல்லது சட்டபூர்வமான உறவினர்களுடனோ மாத்திரமே பிரயாணம் செய்யவேண்டும்.

அவள் தந்தை, சகோதரன், கணவன், தன் மகன் அல்லது விவாகம் முடிக்க விலக்கான ஓர் உறவினரோடு செல்வதை இஸ்லாம் அனுமதிக்கிறது.

ஒரு நாள் அல்லது அரை நாளில் முடியக் கூடிய சாதாரண பயணங்களை அவள் தனியாகச் செல்லலாம். ஆயினும் ஒரு பெண்மணி தனியே வெளியில் செல்வதை தவிர்த்துக் கொள்ளவேண்டும். இதுவே இஸ்லாம் கூறும் சாலச் சிறந்த சவாரி.

எம்.சி.கலீல், கல்முனை-05

## கவிதைப்போட்டி இல 1028




### இன்றைய கலாசாரம்

பாராட்டுக்குரியது

நம்பிவிட முடியாது
நாம் பெற்ற பிள்ளைகளையும்
காட்டிக் கொடுப்பில்
காலம் நகர்வதாலும்
உலகமும்
உறைந்து கிடக்கிறது
இரத்தக் களரியில்!
காரணம் தேடினேன்
காசுக்கு பாசத்தை விடவும்
பன்மடங்கு மனவசியம் அதிகம்
அதனால்தான் தந்தையின்
துப்பாக்கி தனயனை
இலக்கு வைத்துள்ளது
தனயனின் வேகமும்
விவேகமும் சிலவேளை
குறைந்திருக்கலாம்
இதுவே இன்றைய
கலாசாரத்தின் பிரவாகம்.

A.பாரிஸ்,
மிகிந்தலை.

## கவிதைப் போட்டி இல 1031



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 23. 09. 2013

கவிதைப் போட்டி இல. 1031 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### நியதி

நீ ஒருவனுக்குக் குறி பார்த்தால்
உனக்கு வேறொருவன்
குறிபார்ப்பான் நீ ஒருவனுக்குத்
தீங்கிழைத்தால்
உனக்கு வேறொருவன்
தீங்கிழைப்பான் நீ ஒருவனுக்கு
நன்மை செய்தால்
உனக்கு வேறொருவன்
நன்மை செய்வான்
இதுதான் இப்பிரபஞ்சத்தின் நியதி.

அ.சந்தியாகோ, கண்டி

### சிரியா

குறிவைப்பது
குற்றவாளியல்ல
குறி தவறினால்
குறிக்கோல் இல்லை.

எஸ்.திலகவதி, பதுளை.

### பயமா பவ்வியமா...?

"பயங்கரவாதிகள்
தயங்கிறவாதிகளாக
இருந்தால்,
குண்டும் வெடிக்கும்
மண்டையும் பிளக்கும்!"

நா.ஜெயபாலன், பிபிலை.

### தீவிரவாதம் வேண்டாம்

இன்றைய தீவிரவாதி
நாளைய தீவிரவாதியை
தொலைக்க முயல்கின்றான்
தீர்வு கூடி நிற்பதால்
தீவிரவாதம் வேண்டாம் என்கிறான்.

க.நிதர்சன், யாழ்ப்பாணம்.

### வாழ்வா? சாவா?

முகமூடி விரலுக்குள்
இவன் மூளை
கதறல்... சுட்டால்
மண்டை (யே)
சிதறல்!

பாண்டியூர்- பொன்.நவநீதன்.

### கோழை

தனியாளாக தைரியமாக
தடைகள் பல கடந்து
உயிர் மீது ஆசையில்லாமல்
உன்னிடத்திற்கே வந்தவன்
நான் வீரன்
முதுகுக்குப் பின் நின்று
முகத்தை மூடி மறைத்து
முதுகுக்குப் பின் குறி
பார்க்கும் நீ - கோழை

யோ.சறோ, கரணவாய் மேற்கு.




## உங்கள் பக்கம்

### தன்னியக்க சேவை தேவை?

கொடிகாமம் பிரதேசத்தில் இயங்கும் சாவகச்சேரி இலங்கை வங்கிக்கிளையில் வங்கிக் கணக்கை வைத்திருக்கும் வாடிக்கையாளர்களுக்கு பணத்தை பெற்றுக் கொள்வதற்கான தன்னியக்க சேவை (ATM இயந்திரம்) இல்லாதது பெரும் குறைபாடாகக் காணப்படுகின்றது.

அதாவது ATM இயந்திரம் இல்லாத காரணத்தினால் இப்பிரதேச வாடிக்கையாளர்கள் வங்கி நடவடிக்கை இல்லாத காலம் மற்றும் விடுமுறை தினங்களில் வைப்புச் செய்த பணத்தை அவசர தேவை நிமிர்த்தம் பெற்றுக்கொள்வதற்கு சாவகச்சேரி இலங்கை வங்கி ATM இயந்திரத்திலே பணத்தை எடுத்துக்கொள்ள வேண்டிய சிரம நிலை காணப்படுகின்றது. கொடிகாமப் பிரதேச மக்கள் தூர பயணத்தை மேற்கொண்டே சாவகச்சேரிக்கு அல்லது வேறு இடங்களிலோ பணத்தை எடுக்க வேண்டிய நிலை துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

இலங்கை வங்கி வாடிக்கையாளர்களின் கருத்தை நலனில் கொண்டு கொடிகாமத்திலும் ATM இயந்திர சேவையை ஏற்படுத்துவது அவசியமானதாகும். இவ்வங்கியின் வாடிக்கையாளர் என்ற வகையில், இதை நான் உரிய அதிகாரிகளுக்கு தினமுரசின் உங்கள் பக்கம் ஊடாகத் தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகின்றேன். எனவே விரைவில் ATM இயந்திரத்தை கொடிகாமத்திலும் நிறுவ இலங்கை வங்கியின் அதிகாரிகள் சீரமேற்கொள்ள வேண்டும் எனக்கேட்டுக் கொள்கின்றேன்.

வாடிக்கையாளர்கள்,
கொடிகாமம்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com

## ஏன் நிறுத்தினாய்?

முரசு பல சவால்களைத் தாண்டி தனக்கே உரிய பாணியில் தன்வழியில் சென்றுகொண்டிருக்கின்றது. முரசின்மீது எனக்கும், என் குடும்பத்துக்கும் தனி மரியாதை உண்டு. எங்கள் குடும்பத்தவர்கள் எல்லோரும் ஒவ்வொரு பகுதியையும் படிப்பார்கள். அதில் நான் எல்லாவற்றையும் அலசுவேன்.

விவகாரமான விடயங்களையும் வித்தியாசமாய் சொல்லும் பாங்கு அருமை. 24 ஆம் பக்கத்தில் இடம்பெறும் தகவல்கள் பிரமிப்பூட்டுபவையாகவும், வியக்க வைக்கக் கூடியனவாகவும் இருக்கின்றது. முந்தைய காலங்களில் கின்னஸ் சாதனையாளர்கள் பற்றிக் குறிப்பிடுவீர்கள். அதை ஏன் முரசு நிறுத்திவிட்டது. உன் பணி மேலும் மேலும் சிறக்க வாழ்த்துக்கள்.

என்.அனுராதா, மாத்தறை.

## வாசகர் சாலை



### அதிரடியாருக்கு சபாஷ்!

அன்பின் தினமுரசுக்கு வணக்கம்.

உன்னிடம் உள்ள பல்லாயிரக்கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன். நீண்ட காலத்திற்குப் பின்னர் அதிரடி அய்யாத்துரை பகுதியை வாசித்ததில் மகிழ்ச்சி.

உந்தக் கூட்டமைப்புக்காரரின்ர திருகுதாளங்களை வெளியால கொண்டு வந்திருக்கும் அதிரடியாருக்கு ஒரு சபாஷ் போடுகின்றேன். பல சிறப்புக்களோடு உன் பணி தொடரட்டும்.

மா.கோபாலசாமி, கோப்பாய்.

## வாசகர்களே! வாசியுங்கள் இடி அமீன் தொடர் கதை!

அற்புதன் அன்று எழுதிய உண்மை தொடர்கதை ஒன்றை இடி அமீன் என்ற தலைப்பில் இன்றைய வாசகர்களுக்காக மீள் பிரசுரம் செய்து மெய்சிலிர்க்க வைத்தது தினமுரசின் 1029 ஆவது இதழ்.

முரசு முன்வைத்துள்ள முதல் அங்கம் இடி அமீன் தொடர் கதை இதன் அடுத்த அதிர் இடி தொடரை அறிய ஆவலைத் தூண்டி நிற்கிறது. மரணித்த மா மனிதர் இடி அமீன் கதை என்றும் இதயத்துடிப்புள்ளது. இதனால்தான் இக்கதை மீள் பிரசுரம் போலும்.

அன்று அக்கதையை வாசிக்கத் தவறியவர்கள் இன்று இடி அமீன் தொடரைப் பாருங்கள். இதன் ஒவ்வொரு அங்கமும் உயிரோட்டம் உள்ளவை. வாசகர்களே! வாசியுங்கள் இடி அமீன் தொடர் கதை.

எம்.சி. கலீல்,
கல்முனை-05

# சுயலாப அரசியலுக்காக மக்களை அழிவிற்கு இட்டுச்செல்லாதீர்கள்



## அமைச்சர் டக்ளஸ் வேண்டுகோள்

சுயலாப அரசியல்வாதிகளாலேயே எமது மக்கள் அளவிடமுடியாத துன்ப துயரங்களைச் சந்திக்க வேண்டி நேர்ந்ததாகவும் இதேபோன்று எதிர்காலங்களிலும் சுயலாப அரசியலுக்கு இடம்கொடுக்க வேண்டாமென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி பிரதான வீதியில் அமைந்துள்ள தனியாருக்குச் சொந்தமான எரிபொருள் நிலையம் ஒன்றை திறந்து வைத்து உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், முன்னர் ஒருகால கட்டத்தில் எந்த நேரத்திலும் என்னவும் நடக்கலாம் என்ற நிலை இருந்து வந்தபோதிலும் இன்று அந்த நிலை முற்றாக மாற்றம் பெற்று ஒரு அமைதியான சூழல் பிறந்துள்ளது. எனவே எதிர்காலத்தில் மக்கள் இன்றுள்ள அமைதிச் சூழ்நிலையை பாதுகாத்து அதனூடாக முன்னேற்றத்தை காண வேண்டும்.

இந்நிலையில் மக்கள் உசுப்பேற்றலுக்கும் நடைமுறைச்சாத்தியமில்லாத பேச்சுக்களுக்கும் இடம் கொடுக்காது சரியான வழிதிசைநோக்கி செல்ல வேண்டும். நாம் மக்களின் துன்ப, துயர நேரங்களில் அவர்களுடன் ஒன்றாக இருந்துள்ள அதேவேளை, இன்றும் மக்களது மேம்பாட்டுக்காகவும் இப்பகுதியின் அபிவிருத்திக்காகவும் தொடர்ந்தும் மக்களுடனேயே வாழ்ந்து வருகின்றோம். மக்கள் சுதந்திரமாக வெளிப்படையாக செயற்பட வேண்டுமென்பதற்காகவே நாம் வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட்டு வருகின்றோம்.

தமிழ்த் தலைமைகளின் தவறான வழிநடத்தல்களினாலேயே கடந்த காலங்களில் எமது மக்கள் பல்வேறுபட்ட துன்பதுயரங்களை சந்திக்க வேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறானதொரு சூழ்நிலையின் போதுதான் குடாநாட்டு மக்கள் சுயலாப அரசியலுக்காக வலுக்கட்டாயமாக குடாநாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தார்கள். இவற்றை உணர்ந்து கொண்டு எமது மக்கள் எதிர்காலத்தில் சுயலாப அரசியலுக்கு இடம் கொடுக்க வேண்டாமென்றும் அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

# மாற்றத்தை நோக்கிய வரலாற்றுக்காக மக்கள் சேவையாற்றுபவர்களுக்கு

## ஒன்றிணைந்து ஆதரவை வழங்க வேண்டும்

மாற்றத்தை நோக்கியதான வரலாற்றுக்காக மக்கள் சேவையாற்றுபவர்களுக்கு அனைவரும் ஒன்றிணைந்து ஆதரவை வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், வடமாகாணத்தில் பனந்தொழிற்துறை மேம்பாட்டுக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது கோரிக்கைக்கு அமைவாக 270 மில்லியன் ரூபாவை அரச ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கத்தில் பணியாளர்கள் மற்றும் அங்கத்தவர்கள் மத்தியில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில், பனைசார் தொழிற்துறை மேம்பாட்டுக்காகவும் குறித்த தொழிற்துறை சார்ந்தவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்குமாக அக்கறையோடும், தொடர்ச்சியாகவும் உழைத்துக் கொண்டிருப்பவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் என்றும் பனந்தொழிற்துறையை உள்நாட்டில் மட்டுமல்லாது சர்வதேச மயப்படுத்தப்பட வேண்டுமானால் அமைச்சர் அவர்களால் மாத்திரமே சாத்தியமாகுமென்றும் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே மக்களை சரியான வழிமுறையை காண்பித்து அத்னூடாக எமது மக்களுக்கான அரசியல் உள்ளிட்ட அனைத்துரிமைகளையும் வென்றெடுக்கும் வகையிலான செயற்திட்டங்களையும் திட்டமிட்டு சிறப்பான முறையில் அமைச்சர் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்தார்.

# உணவு ஒவ்வாமை



உணவு ஒவ்வாமை காரணமாக சுகவீனமடைந்த நூற்றுக்கும் அதிகமானவர்கள் டிக்கோயா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஹட்டன், டிக்கோயா பகுதியிலுள்ள கோவிலொன்றில் பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து வழங்கப்பட்ட உணவை உட்கொண்டவர்களே உணவு ஒவ்வாமை காரணமாக சுகவீனமடைந்துள்ளனர். இவ்வாறான உணவு ஒவ்வாமை பிரச்சினை மலையகத்தில் அடிக்கடி நடைபெற்று வருகின்றது. சுகாதாரப் பரிசோதகர்களின் கவனக் குறைவே இந்நிலைக்கு காரணம் என்று அப்பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.



# ஸ்னோடன் கக்கிய அடுத்த இரகசியம்

எட்வார்ட் ஸ்னோடன் வெளியிட்ட அமெரிக்க உளவுத்துறை இரகசியங்களில் அடுத்த இரகசியம் வெளியாகியுள்ளது. அமெரிக்க உளவுத்துறை NSA, கத்தாரை சேர்ந்த அல்-ஜசீரா டி.வி.யின் ஈமெயில்களையும், ரஷ்யாவின் ஏரோ.ஃ.புளோட் ஏர்லைன்ஸின் புங்கிங் சிஸ்டத்தையும் உளவு பார்த்த விபரங்கள்தான், அந்த இரகசியம். ஜெர்மன் பத்திரிகையான Der Spiegel, இந்த தகவலை வெளியிட்டுள்ளது. எட்வார்ட் ஸ்னோடன் வெளியிட்ட இரகசிய ஆவணங்களில் ஒன்றின் பிரதி தமக்கு கிடைத்திருப்பதாக தெரிவித்துள்ளது இந்த ஜெர்மன் பத்திரிகை.

ஸ்னோடன் வெளியிட்ட இரகசிய ஆவணங்களை வைத்திருப்பது, தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று பிரிட்டிஷ் பத்திரிகையான கார்டியனிடம் கூறிய பிரிட்டிஷ் அரசு, அந்த ஆவணங்களை அழித்துவிட சொன்னது.

அதன்பின், இரகசிய ஆவணத்தின் ஒரு பிரதி அமெரிக்காவின் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையிடம் உள்ளதாக தெரியவந்தது. அதையடுத்து, அந்த ஆவணத்தை அழிக்கும்படி நியூயோர்க் டைம்ஸுக்கு நோட்டீஸ் கொடுத்தது வாஷிங்டனில உள்ள பிரிட்டிஷ் தூதரகம்.

அதுதான். அமெரிக்க உளவுத்துறைகளால் தேடப்பட்ட நபர்கள் பலர் ஏரோ.ஃ.புளோட் விமானங்களிலேயே பயணம் செய்தது பின்னர் தெரிய வந்திருந்தது.

அவ்வளவு ஏன், அமெரிக்க உளவுத்துறை ஏரோ.ஃ.புளோட்டின் புங்கிங் சிஸ்டத்தை உளவு பார்க்கிறது என்ற இரகசியத்தை லீக் செய்த எட்வார்ட் ஸ்னோடன்கூட, ஹொங்கொங்கில் இருந்து மாஸ்கோவுக்கு பயணம் செய்தது, ஏரோ.ஃ.புளோட் விமானத்தில்தான்.

ஏரோ.ஃ.புளோட் விமான நிறுவன புக்கிங் சிஸ்டத்தை அவர்கள் எப்படி உளவு பார்க்கிறார்கள் என்பதை தெரிந்திருந்த ஸ்னோடன், அதில் தனது பெயர் சிக்காத வண்ணம் பார்த்துக்கொண்டு பயணம் செய்திருக்கக்கூடும். எட்வார்ட் ஸ்னோடனால் கடத்திவரப்பட்ட ஆவணங்களில், இன்னமும் எத்தனை இரகசியங்கள் உள்ளனவோ அவையெல்லாம் தற்போது யார் யாருடைய கைகளில் உள்ளனவோ. அடுத்த இரகசியம் எப்போது வெளியிடப்பட போகிறதோ!

## வயது வந்தவர்களை வெளியேற்ற சிறுவர் இல்லத்துக்குத் தடை

களுத்துறை பிரின்சஸ் கிரிஸ் அநாதைகள் சிறுவர் இல்லத்திலிருக்கும் 18 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளை அந்த இல்லத்திலிருந்து விலக்குவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடைவிதித்துள்ளது.

அந்த இல்லத்திலிருக்கும் 18 வயதிற்கும் மேற்பட்டோரை விலக்குமாறு களுத்துறை நீதவான் நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்ட உத்தரவை உடனடியாக ரத்து செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. குறித்த சிறுவர் இல்லத்தில் இருக்கின்ற இரண்டு பிள்ளைகள் தாக்கல் செய்த மனுவை ஆராய்ந்த போதே மேன்முறையீட்டு நீதிமன்றம் இவ்வாறு இடைக்கால தடையை விதித்துள்ளது.


## தற்காலிக அடையாள அட்டை 15ஆம் திகதி வரை

தற்காலிக அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி இம்மாதம் 15ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. இத்திகதி மேலும் நீடிப்புச் செய்யப்படமாட்டாது என்று தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது. அடையாள அட்டை இல்லாமல் வாக்களிக்க முடியாது எனத் தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது. எனவே அடையாள அட்டை இல்லாதவர்கள் உடனடியாக தற்காலிக அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

## மாணவர்கள் கையடக்கத் தொலைபேசி பாவிக்கத் தடை

பாடசாலை மாணவ, மாணவியர் கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்துவதனை தடை செய்யவேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. கல்வி விவகாரம் குறித்து விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழு இந்த பரிந்துரையை செய்துள்ளது. பாடசாலை வகுப்பறைகளில் பயன்படுத்தக் கூடிய தொழில்நுட்ப கருவிகளைத் தவிர்ந்த ஏனைய, தொழில்நுட்ப சாதனங்கள் பாடசாலைக்கு எடுத்துச் செல்லக்கூடாது. இவ்வாறு அதிநவீன தொழில்நுட்ப சாதனங்களை பயன்படுத்துவதன்மூலம் மாணவ மாணவியரின் குணவியல்புகள் பாதிக்கப்படுகின்றன.

## பாம்பை சுமக்கும் பெண்!



பெண்களின் வயிற்றில் குழந்தை வளர்வதைத்தான் பார்த்திருக்கிறோம். ஆனால் தென் ஆப்பிரிக்காவில் ஒரு பெண்ணின் வயிற்றில் பாம்பு வளர்கிறது என்றால் அதிசயமாக இருக்கிறதா?

ஆம், தென் ஆபிரிக்காவில் கிழக்கு ஜொஹன்னஸ் பேர்க்கின் வொஸ்லூரஸ் இடத்தைச் சேர்ந்த மரியா சொடெட்ஸி (49) என்ற பெண்ணின் வயிற்றில் பாம்பு வளர்வதை மருத்துவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

அடிக்கடி நோயினால் பாதிக்கப்பட்ட இந்த பெண்ணை பரிசோதித்த மருத்துவர்கள், நோய்க்கான காரணம் வயிற்றில் இருக்கும் பாம்பாக இருக்கலாம் என்றும் இதனை அறுவை சிகிச்சை செய்யவேண்டுமென்றும் கூறியுள்ளனர்.

அறுவை சிகிச்சைக்காக பெருமளவு பணம் தேவைப்படும் எனவும் டாக்டர்கள் கூறியுள்ளனர். வசதியற்ற குடும்பத்தைச் சேர்ந்த இவரால் டாக்டர்களிடம் சிகிச்சை மேற்கொள்ள முடியாததால் மதகுரு ஒருவரிடம் நாட்டு வைத்தியத்தை மேற்கொண்டு வருகிறார்.

இதுகுறித்து மரியா கூறுகையில், இந்த சிகிச்சையால் எனது பற்கள் அனைத்தையும் இழந்துவிட்டேன். எனது காதலனும் என்னைவிட்டுச் சென்றுவிட்டார். எப்படியோ மதகுரு இன்றி இந்த பாம்பை நீக்கமுடியாது என்று தாம் நம்புவதாக தெரிவித்துள்ளார்.

வாரமலர்
தினமுரசு
த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

# சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுக்க நினைக்கும் ஆண்டிகள்

தமிழ் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தமிழ் வாக்குகளைக் குறிவைத்த வார்த்தைப் பிரயோகங்களை உள்ளடக்கியிருந்தது.

அதில் சுற்றிவளைத்து தனிநாட்டுக்கான கோரிக்கைகள் போல் வார்த்தைப் பிரயோகங்கள் கையாளப்பட்டிருக்கின்றன. உதாரணத்துக்கு. "ஒரு தேசிய மக்கள் குழாம் என்றவகையில், எமது வரலாற்றுரீதியான வாழ்விடங்கள். ஒரு தேசியம் என்றவகையில் எமக்கு உரித்தாகின்ற. எமது ஒருமித்த உரிமைகளை மற்றும் ஒன்றுபட்ட இலங்கைக்குள் நாட்டின் தமிழ் மக்களைக் கொண்ட வடக்குக் கிழக்கில் தன்னாட்சி அரசாங்கமொன்றை உறுதிசெய்வதற்கான எமது தெரிவைப் பயன்படுத்துவதற்கான எமது உரிமை ஆகியவற்றைப் பற்றி நாம் கரிசனை கொண்டுள்ளோம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான கருத்துக்கள் தமிழ் மக்களுக்கு இதுவரை அரசியல்ரீதியான வெற்றிகளையும் பெற்றுக் கொடுக்கவில்லை. ஆனால். தமிழ் மக்களை உணர்ச்சியூட்டி அவர்களின் வாக்குகளை அபகரிக்க உதவியுள்ளது.

இல்லாவிட்டால், கிடைக்கப்பெறுகின்ற அதிகாரங்களைக்கொண்டு கூட்டமைப்பினர் இதுவரை தமிழ் மக்களுக்கு எந்த வெற்றிகளையோ, நன்மைகளையோ பெற்றுக் கொடுக்காதபோதும் கூட்டமைப்புக்கு கணிசமான வாக்குகளைத் தமிழ் மக்கள் வழங்கிக் கொண்டிருப்பார்களா? என்று கேட்கவும் முடியும்.

எப்படித்தான் பேசினாலும் தமிழ் மக்கள் தமக்கு வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கை காரணமாகவே கூட்டமைப்பினர் விளைவு- களைப் பற்றிக் கவலையில்லாமல் உளறிக் கொண்டிருக்கிறார்கள்.

கூட்டமைப்பின் உளறல்கள் தென்னிலங்கை மக்களிடையே எதிர்மறையான விளைவையே ஏற்படுத்தியுள்ளது.

அதாவது. கூட்டமைப்பு தமிழ் மக்களிடம் தனிநாட்டுக்கான ஆணையைக் கோரியுள்ளது என்றும். கூட்டமைப்பு நாளை மாகாண அதிகாரத்திற்கு வந்தால். இலங்கையின் இறைமைக்கு எதிராகவும். இலங்கையில் வாழும் ஏனைய இனங்களுடன் இணைங்கி வாழாமல் தனித்த அரசாங்கம் போன்று செயற்பட எத்தனிப்பார்கள் என்றும் சந்தேக உணர்வைக் கொடுத்துள்ளது.

பெரும்பான்மை மக்களின் உணர்வுகளைத் தூண்டிவிடும் கருத்தாகவே. அண்மையில் அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறிய கருத்துக்கள் அமைந்துள்ளன.

அவர் அந்த அறிக்கையில், கூட்டமைப்பு விஞ்ஞாபனத்தின் ஊடாக எம்மீது யுத்தத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளது. அந்த யுத்தத்தை ஏற்றுக் கொள்ளவும், அதனை எதிர்கொள்ளவும் நாங்கள் தயாராகிவிட்டோம். அவர்கள் மூன்றாவது யுத்தத்தை ஆரம்பித்து விட்டார்கள். இனியும் எம்மால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. ஆயுதங்களை ஏந்துமாறு தமிழ் தலைமைகள் கூறும்போது. நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்று கூறியிருக்கிறார்.

கூட்டமைப்பின் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்படாத பல விடயங்களைச் சேர்த்து அவர் கூறியிருக்கின்றார் என்றாலும். இதற்கு அடியெடுத்துக் கொடுத்தவர்கள் கூட்டமைப்பினர்தான் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

இந்த நிலைமை ஏட்டிக்குப் போட்டியாகத் தொடருமானால். அதனால் பாதிப்புக்களை எதிர்கொள்ளப் போகின்றவர்கள் தமிழ் மக்களே அன்றி. கூட்டமைப்பினரோ. அவர்களினது குடும்பத்தினரோ அல்ல என்பதை தமிழ் மக்கள் உணர்ந்து கொள்வது அவசியமாகும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# புலிகளும் போர்க்குற்றவாளிகள் காட்டிக் கொடுக்கிறது கூட்டமைப்பு!



எதிர்வரும் 21ஆம் திகதி வடக்கில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலானது சுயலாப நோக்கங்கள் அற்ற, மக்கள் நலன்சார்ந்து சிந்திப்போரிடையே ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்த நம்பிக்கையானது இரண்டு வகையானதாகக் காணப் படுகின்றது. முதலாவது, 30 வருட யுத்தத்தினால் வாழ்வையும், வாழ்விடங்களையும் இழந்து வாழவழியின்றி எதிர்காலம் பற்றிய சந்தேகங்களோடு இருக்கின்ற மக்களுக்குத் தேவையான அடிப் படைத் தேவைகளையும் வாழ்வதற்குரிய வாழ்வாதாரங்களையும் ஏற் படுத்திக் கொடுப்பதற்கு இந்த மாகாணசபை அதிகாரங்களைப் பயன்படுத்தமுடியும் என்ற எதிர் பார்ப்பு.

இரண்டாவதாக, வடக்கு என்பது தமிழ் மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதி என்பதால் இப்பகுதி மக்களின் செயற்பாடுகளும், தீர்மானங்களுமே இலங்கையில் வாழுகின்ற தமிழ் மக்களின் தீர்மானங்களாகவும் பார்க்கப்படுகின்ற ஒரு சூழல் காணப்படுகின்றது. அல்லது இலங்கையில் வாழ்கின்ற ஒட்டு மொத்த தமிழ் இனத்தின் தலைவிதியை தீர்மானிக்கும் காரணியாக வடக்கு மக்களின் தீர்மானங்களே பார்க்கப்படுகின்றது.

இலங்கை சுதந்திரம் அடைவற்கு முன்னர் 1927ஆம் ஆண்டு அப்போது அரசியலில் புதுமுகமாக வந்திறங்கிய S.W.R.D. பண்டாரநாயக்காவினால் சமஷ்டி முறை வலியுறுத்தப்பட்டபோது அதனை எதிர்த்தவர்கள் வடக்குத்தமிழர்கள். பின்னர் பிரித்தானியாவினால் சுதந்திரம் வழங்கப்பட்டபோது பிரித்தானியர்கள் தமிழ் மக்களுக்கு ஆட்சி அதிகாரமுள்ள வகையில் சுதந்திரம் தருவதற்கு விரும்பியபோதும் வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்களே! "வேண்டாம், வேண்டாம் நாங்கள் ஒரு நாட்டுக்குள்ளேயே ஒற்றுமையாக வாழ்கின்றோம். முதலில் சுதந்திரத்தைத் தந்துவிட்டு நீங்கள் போங்கள்" என்று கூறியதாகச் சொல்லப்படுகின்றது. பின்னர்வந்த சமஷ்டிக் கோரிக்கையாயினும் சரி, தனிநாட்டுக் கோரிக்கையாக இருப்பினும் சரி, ஆயுதப்போராட்டம் என அனைத்துத் தீர்மானங்களையும் உருவாக்குவதில், தீர்மானிப்பதில், இலங்கையின் வடபகுதியில் வாழ்கின்ற தமிழ்மக்களும் அவர்களின் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களுமே ஆதிக்கம் செலுத்திவருகின்றனர் என்றவகையில் கடந்தகாலத்தில் தமிழ் மக்கள் சந்தித்த இழப்புக்கள், அழிவுகள் என்பவற்றுக்கான தார்மீகப் பொறுப்பு பெருமளவில் வடக்கையே சார்ந்து நிற்கின்றது.

இந்நிலையே தற்போதைய சூழலில் அரசியல் தீர்வு, சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே ஏற்பட்ட மனக்கசப்புக்கள், நம்பிக்கையீனங்கள் என்பவற்றைக் களைந்து ஐக்கியத்தையும் பரஸ்பரம் நம்பிக்கையையும் வளர்த்தெடுத்து ஒன்றுபட்ட இலங்கைக்கும் அதிகாரங்களை பகிர்ந்து வாழமுடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதில் பாரிய பொறுப்பு வடக்கின் பக்கத்திலேயே அதிகளவில் காணப்படுகின்றது.

அவ்வாறான செயற்பாடுகளுக்கு வடக்கு மாகாணசபை என்பது சிறந்த ஆரம்பமாக இருக்கும் என்பதே புத்திஜீவிகளின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவுசெய்து கொள்ளப் போதுமானதில்லை. இருந்தபோதிலும் குறித்த அதிகாரப் பகிர்வானது இலங்கையின் உடைய அரசியல் அமைப்பிலே உள்ளடக் கப்பட்டுள்ளது. எனவே அதனை நடைமுறைப்படுத்துவதற்கு சட்ட ரீதியான அனைத்து அதிகாரங்களும் அரசாங்கத்திற்கு இருக்கின்றது.

மாறாக, அபிலாசைகளை நிறைவுசெய்து கொள்ளத்தக்க அதிகாரப்பகிர்வு ஒன்றுதான் தேவை என்று தமிழர் தரப்பு ஒற்றைக் காலில் நிற்குமாக இருந்தால், நியாயமான முறையில் சில அதிகாரங்களை வழங்குவதற்கு அரச தரப்பு உள்ளூர விரும்பினாலும் தம் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக எதிர்க்கட்சிகள் கொக்கரிக்கும். தமிழ் மக்கள் மீது பிரிவினை வாதக்கண்ணோட்டத்தைச் செலுத்திவருகின்ற சிங்கள 'மக்களும் ஏற்றுக்கொள்ள ம்மாட்டார்கள். எனவே பல்வேறு சவால்களையும், தடைகளையும் சந்திக்கவேண்டிய சூழலை ஏற்படுத்தும். எனவேதான் சகல தரப்புக்களாலும் ஏற்றுக்கொள்ளப் பட்டு இலங்கையின் அரசியல் அமைப்பிலே உள்வாங்கப்பட்டுள்ள 13ஆவது திருத்தத்தை அமுல் படுத்துவதன் ஊடாக அதிலே வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தி முதற் கட்டமாக, தமிழ் மக்களுடைய வலிகளுக்கும், காயங்களுக்கும் நிவாரணம் தேடிக்கொள்வது, சமநேரத்தில் குறித்த அதிகாரப் பகிர்வில் உள்ள குறைபாடுகளையும் மேலதிக அதிகாரங்களின் தேவைகளையும் நடைமுறை ரீதியில் புரியவைப்பதற்கும் ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்தி அடுத்தகட்டத்தை நோக்கி நகர முடியும் என்று பெரும்பாலானோர் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர்.

ஆனால் இவற்றையெல்லாம் கேள்விக்குறியாக்கும் விதத்திலேயே தமிழ்மக்களுடைய பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றவர்கள் என்று பீற்றிக்கொள்கின்ற கூட்டமைப்பினருடைய தேர்தல் விஞ்ஞாபனம் ஏமாற்றத்தை அளித்துள்ளது என்றே தெரிகின்றது.

கடந்த வருடம் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பெரும்பாலானவற்றைக் கைப் பற்றியுள்ள கூட்டமைப்பினர் அவற்றை செயற்திறன் அற்ற வகையில் கிடப்பில்போட்டு வைத்துள்ளனர். அவற்றுக்காக வருடாவருடம் வழங்கப்படுகின்ற நிதியில் அதிக தொகையை ஆண்டு முடிவில் திறைசேரிக்கு திருப்பி அனுப்பிவைப்பது, என்று தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டும் தமிழ் சமூகத்தின் இடையே உளுத்துப்போன சாதிப்பாகுபாடுகளைத் தூசிதட்டி தங்களுக்கு உள்ளேயே மாறி மாறி வண்டவாளங்களை அவிழ்த்துக்கொண்டும் திரிகின்றனர்.

கூட்டமைப்பினருடைய மாகாண சபைத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மக்களின் வாழ்வாதாரங்களைக் கட்டியெழுப்புதற்கும், வாழ்வை வளம்பெறச் செய்வதற்கும் எவ்வாறான திட்டங்கள் இருக்கின்றது, மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை எவ்வாறு செயற்திறன் உள்ளவையாக மாற்றப்போகின்றோம் என்ற எந்தவிதமான ஆக்கபூர்வமான விடயங்களும் உள்ளடக்கப்படவில்லை.

வெறுமனே சர்வதேசம், உரிமை என்றெல்லாம் பூச்சாண்டி காட்டப்பட்டிருக்கின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக போர்க்குற்ற விசாரணை நடாத்தப்பட வேண்டுமாம்! அதுவும் புலிகளிடமும் 'அரசபடைகளிடமும் நடத்தப்படவேண்டுமாம்.

தங்களுக்கும் தங்கள்மீது புலி முத்திரை குத்தப்படுவது அரசுடனான பின்கதவு உறவுகளுக்குத் தடையாக இருப்பதை நடைமுறை ரீதியில் உணருகின்ற கூட்டமைப்பினர் சாணக்கியமாக புலிகளும் தங்களுக்கு விரும்பாதவர்கள் என்ற செய்தியை அரசாங்கத்திற்கு சொல்ல முனைகின்றார்கள்.

புலிகளும், அதன் தலைமையும், அதன் கட்டுமானங்களும் 2009ஆம் ஆண்டு அழிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறிவிட்ட நிலையில், இல்லை இல்லை இன்றும் புலிகள் இருக்கின்றார்கள், அவர்களைப் பிடித்து விசாரியுங்கள் என்று இவர்களே கயிற்றை எடுத்துக் கொடுக்கின்றார்கள். அப்படியாயின் இவர்கள் கைகாட்டுகின்ற விசாரணை நடத்தப்பட வேண்டிய புலிகள் யார்? என்ற கேள்வி எழுகின்றது அல்லவா?

புலிகளின் தலைவர் கொல்லப்பட்டு விட்டார். புலனாய்வுத் தலைவர் பொட்டம்மானுக்கு என்ன நடந்தது என்று யாருக்குமே தெரியவில்லை. மூத்த தலைவர்கள் என்று சொல்லப் பட்டவர்களில் பலரும் கொல்லப்பட்டு விட்டனர். இந்நிலையில் புலிகள் என்று அடையாளப்படுத்தப்பட்டு எஞ்சி இருப்பவர்கள் யுத்தத்தின் இறுதிக்கட்டங்களில் கைது செய்யப் பட்டு, சரணடைந்து, தடுப்பு முகாம்களில் இருந்துவிட்டு இப்போது முன்னாள் போராளிகள் என்ற பெயர்ப்பலகையுடன் சமூகத்தில் இணைக்கப்பட்டுள்ள 13000 ற்கும் மேற்பட்ட அப்பாவிகளேயாவார்.

ஏற்கனவே சமூகத்தில் பல்வேறு சவால்களையும் பல்வேறு கழுகுகளின் பார்வை வலயத்துள் இருக்கின்ற இந்த அப்பாவிகளுக்கு மேலும் தொந்தரவுகளை உண்டு பண்ணும் வகையிலேயே கூட்டமைப் பினரின் இந்தக் கூற்று அமைந் துள்ளது.

மேலோட்டமாகப் பார்க்கும்போது, ஏவப்பட்ட இந்த அப்பாவிகள் பலரின் கண்களுக்கும் புலிகளாக தெரிகின்றபோதிலும் விசாரணை நடாத்தப்பட்டு குற்றவாளிகள் கூண்டில் நிறுத்தப்படவேண்டிய பல புலிகள் இன்று வெள்ளை வேட்டி சால்வையைப் போர்த்துக்கொண்டு எலிகளாக கூட்டமைப்பில் வலம் வந்து கொண்டிருக்கின்றனர். ஏனெனில் இறுதி யுத்தத்தை தடுத்து நிறுத்துவதற்கும், பேரழிவுகளை தடுத்து நிறுத்துவதற்கும் இன்று உபதேசம் செய்கின்ற கூட்டமைப் பினருக்கு எத்தனையோ சந்தர்ப் பங்கள் கிடைத்திருக்கின்றன.

2008ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டக் காலப்பகுதியில் பாராளுமன்றத்தில் ஒரு நெருக்கடி உருவாகியிருந்தது. அப்போது கூட்டமைப் பின் 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் இருந்தனர். இந்தப் பாராளுமன்றப் பலத்தை ஒரு பேரம் பேசும் பலமாகப் பயன்படுத்தி யுத்தத்தை நிறுத்தி அழிவுகளைத் தடுப்பதற்கான சந்தர்ப்பமாகப் பயன்படுத்துமாறு மறைந்த அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டோ புள்ளே போன்ற பலரும் வலியுறுத்தியபோது சிரித்துச் சமாளித்துக்கொண்டு நழுவிய மாவை சேனாதிராஜா போன்றவர்கள், மக்கள் சாகிறார்கள், யுத்தத்தை நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு கேட்டபோது அவர்கள் (புலிகள், மக்கள்) முழுவதுமாக அழிகின்ற நேரம் வந்துவிட்டது. இந்நேரத்தில் அவர்களைப் பற்றிப் பேசி எங்களுடைய எதிர்கால அரசியலை பிரச்சினைக்குள் சிக்க வைக்க விரும்பவில்லை. அதுபற்றி என்னோடு பேசாதீர்கள் என்று கூறியவர்தான், தற்போது தமிழ் மக்களின் தலைவர் என்று பீற்றிக் கொண்டுதிரியும் இரா.சம்பந்தன். சட்டத்தில் உள்ளபடி சரியாக நடக்கின்றேன் என்ற பெருமையில் ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளின் வாழ்வை சிறைக் கதவுக்குள் பூட்டி வைத்தவர்தான் இன்றைய முதலமைச்சர் வேட்பாளர் முன்னாள் நீதியரசர் விக்கினேஸ்வரன்.

குற்றமிளைத்தவனைவிட குற்றத்திற்குத் துணைபோனவர்கள் குற்றத்திற்கான சூழலை ஏற்படுத் தியவர்களும்தான் மோசமான குற்றவாளிகள் என்பார்கள்.


அப்படிப்பார்த்தால் கடந்த காலத்தில் தமிழ் மக்கள் சந்தித்த இழப்புக்களுக்கும் அழிவுகளுக்கும் தார்மீகப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் அவற்றையெல்லாம் மூடி மறைக்கும் வகையில் வேறொரு திசையில் கையைக் காட்டி தங்களைப் புனிதர்களாக்கிக் கொள்ளும் முயற்சியை வெற்றிகரமாகவே செய்து கொண்டிருக்கின்றனர்.

இதனால், பாதிக்கப்பட்டது எங்களுடைய சமூகத்தின் எதிர்காலமும் நம்பிக்கைகளும் மட்டுமே என்பதை நாம் புரிந்து கொள்வோம். ஆனால் இந்தக் குறுக்குவழிப் பயணமும் காட்டிக் கொடுப்புக்களும் நீண்டகாலத்திற்கு மக்கள் செவிகளில் ஏறாது, உண்மைநிலையைப் புரிந்துகொள்கின்ற காலம் வரும்பொழுது மக்கள் தகுந்த பாடம் புகட்டத் தவறமாட்டார்கள். அந்த நேரம் தற்போது ஆரம்பித்துவிட்டது என்பதற்கான அறிகுறிகள் பல திசைகளிலும் தெரிய ஆரம்பித்து விட்டன.

இதனை எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலுடன் பலரும் உணர்ந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

-சிவன்-

எக்ஸ்ரே ரிப்போர்ட்



# வீரத்தாயின்... அவலம்...

இப்படித்தான் ஒரு மழைகாலம் 1989ஆம் ஆண்டு. சிறுவயதிலேயே தந்தையை இழந்த தனது பிள்ளைகளின் கல்வி மட்டுமே தனது கடைசிக்கனவாக பிள்ளைகளின் கல்விக்கனவில் மூழ்கியிருந்த அம்மாவின் கனவைக் கலைத்துக் கொண்டு போய்விட்டாள் மூத்தவள். வெள்ளைச் சட்டையுடன் காலமை போனவள் வீடு திரும்பவில்லை.

அவளும் அவளுடன் இன்னும் பல பிள்ளைகள் ஊரைவிட்டுக் காணாமற் போயினர். அவர்களோடு அம்மாவின் மூத்தவளும் காடுகள் நோக்கிப்போய் விட்டதாகத் தகவல் வந்தடைந்தது. எங்கை போய்?, யாரைக் கேட்டு? அம்மாவுக்கு எதுவும் செய்யத் தெரியவில்லை. அவளை நினைத்து அம்மா தினமும் அழுதாள். அவளுக்காக இறைவனைப் பிரார்த்தித்தாள்.

ஒன்றரை வருடம் கழித்து வெள்ளைச் சட்டையுடன் போனமகள் வரிச்சீருடையில் வந்துசேர்ந்தாள். உள்ளுக்குள் பெருமிதமும் வெளியில் கோபத்தையும் காட்டி மகளை வரவேற்றாள் அம்மா. அம்மாவின் பேச்சுக்கு மறுகதை கதைக்காதவள் அம்மாவுக்கு அரசியல் சொல்லிக்கொடுத்தாள். போடி நீயும் உன்ரை அரசியலும்... அம்மா சினத்தபோதும் அவள் அம்மாவின் மடியில் கிடந்து ஆயிரம் கதைகள் சொன்னாள்.

அந்த முன்னேற்றமில்லாத கிராமம். பெரிய உத்தியோகத்தில் இவள் வருவாளென்ற கற்பனை கலைந்தது, அம்மாவின் ஒவ்வொரு பேச்சிலும் ஒட்டியிருந்தது. வந்தவள் வந்தாள் வீட்டில் மிஞ்சியிருந்த பிள்ளைகளையும் தன் வழியில் வருமாறு கோரிக்கை விடுத்துவிட்டுப் போனாள்.

அதற்குப் பிறகு அவள் தனது தோழிகளோடு சைக்கிளில் வரத் தொடங்கினாள். சில காலங்களில் மோட்டார் வாகனத்தில் வரத்தொடங்கினாள். பின்னொரு நாள் அவளுக்கு பாதுகாப்பணியோடு பிக்கப்பில் வந்திறங்கினாள். அம்மா அப்பாவி. ஆனாலும் தனது மகள் பெரிய பொறுப்பாளரானது அம்மாவுக்கு பெருமையாகத்தானிந்தது. அவளைப் பற்றி எங்கும் கதைத்தார்கள்.

அவள் இப்போது தனியே வருவதில்லை. அவளுக்கான காவலாளருடன்தான் வருவாள். அவளது திறமையால் அவள் ஓர் படையணியையே தாங்குகிற வல்லமையைப் பெற்றுக்கொண்டாள். மேடைகளில் அவளது பேச்சுக் கேட்க ஆயிரமாயிரம் பேர் குவிந்தார்கள். அம்மாவின் மகள் பேரொளி பொருந்திய தலைவனின் கனவை மெய்யாக்கப் புறப்பட்ட மகளிர் அணியின் மாற்றங்களிலும் வளர்ச்சியிலும் பெரும் பங்காற்றிக் கொண்டிருந்தாள்.

காலம் தன்வேகத்தில் ஓடிக்கொண்டிருக்க ஒருநாள் அம்மாவின் கடைசிச் செல்லம் அக்காபோன இடத்திற்குப் போய் விட்டாளென்று பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பிய மூன்றாமவள் சொன்னாள். அம்மாவுக்கு அழுகை வரவில்லை. தனது பிள்ளைகளின் தெரிவு சரியானதென்று நம்பினாள். அப்படியே அடுத்தடுத்து ஒவ்வொரு பிள்ளைகளும் அக்காவின் வழியில் போய்விட அம்மா தனித்துப் போனாள்.

ஆனாலும் தனக்கென்றொரு வீடு கட்ட வேணுமென்ற ஆசையை அம்மா தனித்து நிறைவேற்ற வேண்டுமென்ற முயற்சியில் சிறுசிறுகச் சேர்த்த பணத்தில் 2 அறையில் ஒரு வீடுகட்டி முடித்துவிட்டு மகள்களை குடிபுக அழைத்தாள். மூத்தவளைத் தவிர மற்றவர்கள் அம்மாவின் குடிபுகுகைக்கு விடுமுறை கேட்டு வந்து அம்மாவின் சந்தோசத்தில் பங்கெடுத்துவிட்டுப் போனார்கள். மூத்தவள் மட்டும் வரவில்லை. உதிப்ப முக்கியமோணை உனக்கு? என ஒரு முறை கேட்டுவிட்டுப் போனாள்.

ஒருநாள் சின்னவள் வீட்டுக்கு வந்தாள். அம்மாவுடன் ஒரு கிழமை நிற்கப்போவதாகவும் சொன்னாள். அன்று அம்மா அடைந்த ஆனந்தத்தினை இப்போதும் நினைத்துப் பார்ப்பதுண்டு. அம்மாவைப் பிரியும் கடைசி விடையது என்றதை அம்மா அறிந்திருக்காத காலமது. அம்மாவை இருக்கவைத்து வீட்டுவேலைகள் எல்லாம் செய்து அந்த ஒரு கிழமையும் அவள் அம்மாவை மகாராணியாகவே வாழ்வித்தாள். கடைசி நாள் அவளை அழைத்துப்போக வாகனம் வந்துநின்றது. மூத்தவளும் அந்த வாகனத்தில் வந்திருந்தாள்.

என்னணை கடைக்குட்டியைக் கண்டோடனும் என்னை மறந்திட்டா போல....? அம்மா சிரித்தாள். அன்றைக்கு அம்மாவுக்கு அவளுக்கு ஒரு பதிலும் சொல்லத் தெரியவில்லை. தங்கையை ஏற்றிக்கொண்டு போய்விட்டாள் மூத்தவள்.

ஒரு மாவீரர் வாரத்தில் வீட்டுக்கு வந்தார்கள் சில போராளிகள். அம்மாவின் கடைக்குட்டி அந்நியத் தெருவொன்றில் தன்னைப் பிச்செறிந்து காற்றாகிவிட்டதாய் அம்மாவுக்குச் சொல்லப்பட்டது. முதல் விழுந்த அடியும் இடியும் அது. செய்தியறிந்து அம்மாவை ஆறுதல்படுத்த வந்த மூத்தவள் சொன்னாள்.... அவள் பேர் சொல்ல முடியாத வேர்களோடை தன்னைக் கொடையாக்கீட்டுப் போயிற்றாளம்மா... அவளின்ரை உயிர் எங்களுக்குப் பெரிய வெற்றியைத் தந்ததம்மா....

அம்மாவின் கடைசிக்கனவு கடைசிச் செல்லம் வாய்விட்டுப் பெயர் சொல்லியழ முடியாதவளாய் போய்விட்டாள். கருவறை தீப்பற்றியெரிவது போல அவளது ஞாபகங்கள் அம்மாவைச் சுற்றும் போதெல்லாம் உணர்வுகள் தீயாகும். அவளைப் பார்க்க வேண்டும் போல, அவளைக் கட்டியணைக்க வேணும் போல... எவ்வளவோ உணர்வுகள் அம்மாவின் உயிரை இறுக்கி அழுத்தும். அம்மா தொடமுடியாத தூரத்தில் நின்று சிரிக்கிற அம்மாவின் கடைசிச் செல்லத்தின் குரல் மட்டும்தான் அம்மாவுக்கு மிச்சமாய் கேட்கும்.....

5 பிள்ளைகளை நாட்டுக்காகக் கொடுத்துவிட்ட அம்மாவின் கொடையை ஊரில் பெருமையோடு சொல்லுவார்கள். ஆனால் ஒண்டெண்டாலும் என்னோடை இருக்கலாம்... என்ற சின்ன வருத்தம் எப்போதும் இதயமூலையில் வலியைக் கொடுத்தபடியே இருந்தது.

(தொடரும்)



# புலிகளின் வதை முகாமில்

வதை 78 மணியம்

சுந்தரமூர்த்தி முன்னர் கல்லோயா ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையில் ஒரு அதிகாரியாகப் பணிபுரிந்த காலத்தில், அங்குள்ள ஊழியர்களின் பல்வேறு கோரிக்கைகளுக்காக மறியல் போராட்டம், சாகும்வரை உண்ணாவிரதம் எனப் பல போராட்டங்களில் ஈடுபட்டு, அரசாங்க நிர்வாகத்தை அடிபணிய வைத்ததுடன், பலரின் கவனத்தையும் ஈர்த்தவர்.

ஐ.தே.க ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற அரசாங்க ஊழியர்களின் பொது வேலைநிறுத்தத்தின் போது, தனது நண்பரான திருவையாறு குடியேற்றத் திட்ட அதிகாரி துரைராஜாவின் மோட்டார் சைக்கிளில் கிளிநொச்சி முதல் அனுராதபுரம் வரை பயணித்து, வேலை நிறுத்தத்துக்கு ஆதரவாக அரச ஊழியர்களைத் திரட்டியவர்.

எனவே தோழர் எஸ்.டி. பண்டாரநாயக்கா மிருசுவில் படித்த பெண்கள் குடியேற்றத் திட்டத்துக்கு விஜயம் செய்தபோது, அங்கு நடைபெற்ற கூட்டத்துக்கு, தான் அத்திட்டத்தின் பொறுப்பதிகாரி என்பதையும் பொருட்படுத்தாது சுந்தரமூர்த்தி, தானே முன்வந்து தலைமை தாங்கினார்.

அங்கு அவர் தலைமை உரை ஆற்றுகையில், 'நான் எனது கொள்கைகளையும் இலட்சியத்தையும் எப்பொழுதும் எனது நெஞ்சுக்கு முன்னால் வைத்திருப்பேன். எனது உத்தியோகம் எனது முதுகுக்குப் பின்னால் தான் இருக்கும். எனவே நான் செய்யும் செய்கைகளால் எனது உத்தியோகம் போய்விடும் என நான் பயப்படுபவனல்ல' என உணர்ச்சிகரமாகக் கூறினார். (அவர் திருவையாறு திட்டத்தில் பொறுப்பதிகாரியாக இருந்த போது, தனது குருவான தோழர் கார்த்திகேசனை அங்கு அழைத்து பகிரங்க சொற்பொழிவு ஒன்றையும் ஏற்பாடு செய்தவர்)

சுந்தரமூர்த்தி அவர்கள் சவால் விடுத்து செய்த இந்த நடவடிக்கையை ஐ.தே.க அரசாங்கம் கண்டும் காணாமல் விட்டுவிட்டது. சிலவேளைகளில் மிருசுவில் கா.பொ. இரத்தினத்தின் கிளிநொச்சித் தொகுதியில் இல்லாமல், அது சாவகச்சேரித் தொகுதிக்குள் உள்ளடங்கி இருந்ததும் ஒரு காரணமாக இருக்கலாம்.

இந்தச் சூழ்நிலையில் நாடு 1970ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலை நெருங்கிக் கொண்டிருந்தது. ஐ.தே.க அரசாங்கத்தில் பங்காளியாகி, மாவட்ட சபை பெற்றுத்தருவதாக தமிழ் மக்களுக்கு வாக்குறுதி கொடுத்து, நாலரை ஆண்டுகள் அவ்வரசில் ஒட்டிக் கொண்டிருந்த தமிழரசுக்கட்சி, பிரதமர் டட்லி சேனநாயக்க மாவட்ட சபை கொடுக்காமல் ஏமாற்றிவிட, திரிகோணமலை-யைப் புனித நகராக்கவேண்டும் என்ற கோரிக்கையை அரசாங்கம் ஏற்காததால் அரசிலிருந்து விலகுகிறோம் என தேர்தலுக்காக ஒரு நொண்டிச்சாட்டைச் சொல்லிக் கொண்டு, அரசிலிருந்து வெளியேறியது. ஆனால் தமிழ் காங்கிரசுக்கட்சி அரசுடனேயே ஒட்டிக் கொண்டிருந்தது.

தேர்தலுக்கு முன்னர் ஏதோ உள்நோக்கத்துடன் அரசாங்கம் தான் புதிதாக உருவாக்கிய விவசாயப்படையைக் கலைத்துவிடத் தீர்மானித்தது. எனவே விவசாயப்படை வீரர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 500 ரூபா கொடுத்து (அப்பொழுது அது பெரிய காசு). தெற்கில் ஐ.தே.கவுக்கும், வடக்கில் தமிழ் காங்கிரசுக்கும் தேர்தல் வெற்றிக்காக உழைக்கும்படி கூறி வீட்டுக்கு அனுப்பிவைத்தது. அதேவேளையில் வேறு எங்கும் இல்லாத முறையில் விசுவமடு விவசாயப்படை முகாம் அமைந்திருந்த இடத்தில் மட்டும் இராணுவ முகாம் ஒன்றையும் அது நிறுவியது.

**இராணுவத்தினரைத் தாக்கிய தருமபுர இளைஞர்கள்**

பொதுவாகவே மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் படை முகாம்கள் அமைவதை உலக நாடுகள் பலவற்றிலும் வாழும் மக்கள் விரும்புவதில்லை. மார்க்சிய மூலவர்களான மார்க்ஸ், லெனின் போன்றோர் தெளிவாகக் குறிப்பிட்டது போல, ஆயுதப்படைகள் என்பவை அரசு இயந்திரத்தின் அச்சாணியாகும்.

அது முதலாளித்துவ அரசாக இருக்கலாம் அல்லது சோசலிச அரசாக இருக்கலாம். அடிப்படை உண்மை அதுதான். இலங்கை போன்ற முதலாளித்துவ அமைப்பு முறையைக் கொண்ட நாட்டில், ஆயுதப்படைகள் என்பவை அந்த அமைப்பைப் பாதுகாக்கவே செயற்பட்டு வந்துள்ளன. அதிலும் குறிப்பாக பெரு முதலாளிகளின் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலிருந்த நேரங்களில், அந்தக் கட்சியின் அரசாங்கங்கள் ஆயுதப்படைகளை பொதுமக்களுக்கு எதிராக தாராளமாகப் பயன்படுத்தி வந்துள்ளன.

1970இல் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி கூட்டரசாங்கம் புதிதாக விசுவமடுவில் அமைத்த இராணுவ முகாமும் சந்தேகத்துக்குரிய ஒன்றாகவே இருந்தது. இன்று வடக்கு, கிழக்கிலிருந்து ஆயுதப்படைகளை முற்றாக அகற்றவேண்டும் எனப் பிரச்சாரம் செய்துவரும் பிற்போக்கு இனவாதத் தமிழ் தலைமையின் (தமிழ் தேசியக் கூட்டமைப்பு) முன்னோடிக் கட்சிகளான அன்றைய தமிழரசு - தமிழ் காங்கிரஸ் கட்சிகள், அன்றைய அரசாங்கம் விசுவமடுவில் புதிதாக இராணுவ முகாமை அமைத்தபோது எவ்வித ஆட்சேபனையையும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் கட்சிகளின் இந்த நிலைப்பாடு ஆச்சரியத்துக்குரிய ஒன்றல்ல, ஏகாதிபத்திய விரோத சிறீலாங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்குவரும் வேளைகளில் அரசுக்கு எதிராகப் பலவிதமான போராட்டங்களை நடாத்துவதும், ஏகாதிபத்தியத்துக்கு விசுவாசமான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிப்பீடம் ஏறும் சமயங்களில் தமிழ் தலைமைகள் அவ்வரசுடன் கூடிக்குலாவுவது அல்லது மௌனம் காப்பதும் கடந்த 60 ஆண்டுகளாக அவைகள் மிக ஒழுங்காகப் பின்பற்றி வரும் நடைமுறையாகும்.

விசுவமடுவில் அரசாங்கம் புதிதாக இராணுவ முகாம் அமைத்தது குறித்து தமிழ் கட்சிகள் அசட்டையாக இருந்தாலும், அந்தப் பகுதி மக்கள் மத்தியில் பெரும் அச்சமும் பதட்டமும் உருவாகி இருந்தது. அவர்கள் அஞ்சியபடியே நிலைமைகளும் உருவாகத் தொடங்கின. இராணுவத்தினர் முகாமிட்ட பகுதியில் போதிய தண்ணீர் வசதி இருக்கவில்லை. குடிநீரை அவர்கள் அங்குள்ள கிணறுகளிலிருந்து ஒருவாறு பெற்றுக் கொண்டாலும், குளிப்பதற்கும் இதர தேவைகளுக்கும் போதிய தண்ணீர் அங்கு இருக்கவில்லை. எனவே அவர்கள் உழவு இயந்திரம் ஒன்றில் பொருத்தப்பட்ட தண்ணீர் தாங்கி (பவுசர்) மூலம் தண்ணீர் எடுத்துவர ஆரம்பித்தனர். அவர்களுக்குத் தேவையான போதிய தண்ணீர் அருகிலுள்ள விசுவமடு அல்லது உடையார் கட்டுக்குளத்தில் இருந்தபோதும், அவர்கள் தருமபுரம் - விசுமடு எல்லையிலுள்ள நெத்தலி ஆற்றில் தண்ணீர் எடுக்க ஆரம்பித்தனர். உண்மையில் நெத்தலி ஆற்றில் எப்போதுமே போதிய தண்ணீர் இருப்பதில்லை என்றபோதிலும், அவர்கள் அங்குதான் இலக்கு வைத்து வந்தனர்.

(தொடரும்...)



# நிலமெல்லாம் இரத்தம் 67

பா.ராகவன்

சொல்லிவைத்த மாதிரி வேலையை ஆரம்பித்துவிடுவார்கள். உள்ளூர் விவசாயிகள் வரம்போரம் நின்று வேடிக்கை பார்க்க வேண்டியது தான். இதில் இன்னொரு கூத்தும் நடக்கிறது. பல இடங்களில், நகர்ப் புறங்களில் இருந்து ஆட்கள் கிராமங் களுக்குத் தினசரி காலை வந்து வேலை பார்த்துவிட்டு மாலையா னதும் வண்டியேறி மீண்டும் ரவுனு க்குப் போய்விடுவார்கள். அலுவலக உத்தியோகம் மாதிரி.

இது 18 ஆம் நூற்றாண்டு முழு வதும் நடைமுறையில் இருக்கிறது!

அலெக்சாண்டர் 1 என்னும் ஜோர் மன்னர் பதவி ஏற்ற பிறகுதான் (கி.பி. 1802 – 1825) நிலைமை கொஞ்சம் மாறத் தொடங்கியது. மக்களின் மனமறிந்து நடந்து கொள்வது முக்கியம் என்று கருதிய இந்த மன்னர், பதவியேற்றதும் முதல் வேலையாக கிராமப்பகுதிகளில் வேலைக்குப்போன யூதர்களை எல்லாம் விரட்ட ஆரம்பித்தார். அப்படியே கொஞ்சம் கொஞ்சமாக எல்லையோர யூத நிலங்களைக் கையகப்படுத்தும் பணிகளும் ஆரம்பமாயின.

யூதர்கள் தரப்பில் அநியாயமா–





கத் தங்கள் நிலங்கள் அபகரிக்கப் படுவதாகச் சொல்லப்பட்டதே தவிர, அதன் பின்னணிக் காரணங்கள் எதுவுமே உலகுக்கு எடுத்துக்காட்டப் படவில்லை. எல்லா தேசங்களிலும் யூதர்களைத் துரத்துகிறார்கள், ரஷ் யாவும் துரத்த ஆரம்பித்திருக்கிறது என்று மட்டுமே உலகம் நினைத்தது.

உண்மையில், முந்தைய மன்னர் கேதரின் காலத்தில் கிடைத்த சலுகை களைப் பயன்படுத்திக் கொண்டு ரஷ்யாவில் யூதர்கள் மிக வலுவாகக் காலூன்றியிருந்த அளவுக்கு வேறெந்த நாட்டிலும் நடைபெறவில்லை என்று சொல்லவேண்டும். பெரும்பாலான ரஷ்ய விவசாயிகளுக்கு அப்போது கையெழுத்துப் போடக்கூடத் தெரி யாது என்பது அவர்களுக்குப் பெரிய சாதகமாக இருந்திருக்கிறது.

ஆனால் அலெக்சாண்டர் 1 இன் காலத்தில் ஆரம்பித்த யூத விரட்டல் நடவடிக்கைகள் மிக விரைவாகச் சூடுபிடிக்க ஆரம்பித்துவிட்டது. முதலில் கிராமங்களிலிருந்து யூதர்களை விரட்டி னார்கள். பிறகு சிறு நகரங்களிலிருந்து விரட்ட ஆரம்பித்தார்கள். எங்கெல்லாம் யூதர்கள் வசிக்கிறார்களோ (அவர்கள் எப்போதும் மொத்தமாகத்தான் வசிப்பார் கள் என்பதை ஏற்கெனவே பார்த் திருக்கிறோம்) அங்கெல்லாம் போய் அடித்துவிரட்ட ஆரம்பித்தார்கள்.

இதையெல்லாம் அரசாங்கம் முன் னின்று செய்யவேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கவில்லை. மாறாக, ஒவ்வொரு ஊரிலிருந்தும் யூதர்களை விரட்டி யடிப்பது, தங்கள் தேசியக் கடமை என்றே ரஷ்யர்கள் அப்போது நினைத் தார்கள். முதலில் அரசாங்கம் இதனை ஆதரிப்பதாகக் காட்டிக்கொள்ளவில்லை என்றாலும் பெரியளவில் எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை.

மாறாக, யூதர்களை பாதிக்கும் விதத்தில் சிலபல சட்டதிருத்தங்கள், நிலவரையறைகள் கொண்டுவரப் பட்டன. வரிகளும் அதிகரிக்கப்பட்டன. யூதர்கள் தங்களுக்கென்று தனியே பள்ளிக்கூடங்கள் நடத்திக்கொள்வதற் கான அனுமதி மறுக்கப்பட்டது.

ரஷ்ய அரசுத்துறை அதிகாரிகளுக்கு இந்தவகையில் கொஞ்சம் வருத்தம் தான். ஏனெனில் நீண்ட நெடுங்கால மாக அவர்கள் யூதர்களிடமிருந்து கையூட்டுப் பெற்று வந்திருக்கிறார்கள். திடீரென்று யூத எதிர்ப்பு அலையடிக்க ஆரம்பித்துவிட்டதில் அவர்கள் இருதலைக்கொள்ளி எறும்பு ஆனார்கள். அதேசமயம் மக்களின் எழுச்சியுடன் தாங்கள் ஒத்துப்போகாத பட்சத்தில் பதவிக்கே ஆபத்து வரக்கூடும் என்பதும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது.

வேறு வழியில்லாமல்தான் இந்த நிர்ப்பந்தங்களை அவர்கள் யூதர்களின் மீது திணித்தார்கள் என்பதையும் சொல்லிவிட வேண்டும்.

சுமார் ஐம்பது வருடங்கள். அதற்குக் கொஞ்சம் மேலேகூட இருக்கலாம். இம்மாதிரியான சிறுசிறு பிரச்சினை களும் பயமும் ரஷ்ய யூதர்களைக் கவ்விக்கொண்டிருந்தன. எல்லாவற்றுக் கும் ஒரு முடிவு வரவேண்டாமா? வந்தது. 1881ஆம் ஆண்டு அலெக் சாண்டர் 2 என்ற ஜோர் மன்னர் படு கொலை செய்யப்பட்டார். என்னவோ உப்புப்பெறாத அரசியல் காரணங்க ளுக்காக நடைபெற்ற படுகொலை அது.

ஆனால் விதி, அந்தக் கொலைச் சதியில் யூதர்கள் ஈடுபட்டிருந்ததாகச் சுட்டிக்காட்டிவிட்டது.

அது உண்மையா, இல்லையா என்று விசாரிக்கக்கூட யாரும் அப்போது தயாராக இல்லை. ஒரு ரஷ்யச் சக்கர வர்த்தியின் படுகொலைக்கு வந்தேறி களான யூதர்கள் காரணமாக இருக்கக் கூடும் என்கிற வதந்தியே போதுமா– னதாக இருந்தது.

ஒட்டுமொத்த ரஷ்யாவும் கொதித்து எழுந்துவிட்டது.

எலிசபெத் க்ரேட் என்கிற இடத்தில் தான் முதல் கலவரமும் முதல் கொலை யும் விழுந்தது. வருடம் 1881. தீபோல ரஷ்யாவின் தென் மாகாணங்கள் அனைத்திலும் ஒரு வாரத்தில் பரவி விட்டது. பார்த்த இடத்திலெல்லாம் யூதர்களை வெட்டினார்கள். தப்பி ஓடியவர்களையெல்லாம் நிற்க வைத்துக் கொளுத்தினார்கள். முழுக்கக் கொல்ல முடியவில்லை என்றால் கை, கால் களையாவது வாங்கினார்கள். யூத வீடுகள், தேவாலயங்கள், பள்ளிக் கூடங்கள், சமூக நிறுவனங்கள் எது வும் மிச்சமில்லை. இரத்தவெறி தலைக் கேறிவிட்டிருந்தது ரஷ்யர்களுக்கு.

தப்பித்து ஓடக்கூட முடியாமல் சிக்கிக்கொண்ட பல்லாயிரக்கணக்கான யூதர்கள் அப்போது நடுச்சாலைகளில் வெட்டுப்பட்டு இறந்துபோனார்கள். அவர்களது பிணங்களை எடுத்துப் போடக்கூட யாரும் முன்வரவில்லை!

இந்தத் தாக்குதலுக்கு ரஷ்ய மன்னரே (புதிதாகப் பொறுப்பேற்றி ருந்த அலெக்சாண்டர் 3) இரகசிய உத்த ரவிட்டதாகப் பிறகு சொன்னார்கள்.

யூத இனத்தை முழுவதுமாக அழிக் கவும் முடியாது, அவர்களது வளர்ச்சி யைத் தடுக்கவும் முடியாது என்பதை உலகம் புரிந்துகொள்ள ஆரம்பித்த போது பத்தொன்பதாம் நூற்றாண்டு பிறந்திருந்தது. கிட்டத்தட்ட ஐரோப்பா முழுவதுமே யூதக் களையெடுப்பு ஒரு செயற்திட்டமாகவே வகுக்கப்பட்டு, செயற்படுத்தப்பட்டுக்கொண்டிருந்த பதினெட்டாம் நூற்றாண்டு முழுவதி லும் ஒவ்வொரு தேசத்திலும் வெட்ட வெட்ட, அவர்கள் தோன்றிக்கொண்டே இருந்தார்கள். ஆயிரம் யூதர்கள் ஓரி டத்தில் கொல்லப்பட்டபோது பக்கத்து ஊரில் புதிதாக இன்னொரு இரண்டா யிரம் யூதர்கள் வந்துவாழ ஆரம்பிப் பார்கள். லட்சம் யூதர்கள் கொல்லப் பட்டபோது இன்னொரு லட்சம் பேர் எங்கிருந்தாவது வந்து சேர்வார்கள்.

யோசித்துப் பார்த்தால் ஐரோப்பியர் களின் யூதவெறுப்பு என்பது அருவருப் பூட்டக்கூடிய விதத்தில் வளர்ந்து பரவி யிருந்திருக்கிறது. சுமார் ஆயிரத்தெண் ணூறு ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு யூதர், இயேசு என்னும் இன்னொரு யூதரைக் கொன்றார் என்பதற்காக யூத குலத்தையே வேரோடு அழிக்க நினைத்து எத்தனை படுகொலைகளைச் செய்திருக்கிறார்கள்! அது ஒரு காரணம். எத்தனை நெருக்கடி நேர்ந்தாலும் யூதர் கள் மனம் தளராமல் மீண்டும் அழிவிலி ருந்து மேலேறிவந்து வாழத் தொடங்கி விடுகிறார்களே என்கிற எரிச்சல் இன் னொரு காரணம். (தொடரும்...)

# இளைஞர்களே காதல் செய்வீர்!



**தூய** அன்பின் - காதலின் வெளிப்பாடு எவ்வாறு அமையும், அமைய வேண்டும் என்று சிந்திப்பது அவசியமாகிறது. இறைவன் எல்லோருக்கும் இரண்டு கண்களையே வழங்கியிருந்த போதிலும், எல்லோருடைய கண்களும் ஒரே மாதிரியாகப் பார்ப்பதில்லை. ஒரு மனிதனின் கண்களுக்கு இனிமை யாகத் தோன்றக் கூடியது, மற்றொருவரின் கண்களுக்கு இனிமையாகத் தோன்றுவ தில்லை. எனவே அழகு என்பது காண்பவரின் கண்களைப் பொறுத்த தாகவே இருக்கிறது.

இவ்வாறு ஒவ்வொருவரும் தன் கண்ணுக்கினியவற்றை விரும்புவதனாலே கிரேக்க நாட்டிலும் "ஒரு தேவதை ஆணையும் பெண்ணையும் முதலில் ஒன்றாகவே படைத்து, ஆனால் மற்றொரு தேவதை அவர்கள் இருவரை யும் வெவ்வேறாகப் பிரித்துவிட்டது. அதன்காரணமாக அவர்கள் தங்களின் மற்றொரு பாதியைக் கண்டுபிடிக்கும் வரையில் தேடி அலைந்து கொண்டிருக் கிறார்கள் என்று ஒரு கதையுண்டு.

வெறும் கண்கள் இணைவதால் பயனில்லை. இருவரதும் மனசும் இணையவேண்டும். இன்றைய இளம் தலைமுறை தவறுவிடும் இடம் இதுவேயாகும். கண்ணுக்கு அழகாகத் தெரிபவர்கள் மனதளவில் இருண்ட இயல்பு கொண்டவர்களாக இருந்துவிடலாம். காதலில் ஏமாற்றம் வந்து விட்டால் சகிக்க முடியாது. ஒருவரை ஒருவர் பாசத்தால் ஈர்த்துக்கொள்ள வேண்டும்.

இன்றைய இளம் தம்பதியரில் பெரும்பாலானரிடம் மன ஒற்றுமையற்ற இல்வாழ்க்கைதான் காணப்படுகிறது. நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு கள் குவிவது இதனைத் தெளிவாகக் காட்டுகின்றது. விவாகரத்தும் சட்டப்படி பெற்றுவிடுகிறார்கள். இதன்பின்னர் சம்பந்தப்படவர்கள் மகிழ்ச்சி யுடன் வாழ்கின்றார்களா? என்றால் பெரும்பாலும் இல்லை என்பதுதான் பதிலாகக் கிடைக்கிறது. தமிழர்களின் இனிய குடும்ப வாழ்வு அழிந்து வருவது கண்டு இரத்தக்கண்ணீர் வடிக்க வேண்டியிருப்பது மட்டுமல்ல வளமாக வாழவேண்டிய இளஞ் சமூகம் பொருந்தாத உறவை பெரும்பாலும் தாமே ஏற்படுத்தி துன்பப்படுவதைக் காணும்போது சிரிப்பதா? அழுவதா? என்று புரியவில்லை. கவியரசு கண்ணதாசனின் ஒரு திரைப்பாடலில் பின்வரும் வரிகளை எண்ணிப் பார்க்கின்றேன்.

பெண்குரல்:- பெற்றவர்கள் பார்ப்பதிலே பெருமை என்னவோ?
ஆண்குரல்:- அவர்கள் மற்றவையும் பார்ப்பதினால்
நன்மையல்லவோ? நன்மையல்லவோ?

**"எத்தனை மலர்கள் தாவும் பட்டாம் பூச்சிகள்"**

சென்ற கட்டுரையில் குறிப்பிட்டதை இந்த இடத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன். "ஆண் கெட்டுப் போனால் சம்பவம், ஆனால் பெண் கெட்டுப் போனால் சரித்திரம்" ஆண்களின் தவறுகளுக்கு இயற்கை தண்டனை கொடுக்கவில்லையே என்பது எனக்கும் ஆதங்கமாகவே உள்ளது. எனவே பெண்களே! உங்கள் வாழ்வை - வாழ்க்கைத் துணை- யைச் சரியாகத் தெரிவுசெய்யுங்கள். இன்பமாக வாழுங்கள்.

பெண் வழுக்கி விழுந்து அவளை அவமதிக்கும் இக்கால உலகம் ஆண், வழுக்கி விழுந்துவிடின் அவ்விதம் செய்வதில்லை. மதிப்பிற்குரிய மனிதன் போன்றுதான் அவன் எல்லோருடனும் சேர்ந்து பழகுகின்றான். அவனிடம் பணம் இருந்தாலே அவனுடைய அந்தரங்கச் சாக்கடை வாழ் வெல்லாம் அழகிய திரையில் மறைக்கப்பட்டு அவனும் பெருமைக்குரிய பெருமனிதனாக விளங்குகின்றான். இந்நிலை மாறவேண்டும். கற்பை இழந்தவள் போன்று கற்பை இழந்தவனும் அவன் எவ்வளவு செல்வமும், செல்வாக்கும் உள்ளவனாக இருந்தபோதிலும் "தலையின் இழிந்த மயிர்" போன்று சமூகத்தால் ஒதுக்கித் தள்ளப்படல்வேண்டும்.

காதல் சரியானதாக அமையாவிடின் அதிலுள்ள பேரபாயம் உணரப்பட வேண்டும். பெண்கள்தான் அதிகளவு எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று மீண்டும், மீண்டும் வலியுறுத்த வேண்டியுள்ளது. அண்மைக் காலமாக யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கலாசார சீரழிவு பற்றி யாவரும் அறிவோம். இங்கு பெண்கள்தான் பாதிப்படைந்து வருகிறார்கள் என்பது வெளிப்படை, ஆனால் எப்படித்தான் எடுத்துரைத்தாலும், இடித்துரைத்தாலும் இப்போதைய நாகரிக நங்கையர் காதில் ஏதும் விழுவதாக இல்லை.

ஆணும், பெண்ணும் தங்களுக்கு உரிய காலத்தில் இறைவன் தங் களுக்கு அளிக்கும் இன்பக்கிளர்ச்சியைக் கட்டுப்படுத்திச் செயலாற்ற வேண்டும். கட்டுப்படுத்திச் செயலாற்றுவதென்பது மன அடக்கத்துடன் திகழ்ந்து இல்லற வாழ்வில் புகுவதேயாகும். ஆனால் அவ்விதம் செய்வ தற்குப் பதிலாகச் சிலர் அந்த வேட்கையைத் தணிப்பதற்காக மருந்துண் கின்றனர். இதனால் ஏற்படும் தீயபலன்களை அவர்கள் அறியாது செயலாற் றுவது பெரிதும் வருந்தத்தக்கதாகும். உயிர் நிலையில் வன்மை இருந்தால் தான் ஒருவனுக்கு அறிவுத்தெளிவு, நினைவாற்றல், வீரம், மன உறுதி, அழகு ஆகிய எல்லாவித நலன்களும் ஏற்படும். இல்லையேல் ஒன்றுமே இல்லை.

தங்களின் பால் உணர்ச்சியால் ஏற்படும் ஆற்றலைத் தங்களின் குறிக் கோளின் மீது செலுத்திச் செயலாற்றுகின்றவர்கள் பெருவெற்றி பெற்றுவிடு கிறார்கள். உலகில் அரும்பெரும் செயலாற்றிய பெரியோர்கள் எல்லாம் அவ்விதம் செய்தவர்கள்தான்.

சிலர் புலனடக்கம், புலனடக்கம் என்று கூறிக்கொண்டு திருமணம் செய்யாது இருக்கின்றனர். புலனடக்கம் என்றால் தீய வழியில் செல்லாது அறிவு வழியில் அளவோடு சென்று அடக்கமாக இருப்பதைக் குறிக்கு மேயன்றித் திருமணம் முடிக்காது இருப்பது என்று பொருள்படாது. ஒவ்வோர் உறுப்பையும் ஒவ்வோர் தொழில் ஆற்றுவதற்காக படைத்திருக்கும் இறை வன் இன உறுப்பையும் அதற்குரிய தொழிலை ஆற்றுவதற்காகவே படைத் துள்ளான். அதனுடைய தொழில் இன்பம் நுகர்வதும் மக்கள் உற்பத்தி செய்வதுமாகும். இதை உணராத தம்முடைய வேட்கையைத் தணிப்பதற்கு மருந்துண்பதோ, மணம் முடிக்காதிருப்பதோ பெரிதும் தவறுடையது என்பதில் ஐயமில்லை. எனவே தவறான புலனடக்கத்தைக் கடிந்தும் தாம் அத்தவ றினைச் செய்யாததற்காக திருமூலர், "அஞ்சும் அடக்கில் அசேனமாம்" என்றும் மக்களுக்கு அறிவுறுத்துகின்றார்.

இல்லறம் என்பதே எல்லாவற்றிலும் மேலானது. அது இறைவனால் ஏற்படுத்தப்பட்ட இன்ப வாழ்வாகும். அந்த இன்ப வாழ்வு அமைவது ஆண், பெண் இருபாலாரினதும் கைகளிலேயே உள்ளது. காதலால் ஒருமித்து ஆதரவுப்பட்டதே இல்வாழ்க்கை. எனவே இளைஞர்களே! காதல் செய்வீர்! இன்பமாக வாழ்வதற்காக காதல் செய்வீர்!

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

**ஆயிரக்கணக்கில் மக்கள் அரோகரா கோஷம் எழுப்ப முருகன், வள்ளி, தெய்வானை சமேதரராக தேர் ஏறிவரும் காட்சியைப் பற்றி வர்ணிக்க வார்த்தைகள் போதாது. இளைஞர்கள் ஒருவருக்குப் பின் ஒருவராக நீண்ட வரிசையாக மக்களைக் குறுக்கறுத்து "அரோகரா அரோகரா" என்று கூறிக்கொண்டு செல்வதும், யுவதிகளை அண்மித்துவிட்டால் அரோகராவை சத்தமாகக் கூறிச் செல்வதும் திருவிழாக் கொண்டாட்டத்தில் சுவாரஷ்யங்கள். பட்டுச்சேலையும், நகையும் அணிந்து, பெண்கள் தேர்த் திருவிழாவுக்குப் பெருமை சேர்ப்பது திருவிழாவுக்குச் சிறப்பு.**

# நல்லூரான் தேரிலே நடந்தது

## சுவாரசியங்கள்!

**இம்** மாதம் நான்காம் திகதி யாழ்ப்பாணம், நல்லூரில் நடைபெற்ற தேர்த் திருவிழாவில் வழமைபோல் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது.

யாழ்ப்பாணத்தின் அத்தனை பகுதிகளில் இருந்தும் மக்கள் வந்திருந்தார்கள். வடத்தைப் பிடிக்கக் கிடைத்தவர்கள் புண்ணியவான்கள். தேர் இழுப்பது எப்போதும் சுகமான காரியம்தான். நல்லூரானின் தேர் வடத்தைத் தொடுவதே முடியாத காரியம்.

ஆயிரக்கணக்கில் மக்கள் அரோகரா கோஷம் எழுப்ப முருகன், வள்ளி, தெய்வானை சமேதரராக தேர் ஏறி வரும் காட்சியைப் பற்றி வர்ணிக்க வார்த்தைகள் போதாது.

ஆறுமுகம் கொண்டு அத்தனை திசையையும் பார்த்தபடி, தேரில் முருகன் உலா வருவதை தரிசித்து விடுவது அங்கு கூடியிருந்த ஒவ்வொரு அடியாரினதும் ஆவல்.

மேல்சட்டை இல்லாமல் நூற்றுக்கும் மேற்பட்ட ஆண்கள் வடம் பிடிக்க, தேருக்குப் பின்னால் அடியார்கள் அங்கப்பிரதட்டை செய்து தேரோடு உருண்டு வருவதும், பெண்கள் கற்பூரச் சட்டி ஏந்தியும், அடியெடுத்தும் வருவதும் கண்கொள்ளாக் காட்சியாகும்.

அடியார்கள் கூட்டம் கூட்டமாக பஜனை பாடிக் கொண்டும், முருகன் புகழ்பாடிக் கொண்டும் மெய்மறந்து செல்வது எல்லோர் மனதிலும் பரவசத்தை ஏற்படுத்தும்.

இளைஞர்கள் ஒருவருக்குப் பின் ஒருவராக நீண்ட வரிசையாக மக்களைக் குறுக்கறுத்து "அரோகரா அரோகரா" என்று கூறிக்கொண்டு செல்வதும், யுவதிகளை அண்மித்துவிட்டால் அரோகராவை சத்தமாகக் கூறிச் செல்வதும் திருவிழாக் கொண்டாட்டத்தில் சுவாரஷ்யங்கள்.

அதேபோல் குழாமாகச் சேர்ந்து கொள்ளும் யுவதிகள் அழகுசேர்த்து உலாவுவதும், ஓரக்கண் பார்வை வீசி திருவிழாவுக்கு அழகு சேர்ப்பது பேரழகு.

பட்டுச்சேலையும், நகையும் அணிந்து, பெண்கள் தேர்த் திருவிழாவுக்குப் பெருமை சேர்ப்பது திருவிழாவுக்குச் சிறப்பு.

முருகன் தேரேறி உலாவரும்போது, எதிர்பார்த்ததைப் போல் இலங்கை விமானப் படையின் உலங்கு வானூர்தி தாழப்பறந்து மலர்களைத் தூவிவிடுவதும், அந்த மலர்கள் தேர்மீதும், பக்தர்கள் மீதும் விழுவதும் கொள்ளை அழகு.

முன்பொரு காலத்தில் வான்படையின் வானூர்திகள் குண்டுகளை வீசியது, மலம் நிறைந்த கொள்கலன்களைப் போட்டது என்ற நிலைமை மாறி, இப்போது பூச்சொரிகிறது என்று திருவிழாவில் வயோதிபர் ஒருவர் கூறியதையும் கேட்கும்போது யுத்தமற்ற சூழலின் மாற்றத்தை எல்லோரையும் உணரச் செய்திருந்தது.

சென்ற ஆண்டைப் போல் இம்முறையும் திருட்டுச் சம்பவங்கள் அவ்வளவாக இடம்பெறவில்லை என்று பாதுகாப்புக் கடமையில் சிவில் உடையில் ஈடுபட்டிருந்த பொலிசார் தெரிவித்தனர்.

ஏற்கனவே கோவிலுக்கு வருபவர்கள் தங்க நகைகளை அணிந்து வர வேண்டாம் என்றும், திருடர்கள் கைவரிசையைக் காட்டிவிடுகின்ற ஆபத்து உள்ளது என்றும் பொலிசார் எச்சரிக்கைவிடுத்ததோடு, திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டவர்களின் புகைப்படங்களைப் பிரசுரித்து சுவரொட்டிகளையும் ஆலயச் சூழலில் ஒட்டியிருந்தனர்.

பொலிசாரின் எச்சரிக்கைச் செய்தி மக்களைச் சென்றடைந்துள்ளதையும் அவதானிக்க முடிந்தது.

பெரும்பான்மையான பெண்கள் வழமைபோல் ஆபரணங்களை அணிந்து வரவில்லை. தாலிக்கொடியைக் கழற்றி வைக்கமுடியாமல் கழுத்தில் தனித் தாலிக் கொடியுடன் வந்திருந்தார்கள். ஒன்றுக்கு மேற்பட்ட சங்கிலிகளை அணிந்துவந்திருந்த பெண்கள் சேலையால் கழுத்தை மூடிக்கொண்டு திரிந்த காட்சியைப் பார்த்தபோது தமக்குத் தாமே பெண்கள் தூக்குக் கயிறுபோட்டுக் கொண்டு இருப்பதுபோல் இருந்தது.

அதிகமான பெண்கள் கவரிங் ஆபரணங்களையே அணிந்திருந்தனர். அதிலும் இளம் பெண்கள் உடைக்கு ஏற்றவாறு கவரிங் ஆபரணங்களை அழகான டிசைன்களில் அணிந்திருந்தனர்.

எதிர்காலத்தில் தங்க நகைகளை விட கவரிங் ஆபரணங்களுக்கே பெண்கள் மத்தியில் அதிக கிராக்கி ஏற்படும் போல் எண்ணத் தோன்றுகிறது.

தேரில் இருக்கும் முருகப் பெருமானைத் தவிர கண்ணில் காணும் அத்தனைபேர் மீதும் சந்தேகப் பார்வைகளே படர்ந்தன.

ஒருவர் கூறினார், "முருகன் வருடத்தில் ஒருதடவை இப்பிடி பேசாமல் உலாவருவதையே இத்தனை ஆயிரம் பேர் கூடிக் கொண்டாடுகின்றோமே, ஒருவேளை முருகன் வாய்திறந்து பேசி மக்களின் குறைகளைக் கேட்பதாக இருந்தால் இன்னும் கூட்டம் முட்டிமோதுமே" என்றார்.

அருகில் இருந்தவர், "முருகன் எழுந்தருளி குறைகளைக் கேட்டால், ஓய்வு இருக்காது, சனம் இலட்சக் கணக்கில் வந்துநிற்கும், ஆனால், ஒரு தடவை, இரண்டு தடவை, மூன்று தடவை முருகன் சொல்வதைச் சனம் கேட்கும். பிறகு முருகன் பொய்சொல்லுகிறார் என்று சனம் போய்விடும்" என்று நினைக்கிறேன் என்றார்.

இப்படி முருகனைப் பற்றிப் பக்தர்கள் பேசிக்கொண்டிருக்கும் போது, தேர் உலா நிறைவுக்கு வந்து முருகனுக்கு பச்சை சாத்தி முருகனை கருவறை நோக்கிக் கொண்டு வரப்பட்ட போது ஆலய முன்றலில் திரண்டிருந்த பக்தர்கள் கூடி அரோகரா கோஷம் எழுப்பினர்.

அதிர்ச்சியோடு திரும்பிப் பார்த்த போது அரோகரா கோஷத்துடன் தலைக்கு மேலே உயர்ந்த கைகளில் அனேகமானவற்றில் புகைப்படக் கருவியும், ஐபேட்களும், கைபேசிகளுமாகவே உயர்ந்து காணப்பட்டன.

அந்தக் கரங்கள் முருகனைப் புகைப்படம் பிடிப்பதிலும், தம்மை அந்த ஆரவாரத்துடன் இணைத்து புகைப்படம் எடுத்துக்கொள்வதிலும் முழு ஆர்வமாகவும், அவசரமாகவும் செயற்பட்டன. முருகன் அரோகரா கோஷத்துடனும், புகைப்படக் கருவிகளின் மின்னொளிகளுடனும் தங்க ஆபரணங்கள் தகதகவென ஜொலிக்க ஆலயத்திற்குள் சென்றபோது, அங்கு கூடியிருந்த அடியவர்களின் முகங்கள் ஆனந்தப்பெருக்கில் கண்ணீர் வடித்தன.

அதேவேளை பல இலட்சங்களை முதலீடுசெய்தவர்த்தக நிலையங்களை அமைத்திருந்த திருவிழாக் கால வியாபாரிகள் போதிய இலாபமீட்ட முடியவில்லையே என்ற ஏக்கத்துடன் முருகப் பெருமானை நினைத்துப் பெருமூச்சுவிட்டனர்.



அலசுவது - மதியூகி

# தாமதிக்கும் சிரியா மீதான அமெரிக்க தாக்குதல்

**தொகுப்பு – வேணுகிருஷ்ணா**

## காங்கிரஸ் அவையில் அனுமதி கேட்கிறார் ஒபாமா

சிரியா மீதான இராணுவ நடவடிக்கைக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அந்நாட்டு காங்கிரஸ் அவையிடம் அனுமதிகோரியுள்ளார். எனினும் இந்த தாமதம் சிரிய ஜனாதிபதி பஷர் அல் அஸாத் படையை பலப்படுத்தும் என சிரிய எதிர்த்தரப்பினர் குற்றம் சாட்டியுள்ளனர். சிரிய எதிர்த்தரப்பான தேசிய கூட்டணியின் பேச்சாளர் நுவாஸ் சாபி, ஒபாமாவின் முடிவு அமெரிக்காவின் தோல்வியை காட்டுவதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

சிரிய விவகாரம் தொடர்பில் ஒபாமா ஆற்றிய உரையைத் தொடர்ந்து சிரிய தலைநகர் டமஸ்கஸின் எதிர்த்தரப்பினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகள்மீது அரச படை தொடர்ந்து ஷெல் தாக்குதல் நடத்தியுள்ளது. அண்மையில் நடத்தப்பட்ட இரசாயனத் தாக்குதல் குற்றச் சாட்டை அமெரிக்கா, சிரிய அரச படைமீது சுமத்தியபோதும் சிரியா அதனை மறுத்து வருகிறது.

கடந்த ஓகஸ்ட் 14ஆம் திகதி டமஸ்கஸ் புறநகர் பகுதியில் இடம்பெற்ற இந்த இரசாயன தாக்குதலில் 1,429 பேர் கொல்லப் பட்டதாக அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது. இந்த தாக்குதல் சிவப்பு எல்லையை தாண்டும் நடவடிக்கை என்றும் சிரியா மீதான அமெரிக்க தலையீட்டுக்கு வழிவகுப்பதாகவும் அமெரிக்க ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

எனினும் சிரியா மீதான நடவடிக்கை மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும் என்றும் தரைவழி படை நடவடிக்கை மேற்கொள்ளப்பட மாட்டாது என்றும் ஒபாமா அறிவித்தார். இதன்மூலம் சிரிய இராணுவ இலக்குகள்மீது குரூஸ் ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்த வாய்ப்பு உள்ளதாக அவதானிகள் கருதுகின்றனர். எனினும் சிரியா மீதான இராணுவ நடவடிக்கை குறித்து காங்கிரஸ் அவையின் அனுமதியை கோரி பிரேரணை ஒன்றை ஜனாதிபதி ஒபாமா சமர்ப்பித்துள்ளார்.

இதில் சிரியா இரசாயன ஆயுத தாக்குதல் நடத்துவதை தடுக்க படை நடவடிக்கை மேற்கொள்வது கட்டாயம் என ஜனாதிபதியின் பிரேரணையில் கோரப்பட்டுள்ளது. அமெரிக்க காங்கிரஸ் அவை செம்டெம்பர் 9ஆம் திகதியே கூடவிருந்தது. எனவே அன்றைய தினம் வரை இராணுவ தலையீடுகளுக்கு வாய்ப்பு இல்லை என நம்பப்படுகிறது. இந்த முடிவு சிரிய தலைநகர் டமஸ்கஸில் பெரும் ஆறுதலை ஏற்படுத்தியிருப்பதாக அங்கிருக்கும் பி.பி.சி. செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார். முன்னர் மிக விரைவில் அமெரிக்க தாக்குதலுக்கு வாய்ப்பு இருந்ததால் நகரெங்கும் அச்சம் பரவி இருந்ததாக அந்த செய்தியாளர் கூறியுள்ளார்.

## இராணுவ உபகரணங்களை நகர்த்துவதற்கு அவகாசத்தை ஏற்படுத்தியிருக்கிறது

அதேபோன்று இந்த தாதமம் சிரிய அரச படைக்கு தமது தீர்க்கமான இராணுவ உபகரணங்களை நகர்த்துவதற்கு அவகாசத்தை ஏற்படுத்தியிருப்பதாக அவதானிகள் நம்புகின்றனர். அதேபோன்று அமெரிக்காவின் முடிவை அடுத்து அரசுக்கு எதிராக போராடும் கிளர்ச்சியாளர்கள் மீதான தாக்குதல்களையும் அரச படை தீவிரப்படுத்தியிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் குறிப்பிடுகின்றன. மறுபுறத்தில் ஒபாமாவின் முடிவுக்கு சிரிய எதிர்த்தரப்பினர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

"எமது பயமெல்லாம் குறைவான நடவடிக்கையால் அரச படையின் பலம் அதிகரித்து மேலும் தீவிரமான தாக்குதல்களுக்கு வழி வகுக்குமோ என்பதுதான்" என்று எதிர்த்தரப்பு கூட்டணியின் பேச்சாளர் சாபி எச்சரித்தார். சிரியா மீதான அமெரிக்க நடவடிக்கை தாமதப்படுத்தப்பட்டது குறித்து சிரியா தரப்பில் உத்தியோக பூர்வமாக எந்த அறிவிப்பும் வெளியிடப்படாத போது சிரிய துணை பிரதமர் கத்ரி ஜமீல் சி.பி.எஸ். தொலைக்காட்சிக்கு கூறும்போது, "அமெரிக்கா தனது முடிவை ஒத்திவைத்தாலோ அல்லது அதிலிருந்து பின்வாங்கினாலோ அனைத்து தரப்பினரதும் கேலிக்கே உள்ளாகும்" என்றார்.

கடந்த சனிக்கிழமை வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிக்கையில், சிரிய தலையீடு குறித்த விவாதத்தை மேற்கொள்வது முக்கியமானது என ஜனாதிபதி ஒபாமா கூறியுள்ளார். "எமது பலம் இராணுவத்தில் மாத்திரம் தங்கியில்லை. மக்களுக்கான மக்களின் அரசு என்றவகையில் நாம் உதாரணமான அரசாக செயற்படவேண்டும். அதனால்தான் நான், அமெரிக்க மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் காங்கிரஸ் அவையிடம் அனுமதியை கோரியிருக்கிறேன்" என்று ஒபாமா வலியுறுத்தியுள்ளார்.

இந்த அறிவிப்பை தொடர்ந்து ஒபாமா, சிரிய தலையீடு குறித்த பிரேரணையை மக்கள் பிரதிநிதிகள் அவையின் சபாநாயகர் மற்றும் செனட் சபையின் தலைவருக்கு அனுப்பிவைத்தார். இந்த பிரேரணையில், சிரிய இராணுவத்தின் இரசாயன ஆயுதப் பயன்பாட்டு திறனை தடுக்க, சீர்குலைக்க அமெரிக்க இராணுவ நடவடிக்கை ஒன்றுக்கு அனுமதி கோரப்பட்டுள்ளது. எனினும் இந்த பிரேரணை மீதான வாக்கெடுப்பு செப்டெம்பர் 9ஆம் திகதியே இடம்பெற வாய்ப்பு இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. இந்தப் பிரேரணைக்கு எதிராக வாக்குப்பதிவானால் அடுத்து என்ன நடவடிக்கை என்பது குறித்து தெளிவில்லாமல் உள்ளதாக அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## நடவடிக்கை மேற்கொள்ள ஜனாதிபதிக்கு காங்கிரஸ் அவையின் அனுமதி தேவையில்லை

எனினும் சட்ட ரீதியில் இராணுவம் நடவடிக்கை மேற்கொள்ள ஜனாதிபதிக்கு காங்கிரஸ் அவையின் அனுமதி தேவையில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 1973 யுத்த சக்தி தொடர்பான சட்டத்தில் ஜனாதிபதிக்கு இராணுவ நடவடிக்கை எடுக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுதொடர்பில் 48 மணிநேரத்திற்குள் காங்கிரஸ் அவையை அறிவுறுத்தினால்போதும் என கூறப்பட்டுள்ளது. சிரியா மீதான இராணுவ நடவடிக்கைக்கு பிரிட்டன் பாராளுமன்றம் எதிர்ப்பு வெளியிட்ட நிலையிலேயே ஒபாமா தனது முடிவு குறித்து காங்கிரஸ் அவையின் முடிவை கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஐ. நா. ஆதாரங்கள் சாதகமாக இருந்தாலும்கூட சிரியா மீதான இராணுவ தலையீட்டை பிரிட்டன் பாராளுமன்றம் புறக்கணித்துள்ளது.

இந்நிலையில் சிரிய தலையீட்டுக்கு அமெரிக்காவுக்கு ஆதரவளிக்கும் மற்றொரு நாடான பிரான்ஸசிம் இன்னும் முடிவு எடுக்கவில்லை. பிரான்ஸ் பாராளுமன்றம் அடுத்த வாரம்கூடவுள்ளது. எனவே இது தொடர்பில் பிரான்ஸ் பாராளுமன்றம் மற்றும் அமெரிக்க காங்கிரஸ் அவையின் விவாதத்திற்குப் பின்னர் பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்கொய்ஸ் ஹொல்லன்டே இறுதி முடிவு எடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு முன்னாள் பாராளுமன்றத்தின் ஒப்புதல் பெறவேண்டிய அவசியம் அமெரிக்க ஜனாதிபதி போன்று பிரான்ஸ் ஜனாதிபதிக்கும் தேவையில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவரான அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா ஆதாரத்தை காட்டவேண்டும்

இதனிடையே சிரிய அரச படை இரசாயன தாக்குதல் நடத்தியதற்கான ஆதாரத்தை காட்ட வேண்டும் என அமெரிக்காவுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் சவால்விடுத்துள்ளார். தங்களது குற்றச்சாட்டை நிரூபிக்கும்விதமான ஆதாரங்கள் அமெரிக்காவிடம் இருந்தால் அதனை அவர்கள் ஐ.நா. பாதுகாப்பு சபையின்முன்னர் சமர்ப்பிக்கவேண்டும் என்று புடின் தெரிவித்தார்.

"ஆனால் அது இரகசியம். அதனை யாரிடமும் காண்பிக்கமாட்டோம் என்றுசொன்னால் அது முறையல்ல. ஆதாரம் இருந்தால் காட்டவேண்டும், காட்டவில்லை என்றால் ஆதாரம் இல்லை என்றுதான் பொருள்" சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவரான அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா சிரியா மீது நடவடிக்கை எடுப்பதற்கு முன்பாக அதனால் அந்த நாட்டில் பாதிக்கப்படக் கூடிய மக்களின் கஷ்டங்களை சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று புடின் கேட்டுக்கொண்டார்.

சிரியாவின் முக்கிய கூட்டாளி நாடான ரஷ்யாவும் சீனாவும் சிரியாவுக்கு எதிராக ஐ.நா. பாதுகாப்பு சபை தீர்மானங்களை இயற்ற முயன்ற இரண்டு சந்தர்ப்பங்களிலும் அதனை எதிர்த்து வாக்களித்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. சிரிய இரசாயனத் தாக்குதல் குறித்து விசாரணை நடத்திய ஐ.நா. நிபுணர் குழு கடந்த சிரியாவில் இருந்து வெளியேறியது. இந்த ஆய்வு முடிவுகளைப் சிலவாரங்கள் அளவு எடுத்துக்கொள்ளும் என ஐ. நா. குறிப்பிட்டுள்ளது. ஆனால் ஐ.நா. முடிவுவரை தாம் காத்திருக்கப் போவதில்லை என அமெரிக்கா ஏற்கனவே குறிப்பிட்டுள்ளது. சிரியாமீது மேற்கின் எந்த தாக்குதலில் இருந்தும் தமது நாடு பாதுகாத்துக் கொள்ளும் என ஜனாதிபதி பஷர் அல் அஸாத் உறுதியளித்துள்ளார்

## ஐக்கிய அமெரிக்க சட்டமன்றம்

ஐக்கிய அமெரிக்காவின் சட்டமன்றம். சட்டமன்றத்தின் இருபிரிவுகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் குடியரசுத் தலைவரின் நாட்டின் நிலையை கூறும் நாட்டுரையைக் கேட்கிறார்கள்.

ஐக்கிய அமெரிக்காவின் சட்டமன்றம் அல்லது ஐக்கிய அமெரிக்கக் காங்கிரஸ் (United States Congress) என்பது மேலவை (Senate) மற்றும் கீழவை (House of representatives) என்னும் இரு பிரிவுகள்கொண்ட அமைப்பில் இயங்கும் உறுப்பினர்களைக் கொண்டதாகும். இந்த இருவகை உறுப்பினர்களையும் கொண்ட கூட்டம் காங்கிரஸ் எனப்படும். இதுவே ஐக்கிய அமெரிக்காவின் மத்திய அரசின் சட்டமன்றம். இது இருவகைச் சட்டமன்ற முறையைக் கொண்டதாகும்.

மக்களின் சார்பாளர்களைக் (பிரதிநிதிகளைக்) கொண்ட கீழவையில் 435 வாக்களிக்கும் உரிமைபெற்ற உறுப்பினர்களும், சில வாக்களிக்கும் உரிமைபெறாத பேராளர்களும் கொண்டது. இந்த வாக்களிக்கும் உரிமை பெறாத பேராளர்கள் அமெரிக்கன் சமோவா, கொலம்பியா மாவட்டம், குவாம், அமெரிக்க கன்னித் தீவுகள், புவேர்ட்டோ ரிக்கோ, வட மரியானா தீவுகள் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள். கீழவை உறுப்பினர்கள் மக்கள் தொகையின் அடிப்படையில் தொகுதி வாரியாகப் பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு மக்கள் சார்பாளரைத் தேர்ந்தெடுக்கின்றனர். ஒவ்வொரு கீழவை உறுப்பினரின் பதவிக் காலமும் ஈராண்டுகள் ஆகும். ஆனால் ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கப்படலாம். செனட் என்னும் மேலவையில் ஒரு மாநிலத்திற்கு இரு மேலவை உறுப்பினர்களாக (செனட்டர்களாக) மொத்தம் 100 உறுப்பினர்கள் இருப்பர். ஒவ்வொரு மேலவை உறுப்பினரும் ஆறு ஆண்டுகள் பதவியில் இருப்பர். ஆனால் இரண்டாண்டுக்கு ஒரு முறை, மேலவையில் மூன்றில் ஒரு பகுதி உறுப்பினர்கள் மாறும்விதமாக தேர்தல்கள் நடக்கும். மேலவை, கீழவை ஆகிய இரண்டு அவைகளிலும் உள்ள உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

## அதிபர் முடிவுக்கு எதிரான வாக்களிப்பு: பேரழிவை உண்டாக்கும் என எச்சரிக்கை

சிரியா மீதான இராணுவத் தாக்குதலுக்கான நாடாளுமன்ற மசோதாவுக்கு எதிராக வாக்களிப்பது பேரழிவை ஏற்படுத்தக்கூடியதாக அமையும் என அமெரிக்க செனட் உறுப்பினர் ஜோன் மெக்கெய்ன் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் அதிபர் ஒபாமாவுடன் கலந்தாலோசித்த பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒரு பிரச்சினையில் அதிபர் தீர்க்கமான முடிவெடுத்த பிறகு, நாடாளுமன்றம் அதை நிராகரித்தால் அது கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என எச்சரித்தார். மேலும் அசாத்தின் இரசாயன ஆயுத தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் அளிவிலேயே அமெரிக்காவின் தாக்குதல் அமையும் என்பதை மசோதா உறுதிசெய்யும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே சிரியாமீது தனித்து தாக்குதல் நடத்தமாட்டோம் என பிரான்ஸ் தெரிவித்துள்ளது. மேலும் அரசு படைகளே இரசாயன தாக்குதலில் ஈடுபட்டதாகவும் உறுதியாக தெரிவித்துள்ளது. இந்நிலையில் சிரியாமீதான தாக்குதல் பிராந்திய அளவிலான போரை உருவாக்கும் எனத் தெரிவித்துள்ள சிரிய அதிபர் அசாத், இரசாயன ஆயுத பயன்பாட்டுக்கான ஆதாரங்களை வழங்குமாறும் பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவுக்கு சவால்விடுத்துள்ளார்.

சிரியா நாட்டின்மீது, மூன்று நாட்கள், தீவிர தாக்குதலை நடத்த, அமெரிக்க இராணுவ தலைமையகமான, 'பென்டகன்' திட்டமிட்டுள்ளது.

சிரியா நாட்டில், அதிபர் பஷர் -அல்- அசாத் ஆட்சி நடக்கிறது. பல ஆண்டுகளாக ஆட்சியில் உள்ள அவரை, பதவிவிலகும்படி, எதிர்க்கட்சியினர், இரண்டு ஆண்டுகளாக போராடி வருகின்றனர்.

அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கிளர்ச்சியாளர்கள், இராணுவம்மூலம் ஒடுக்கப்பட்டுவருகின்றனர். அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளும், அசாத்தை பதவி விலகும்படி வலியுறுத்தின. ஆனால், அசாத் மறுத்துவிட்டதால், கிளர்ச்சியாளர்களுக்கு, இந்த நாடுகள் ஆயுத விநியோகம்செய்து வருகின்றன. இதனால், சிரியாவில் தொடர்ந்து சண்டை நடக்கிறது. இரண்டு ஆண்டுகளாக தொடரும் இந்த சண்டையில், 1 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். 22 இலட்சம் பேர், அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளனர்.

**இரசாயன ஆயுதம்:** சிரியா நாட்டுக்கு ரஷ்யா, சீனா, ஈரான், வடகொரியா போன்ற நாடுகள், ஆதரவளித்துவருகின்றன. சிரியா இராணுவத்துக்கு, ரஷ்யா, நவீன ஆயுதங்களை விநியோகம் செய்துவருகின்றது. கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக, சிரியா இராணுவம், கடந்த, 21ம் திகதி, இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தியதில், 1,300 பேர் கொல்லப்பட்டனர் என நம்பப்படுகிறது. இரசாயன குண்டுவீச்சில், நச்சுப் புகை பரவி, 1,300 பேர் கொல்லப்பட்டதாக கூறும் இடத்தை, ஐ.நா., பார்வையாளர்கள் ஆய்வுசெய்து, தடயங்களை சேகரித்துள்ளனர். இன்னும் இது தொடர்பான அறிக்கை வெளியிடப்படவில்லை. சர்வதேச விதிகளை மீறி, இரசாயன ஆயுதங்களை பயன்படுத்திய சிரியாமீது, இராணுவத் தாக்குதலை நடத்த, அமெரிக்கா திட்டமிட்டு உள்ளது. "சிரியா மீது நடத்தப்படும் தாக்குதல், 60 நாட்களுக்குள் முடிக்கப்படவேண்டும். அமெரிக்க வீரர்களின் காலடி அந்நாட்டில்படக்கூடாது" என, அமெரிக்க செனட் குழு தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. ரஷ்யாவில் நடந்த, 'ஜி 20' உச்சி மாநாட்டில், "சிரியா மீதான தாக்குதல் தவிர்க்க முடியாது," என, ஒபாமா திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

**72 மணி நேர தாக்குதல்:** இதனால், சிரியா மீதான போர் உறுதியாகிவிட்டது. இதையடுத்து, தாக்குதலுக்குரிய திட்டங்களை, அமெரிக்கத் தலைமையகமான பென்டகன் தயாரித்து வருகிறது.

இதுகுறித்து, அமெரிக்க இராணுவ அதிகாரிகள் கூறியதாவது: சிரியாமீதான யுத்தம் துவங்கியதும், மூன்று நாட்களுக்கு தீவிர தாக்குதல் நடத்தப்படும். முதல் கட்டமாக விமானம்மூலம் குண்டுகள் போடப்படும். இரண்டாவது கட்டமாக, மத்திய தரைக்கடல் பகுதியில் முகாமிட்டுள்ள ஐந்து, அமெரிக்க போர்க்கப்பல்கள் மூலம், ஏவுகணை தாக்குதல்கள் நடத்தப்படும். சிரியாவில், 50 இடங்களில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளோம். தேவைக்கேற்ப இந்த இலக்கு கூடவோ, குறையவோ செய்யலாம். 72 மணிநேர அதிரடி தாக்குதலில், சிரியா படைகள் ஒடுக்கப்படும். எனவே, விமானப் படைகளை குறைந்த அளவில் பயன்படுத்த ஆலோசித்துவருகிறோம். இவ்வாறு இராணுவ அதிகாரிகள் கூறினர்.

## சிரியா மீது கை வைக்காதே!

சிரியா மீது தாக்குதலைத் தொடுக்க அமெரிக்க திட்டமிட்டு வருகிறது. அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஒப்புதல் கிடைத்தபின்னர், சிரியா மீதான இராணுவத் தாக்குதல்கள் தொடங்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அறிவித்திருக்கிறார். இவ்வாறு தாக்குதல் தொடுக்கும் பட்சத்தில், அமெரிக்க - நேட்டோ படைகள் சமீப ஆண்டுகளில் அரபு நாடு ஒன்றிற்கு எதிராக மேற்கொள்ளும் மூன்றாவது ஆக்கிரமிப்பு நடவடிக்கையாக இருந்திடும்.

2003ல், ஜோர்ஜ் புஷ் ஈராக்கின்மீது படையெடுத்தார். அப்போது, சதாம் உசைன் பேரழிவு ஆயுதங்களை வைத்திருக்கிறார் என்ற தவறான முறையில் போலிக் காரணம் ஒன்றைக்கூறி இவ்வாறு படையெடுத்தார். அடுத்து, ஒபாமா 2011இல் லிபியாவிற்கு எதிராக வான்வழி வழியாக ஏவுகணைத் தாக்குதல்களைத் தொடுத்தார். அப்போது அவர் பெங்காசியில் இரத்த ஆறு ஓடுவதைத் தவிர்க்கும் நோக்கத்துடன் தாக்குதல் மேற்கொள்ளப்படுவதாகக் கூறினார். இப்போது சிரியா அமெரிக்காவின் குறியாகும். இதற்கு அவர்கள் கூறும் காரணம்: சிரியா இராணுவம், அங்கே கலகம் செய்திடும் படையினருக்கு எதிராக 'சரின்' எனப்படும் நரம்புகளைப் பாதிக்கும் இரசாயன ஆயுதத்தைப் பயன்படுத்துகிறதாம்.

"அமெரிக்காவும் அதன் நேட்டோ கூட்டாளிகளான பிரிட்டனும், பிரான்சும் 'சரின்' வாயுவை ஐ.நா. ஆய்வாளர்கள் புலனாய்வுகளை மேற்கொள்வதற்காக சம்பவ இடங்களுக்குச் செல்வதற்கு முன்பேயே சிரியா அரசாங்கம் பயன்படுத்தியது" என்று முடிவுசெய்துள்ளன. இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டால் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வோம் என்று தாங்கள் கூறிய 'எச்சரிக்கை'யை சிரியா அரசாங்கம் மீறிவிட்டது என்பதே ஒபாமாவின் கூற்றாகும். அமெரிக்காவின் 'அறநெறி' வேடம் உண்மையிலேயே அதிசயமான ஒன்றாகும். வியட்நாமில் சண்டை நடைபெற்றபோது, அமெரிக்க படைகள் 'ஏஜெண்ட் ஒரேஞ்சு' என்னும் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி, சுற்றுச்சூழலைப் பேரழிவுக்கு உள்ளாக்கின, பிறக்கும் குழந்தைகள் பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் ஊனத்துடன் பிறப்பதற்கும் காரணமாய் அமைந்தன.

ஈராக்கில், சமீபத்தில்கூட, அமெரிக்கப் படையினர் செறிவுகுறைந்த யுரேனியத்தையும், வெள்ளை பொஸ்பரஸ் குண்டுகளையும் பயன்படுத்தி மக்களுக்கு மிகவும் கொடூரமான காயங்களை ஏற்படுத்தினார்கள். இப்போது இதே ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள்தான் சிரியா இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துவதாகவும், எனவே அதனைத் தாக்கப் போகிறோம் என்றும் தங்களுடைய சட்ட விரோத ஆக்கிரமிப்புக்குக் காரணங்களாகக் கூறிக்கொண்டிருக்கிறார்கள். கற்பனையான ஒன்றை அல்லது அரை குறை உண்மையைத் தங்கள் ஆக்கிரமிப்புக்கான காரணமாக, ஏகாதிபத்தியம் காலங்காலமாகக் கூறிவரும் உத்தியையே ஒபாமாவும் இப்போது கூறிக்கொண்டிருக்கிறார்.

## சிரியாவில் இயங்கும் பல்வகைக் கலகக் கும்பல்கள்

**சவுதி அரேபியா, கத்தார் மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் உதவி**


சிரியாவில் இயங்கும் பல்வகைக் கலகக் கும்பல்கள் தற்போதைய பஷர் அல்-அசாத் அரசாங்கத்திற்கு எதிராக சண்டை புரிந்து கொண்டிருக்கின்றன. சவுதி அரேபியா, கத்தார் மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் இக்கலகக் கும்பல்களுக்கு நிதி உதவி, ஆயுத உதவி மற்றும் அனைத்துவிதமான உதவிகளையும் செய்துவருகின்றன. ஜபாட் அல் நஸ்ரா மற்றும் சலா.்.பிஸ்ட்ஸ் போன்ற தீவிர இஸ்லாமியக் குழுக்கள் மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கு ஆதரவான குழுக்கள் பல இவற்றில் அடங்கும். இவ்வாறு கலகம் புரிபவர்களில் சிலருக்கு அமெரிக்க உளவு ஸ்தாபனமான சி.ஐ.ஏ. ஆயுதங்களை வழங்கியிருப்பதோடு பயிற்சியும் அளித்துவருகிறது.

# ஒலியை நீக்கும் வழி...

விண்டோஸ் எக்ஸ்பிக்குப் பின்னர் மக்கள் பரவலாக ஏற்றுக் கொண்டு பயன்படுத்தும் ஆப்பரேட்டிங் சிஸ்டமாக, விண்டோஸ் 7 மாறி வருகிறது.

இருப்பினும் சில விஷயங்கள் பல பயனாளர்களுக்குப் பிடிக்கவில்லை. அதில் ஒன்று இதன் தொடக்கத்தில் ஒலிக்கும் ட்யூனாகும். ஒப்பரேட்டிங் சிஸ்டம் இயங்கத் தொடங்குகையில், ஒரு வித சிக்னேச்சர் ட்யூன் என்று சொல்லப்படும் தொடக்க ஒலியைக் கொண்டிருப்பது வழக்கமாகும்.

விண்டோஸ் 7 சிஸ்டத்திற்கு, விஸ்டாவின் தொடக்க ஒலியே தரப்பட்டுள்ளது. முதலில் இதனை மக்கள் விரும்பினாலும், பின்னர் இந்த ஒலியானது அவ்வளவாக வரவேற்கப்படவில்லை. எனவே இதனை நிறுத்த முடியுமா எனப் பலரும் அதற்கான வழியைத் தேடிவருகின்றனர். அவர்களுக்காக கீழே வழிதரப்பட்டுள்ளது




தொழில்நுட்பம்

# Password அமைப்பது எப்படி?





நம் பாஸ்வேர்ட் சரியாக இல்லாமல், அடுத்தவர் எளிதாக அறிந்துகொள்ளும் நிலையில் இருந்தால், நம் நிலை மிக மோசமாக மாறிவிடும். அதனால்தான் கம்பியூட்டர் பாதுகாப்பு குறித்து பேசுபவர்களெல்லாம், வலிமையான பாஸ்வேர்ட் அமைக்கவேண்டும் என எச்சரிக்கைவிடுகிறார்கள். மிக ஸ்ட்ரோங்கான பாஸ்வேர்ட் அமைக்கும் சில வழிகளை இங்கு காணலாம்.

1. தங்கள் நிறுவனத்திற்கு மிகக் கட்டுக்கோப்பான தகவல் தொழில் நுட்ப கட்டமைப்பை கம்பியூட்டரில் அமைப்பவர்கள், இவற்றிற்கான பாஸ்வேர்ட்கள் அமைக்க, அதற்கென்று பாஸ்வேர்ட் அமைக்கும் புரோகிராம்களை நிறுவிக்கொள்ளலாம். இவை ரேண்டமைஸ்டு பாஸ்வேர்ட் என்று சொல்லப்படும், யாரும் கணிக்க இயலாத பாஸ்வேர்ட்களை அமைத்து இயக்குகின்றன. மேலும் குறிப்பிட்ட கால இடைவெளியில் அவற்றை மாற்றவும் செய்கின்றன. எனவே இத் தகைய நிறுவனங்கள், கட்டணம் செலுத்தி அத்தகைய பாஸ்வேர்ட் புரோகிராம்களை வாங்குவதுதான் நல்லது.

2. பாஸ்வேர்டில் எழுத்து, எண் மற்றும் சிறப்பு குறியீடுகளை அமைக்கவும். எழுத்துக்களைக் கூட பெரிய மற்றும் சிறிய எழுத்துக்களைக் கொண்டு அமைக்கலாம். எண்கள் தொடர்ச்சியாக இல்லாமல் இடை இடையே சிறப்புக் குறி யீடுகளை அமைக்கலாம்.

3. பாஸ்வேர்ட்களை நம் நினைவில் நிறுத்திக் கொள்ளும்வகையில் எளிதாக அமைப்பதனைக் கைவிட வேண்டும். அதற்குப் பதிலாக, நினைவில் நிற்கக்கூடிய பொருளற்ற சொற்தொடர்களை அமைக்கலாம். dubidubi என்பதெல்லாம் அத்தகைய சொல் தொடர்களே. இதனை d*uBi(dU(bi என்றபடி இன்னும் நீளமாக அமைக்கலாம்.

4. பாஸ்வேர்ட்களை குறிப் பிட்ட காலத்தில் மாற்றிக் கொண்டே இருக்கவேண்டும். இன்றைய கம்பியூட்டர் பயன்பாட்டில், ஈமெயில் புரோகிராம்கள், இன்டர்நெட் பேங்கிங் சேவை, சோஷியல் நெட்வோர்க் தொடர்பு, நிறுவன வேலை இயக்கம், பொது கம்பியூட்டர்களில் வேலை எனப் பலவித இடங்களில் பாஸ்வேர்ட் பயன்படுத்த வேண்டியுள்ளது. இவற்றை நினைவில் வைத்து அவ்வப்போது மாற்றுவது சற்று கடினமே.



# கைமாறுகிறது நொக்கியா

உலகின் முன்னணி கைபேசி தயாரிப்பு நிறுவனமான நொக்கியாவை மைக்ரோ சொப்ட் நிறுவனம் வாங்கவுள்ளது. மிகவேகமாக மாறிவரும் தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு நிறுவனங்கள் போட்டிப்போட தொடங்கி விட்டதால், சாம்சேங், சொனி, ப்பிள் போன்றன நொக்கியாவின் இடத்தை ஆக்கிரமிக்க ஆரம்பித்துவிட்டது. இந்நிலையில் நெருக்கடியான சூழலில் நொக்கியாவை வாங்க மைக்ரோசொப்ட் முடிவு செய்துள்ளது. அதாவது 7.17 பில்லியன் டொலர்களுக்கு நொக்கியாவை வாங்குகிறது. மேலும் நொக்கியா நிறுவனத்தின் தலைமை செயல் இயக்குனரான ஸ்டீபன் எலோப் மீண்டும் மைக்ரோசொப்டிலேயே இணைவார் என்றும் தெரிகிறது.

இவர் மைக்ரோசொப்டில் இருந்துதான் நொக்கியாவுக்குச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. மைக்ரோசொப்ட்டின் இப்போதைய தலைவரான போல்மர் விரைவில் பதவி விலகவுள்ள நிலையில், ஸ்டீபன் எலோப் மைக்ரோசொப்ட்டின் தலைவராகவும் வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

# ஆயுளை கணிப்பிடும் கருவி!

மனிதர்களின் வாழ்நாள் எப்போது முடியும் என்பதை கணக்கிட்டு சொல்லும் லேசர் கருவியை பிரிட்டன் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இதுகுறித்து, லொன்காஸ்டர் பல்கலை, இயற்பியல் பேராசிரியர்கள், அநேடா ஸ்டிபனோஸ்கா மற்றும் பீட்டர் மெக்கிளின்டாக் ஆகியோர் தெரிவித்ததாவது,

கைக்கடிகாரம் போன்று வடிவமைக்கப்பட்டுள்ள லேசர் கருவிமூலம் நாடித்துடிப்பு கணக்கிடப்படும். இதன் மூலம் உட்செலுத்தப்படும், லேசர் கதிர்கள் சீறிய நரம்புகளில் ஊடுருவிச் சென்று எண்டோதிலியல் செல்களை பகுப்பாய்வு செய்கின்றன. இந்த செல் பகுப்பாய்வின்மூலம், நரம்புகளில் ஏற்படும் மாற்றங்கள் தெளிவாக கணக்கிடப்படுகின்றன. இந்த மாற்றங்களின் மூலம், மனித செல்களின் அழிவுக்காலம் மற்றும் மனித உடலில் ஏற்படும், புற்றுநோய் போன்ற அபாயகரமான நோய்களையும் எளிதில் கண்டறியலாம்.

மனித செல்களின் ஆயுள் காலம் மற்றும் அதில் ஏற்படும் பாதிப்புகள் பற்றி எளிதில் அறிய முடிவதன்மூலம், மனிதன் இன்னும் எவ்வளவு காலம் உயிர் வாழ்வான் எனத் துல்லியமாக கணக்கிட முடியும். எளிய முறையில் கையாளக் கூடிய இந்த கருவியை அடுத்த மூன்று ஆண்டுகளில், உலகின் அனைத்து நாடு-களைச் சேர்ந்த மருத்துவர்களும் பயன்படுத்துவர் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு
தினமுரசு
நாளிதழ்
ரூ.10/= மட்டுமே
இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!




இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

# அப்பாவும் மகனும்



ஒரு இளைஞன் தனது அப்பாவிடம் ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கித் தரும்படி கோட்டான். அப்பா சொன்னார்; வாங்கித் தருவதில் பிரச்சினை இல்லை. முதலில் நீ உன்னை மாற்றிக் கொள்ள வேண்டும்.

உனது வேலைகளை உடனடியாக செய்து முடிக்கப் பழகவேண்டும். அவற்றை தள்ளிப் போடக்கூடாது. உடைகளை நேர்த்தியாக உடுக்கவேண்டும். உனது நீண்ட தலைமுடியை வெட்டி நல்ல இளைஞனாக தோற்றமளிக்க வேண்டும் என்றார் தந்தை. மகன் அடுத்தநாளே அவனது வேலைகளை எல்லாம் முடித்தான். நல்ல உடைகளை அணிந்தான். தந்தை மகிழ்ச்சியடைந்தார். ஆனாலும் "தலைமுடியை ஏன் வெட்டவில்லை" என்று மகனிடம் கேட்டார்.

அவன் கூறினான்; "அப்பா அது பற்றி யோசித்தேன். தலைமுடி வளர்ந்திருப்பதில் என்ன பிரச்சினை? யேசுநாதர்கூட நீண்ட தலைமுடி தானே வைத்திருக்கிறார்" என்றார் தந்தை கூறினார்.

உண்மைதான் மகனே! யேசுநாதர் நீண்ட தலைமுடி தான் வைத்திருக்கின்றார். ஆனாலும் அவர் எங்கு போனாலும் நடந்துதான் போவார் என்றார் தந்தை.

**கொ.சரோன்**
**தரம் - 2**
**மு/அளம்பில்,றோ.க.ம.வி**

## வாரம் ஒரு திருக்குறள்



**அவை அறிதல்**

**கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்**
**சொல்தெரிதல் வல்லா ரகத்து.**

குற்றமறச் சொற்களை ஆராய்வதில் வல்ல அறிஞரிடத்தில், பல நூல்களையும் கற்றறிந்தவரின் கல்வியானது நன்றாக விளங்கித் தோன்றும்.

குறள்:717

## குட்டீஸின் கைவண்ணம்



C.அனிசனா
தரம் - 07
காரைநகர்.

# புதிர்



**கேள்வி:** ஒரு ஆடு, புலி, புல்லுக்கட்டு மூன்றும் ஆற்றின் ஒரு கரையில் இருக்க மூன்றையும் ஆற்றைக் கடந்து ஒருவன் எடுத்துவரவேண்டும்.

அதுவும் ஒவ்வொன்றாகத்தான் எடுத்து வரவேண்டும். புலியை முதலில் எடுத்துச்சென்றால் ஆடு புல்லைத் தின்றுவிடும். புல்லுக்கட்டை முதலில் எடுத்துப்போனால் புலி ஆட்டைக் கொன்றுவிடும்.

இப்படி நடக்காமல் மூன்றையும் பத்திரமாய்க் கரை சேர்க்கவேண்டும் என்றால் எப்படிக் கொண்டு போகவேண்டும்?

**விடை:** முதலில் ஆட்டை அக்கரைக்கு எடுத்துச் செல்லவேண்டும். பிறகு தனியாகத் திரும்பிவர வேண்டும். பிறகு புலியைத் தூக்கிச் செல்லவேண்டும். அங்கிருக்கும் ஆட்டை எடுத்துக்கொண்டு இக்கரைக்கு வரவேண்டும். (அக்கரையிலேயே விட்டு விட்டால் புலி ஆட்டைத் தின்றுவிடும்). ஆட்டை இக்கரையில் விட்டுவிட்டு புல்லுக் கட்டை அக்கரைக்குக் கொண்டு செல்லவேண்டும். பின்பு தனியாகத் திரும்பி இக்கரைக்கு வரவேண்டும். அடுத்தது, ஆட்டை அக்கரைக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

இன்னொரு வழி: முதலில் ஆட்டை அக்கரைக்கு எடுத்துச் செல்லவேண்டும். தனியாக இக்கரைக்கு வரவேண்டும். புல்லுக்கட்டை தூக்கிச் சென்று அக்கரையில் வைத்துவிட்டு ஆட்டுடன் இக்கரை வரவேண்டும். ஆட்டை இக்கரையில் விட்டுவிட்டு புலியை அக்கரைக்குக் கொண்டு செல்லவேண்டும். பிறகு தனியாகத் திரும்பிவந்து ஆட்டைக் கொண்டு செல்லவேண்டும்.

# முதல் முதலாக....

01. ஜனவரி மாதம் முதல் திகதியை வருட ஆரம்பமாகக் கொள்வது 1752ஆம் ஆண்டிலிருந்துதான் வழக்கத்திற்கு வந்தது.

02. சோதனைக் குழாயின்மூலம் குழந்தையைப் பெற்ற முதல் தாய் லண்டனைச் சேர்ந்த லெஸ்லி ப்ரௌன்.

03. இந்தியாவில் மே தினம் முதன் முதலாக 1927இல் மும்பாயில் கொண்டாடப்பட்டது.

04. இன்று தொடர்கதைகளின் முடிவில் 'முற்றும்', 'முற்றிற்று' என்று சொற்களை எழுதுகிறோமே! இதை முதன்முதலில் எழுதி வழிகாட்டியவர் யார் தெரியுமா? இளங்கோவடிகள். சிலப்பதிகாரத்தின் ஒவ்வொரு காண்டத்தின் முடிவிலும், நூலின் முடிவிலும் அவர் இச்சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.


05. 1840இல் ரஷ்ய பிரமுகர் 'ரோவர்' என்பவர் போல்ஷாய் அரங்கிற்கு ஒரு வகை 'லி.'.ப்டைப்' புனைந்தார், சதுரமான ஒரு மேடையில் கயிறுகள் கட்டி அதை நான்கு தூண்களுக்கு இடையில் இழுத்தனர்.

06. குடியிருக்கும் வீடு ஒன்றில் முதன் முதலாக 1865ஆம் ஆண்டுதான் 'லி.'.ப்ட்' அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

# ஹில்லாரி கில்லாடி

இமயத்தின் உச்சியை எட்டிப்பிடிக்க உங்களைத் தூண்டியது எது? என்று எட்மண்ட் ஹில்லாரியைக் கேட்டார் ஒரு நிருபர். "நான் இமயத்தின் உச்சியை எட்டிப்பிடிக்கும் முதல் ஆளாக இருக்கவேண்டும் அதனால்தான்" என்ற பதிலை எதிர்பார்த்தார். ஆனால் ஹில்லாரி சொன்ன பதில்! "இமயமலை இருக்கிறதே! அதுதான் காரணம்!"

# சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 23.09.2013

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1009**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல:167,**
**யாழ்ப்பாணம்.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1007**

**மா.கம்சா, சேச் வீதி,**
**பலாங்கொடை.**

பரிசுக்குரியவர்: 1007

பாராட்டுக்குரியவர்கள்

01. எம்.மதனிகா, சரசாலை, தெற்கு, சாவகச்சேரி.
02. சி.சோபனா, காரைநகர், யாழ்ப்பாணம்.
03. ச.திவ்யன், சிவன் கோவில் வீதி, புத்தூர்.
04. எஸ்.கிருஷாந்த், முருகன் கோயிலடி, வட்டுக்கோட்டை.
05. அ.சவிதா, பரந்தன், கிளிநொச்சி.
07. த.தனுஜன், மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.
08. சொ.சிந்துஜா, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை.

# நேருவை கலக்கிய உப்பு மா

பண்டித நேரு ஒரு முறை தமிழ்நாட்டுக்கு சுற்றுப் பிரயாணம் வந்தார். காரைக்குடியில் தங்கியபோது அவருக்கு தமிழ்நாட்டு உப்புமா பரிமாறப்பட்டது. வட இந்தியாவில் உப்புமா என்றால் தெரியுமா? கேசரி என்றால்தான் தெரியும். ஆகவே அவருக்கு விளக்க, "கேசரி மைனஸ் சுகர் ப்ளஸ் சோல்ட்" என்று ஒரு தமிழர் சொன்னார்.

# நீளமான

ஜேர்மனி இதில் வீடன் என்ற நகரம் உள்ளது. பள்ளிக்கூட மாணவர்களும் ஓவியர்களும் சேர்ந்து ஒரு ஓவியத்தைத் தீட்டியிருக்கிறார்கள். நீளம் எவ்வளவு? அந்த நகரின் வீதி முழுவதும் பரந்து விரிந்து காட்சியளிக்கும் 13.2 கிலோமீற்றர். இப்பொழுது சுருட்டி வைத்துள்ளனர். நீங்கள் நினைத்தது சரிதான்! கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இது இடம்பெறுகிறது.

# சிலுவை

யேசுநாதர் சிலுவையை சுமந்த மாதிரி ஆர்தர் பிலஸ்சிட் என்னும் அமெரிக்கர் மரச் சிலுவையை சுமக்கிறார். இந்த சிலுவை பன்னிரண்டு அடி உயரமுள்ள மரச் சிலுவை. இந்தச் சிலுவையைச் சுமந்துகொண்டு 278 நாடுகளில் நடந்துள்ளார். இந்த நடை யாத்திரை இன்னும் முற்றுப்பெறவில்லை. கின்னஸ் சாதனையாளர்.

தொகுப்பு
ஞ.சூரியா


# பழமொழி புதிர்

**இந்த படங்களுக்கு ஏற்ற பழமொழிகளை கண்டுபிடியுங்கள்.**
**உதாரணம்: கீழே உள்ள படத்துக்கு ஏற்ற பழமொழி.**



**யானைக்கும் அடி சறுக்கும்.**

இதே மாதிரி கீழே உள்ள மற்ற படங்களுக்கும் பழமொழிகளைக் கண்டுபிடிக்கவேண்டும்.



**அவள்** தாடையைப் பிடித்த அமீன் இரத்தம் கசிந்த அவளது தொண்டைப் பகுதியை தன் நாவால் வருடினான்.

பின்னர் சொன்னான்! "எனக்கு யார் உத்தரவிட்டாலும் பிடிக்காது. இன்று காலையில் உன் கணவன் என்னிடம் கடுமையாக நடந்து கொண்டான். இப்போது நீ அதனால் தான் இரண்டுக்குமாகச் சேர்த்து கடித்துவிட்டேன். நீ உயிர் தப்பியது பெரிய காரியம். ஏன் தெரியுமா? என்ற அமீனின் கேள்விக்கு அவள் பதில்சொல்ல பயந்தாள். அமீனே பதிலையும் கூறினான்.

"எனக்கு இரத்தம், மனித இரத்தம் பிடிக்கும்!" என்று இடியாக அவன் சிரித்த சிரிப்பிலும், சிரித்தபோது அவனது தோற்ற விகாரமும் கண்டு அவள் நடு நடுங்கிப் போனாள்.

அதன்பின்னர் அழைத்தது. பிரதமர் தன் துரதிர்ஷ்டத்தை தானே வலிய அழைப்பது தெரியாமல் அழைத்தார்.

இடி அமீனை முதல் பார்வையிலேயே ஒபோடேவுக்கு பிடித்துப் போய்விட்டது. அன்றிரவு தன் வீட்டில் விருந்துக்கு அழைத்தார்.

பிரதமர் விருந்துக்கு அழைப்பது எத்தனை பெரிய அதிர்ஷ்டம்!

நாட்டை ஆளும் தன் இலட்சியக் கனவை எட்டுவதற்கான படிக்கட்டில் படிப்படியாகத் தான் ஏறத் தொடங்கிவிட்டதாக நினைத்தான் அமீன்.

அன்றிரவு விருந்தில் ஜனாதிபதி புடன் தனக்குள்ள அதிருப்திகளை ஜாடை மாடையாகக் கூறினார் பிரதமர்.

அமீன் அதிகம் பேசவில்லை. அதிகம் பார்த்தான். அவன் அதிகம் பார்த்தது பிரதமரின் அழகான இளம் மகளை.

மொழு மொழு என்று திரட்சியாக, மதர்ப்பான குதிரைபோல இருந்த பிரதமரின்

"உன் திறமைக்கு ஒரு சவால் காத்திருக்கிறது"

"சவாலை ஏற்க காத்திருக்கிறேன்!" என்றான்.

"ஸயார் கிளர்ச்சியாளர்களை ஒடுக்கும் அதிகாரத்தை உனக்கு தருகிறேன்"

முதன்முதலாக தன் கைக்கு கிடைக்கப்போகும் அந்த அதிகாரம், நாடு முழுவதையுத் தன் கைக்குள் போடுவதற்கான அச்சாரம் என்பது அமீனுக்கு மட்டும்தான் தெரியும்.

மார்பில் பாயப்போகும் கடாவுக்கு கொம்பு சீவிக்கொண்டிருப்பது தெரியாமல், அமீனை ஸயார் கிளர்ச்சியாளர்களை அடக்க அனுப்பிவைத்தார் பிரதமர். அங்கு பெரும் விபரீதம் விளைந்தது.

ஸயார் கிளர்ச்சியாளர்கள் உகண்டாவின் மேற்கு எல்லையில் ஊடுருவி இருந்தனர்.

உகண்டாவின் மேற்கு எல்லையில் இருப்பதுதான் ஸயார் நாடு. அங்கு உள்நாட்டு போர் ஓயாமல் நடந்து கொண்டிருந்தது.

அங்கு கிளர்ச்சியில் ஈடுபடும் குழுக்களில் ஒன்றுதான் உகண்டாவுக்குள்ளும் ஊடுருவி இருந்தது.

கிளர்ச்சியாளர்கள் தங்கியிருந்த எல்லைக் கிராமங்களை முற்றுகையிட்டது அமீன் படை.

ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களை தீர்க்குமாறு ஆணையிட்டான் அமீன்.

கிளர்ச்சியாளர்கள் எவரும் பதில் தாக்குதல் நடத்தவில்லை.



அற்புதன் எழுதிய

# இடி அமீன்

## உண்மைத் தொடர்...

### அதிர் இடி 03

அமீனை அவள் அழைப்பதே கிடையாது.

அமீனின் முரட்டு சுபாவம் படைப் பிரிவுக்குள் பலர் அறிந்த் சுபாவம் ஆயிற்று.

படையாட்கள் மட்டுமல்லாமல், மேலதிகாரிகள்கூட அமீனைக் கண்டு பயப்பட ஆரம்பித்தனர்.

இக்கால கட்டத்தில் உகண்டா ஜனாதிபதி கபாகாவுக்கும், பிரதமர் ஒபோடேவுக்கும் இடையிலான சர்ச்சைகளும், பிரச்சினைகளும் தீவிரமாகின.

படைக்குள் தனக்கு விசுவாசமான அதிகாரிகளைத் தேடிப் பிடித்துக் கொண்டிருந்தார் பிரதமர் ஒபொடே. அவர்களை வைத்து ஜனாதிபதி கபாகாவை கவிழ்த்துவிடலாம் என்பது அவரது ஆசை.

அப்போதுதான் இடி, அமீனை தன்னைச் சந்திக்க வருமாறு அழைத்தார்.

இடி அமீனை அதிர்ஷ்டம் மகள் அமீனை மிகமிக இம்சை செய்தாள்.


"நாட்டின் அதிபரானால் இவளைத்தான் முதலில் அழைக்க வேண்டும் என் கட்டிலுக்கு!" என்று மனதில் எழுதி வைத்துக்கொண்டான்.

பிரதமரின் மகளும் அமீனின் தோற்றத்தை தன் கரும் அடர்ந்த புருவங்களுக்கு கீழிருந்த விழிகளால் பருகிக் கொண்டிருந்தாள்.

அமீன் அவளை கவர்ந்துவிட்டான். அமீனை இரகசியமாக அவள் தன் மனதுக்குள் பிடித்து வைத்துக்கொண்டாள்.

அதன் பயன்கள் விரைவாக அமீனை எட்ட ஆரம்பித்தன. தன் மகள் அமீனைப் பற்றி நல்லவிதமாக கூறியதால், பிரதமருக்கு அமீன்மீது மேலும் நம்பிக்கையும் ஒட்டுதலும் ஏற்பட்டது.

திடீரென்று ஒருநாள் அமீனை தன் அலுவலகத்திற்கு அழைத்தார்.



அமீனின் குரல் ஒலிபெருக்கியில் இடியென ஒலித்தது.

"நாங்கள் சண்டைக்கு வந்திருக்கிறோம். எங்கே இருக்கிறீர்கள்? தீக்கோழி மாதிரி எந்த மண்ணுக்குள் கொண்டுபோய் தலைகளை புதைத்து வைத்திருக்கிறீர்கள்? எப்படியோ சாகத்தான் போகிறீர்கள். நாங்கள் கொல்லத்தான் போகிறோம். இப்போதே அந்த ருசிகரமான காரியம் நடக்கட்டும். ஏன் தாமதிக்கிறீர்கள்?" இடியென்று சிரித்தான் அமீன்.

அவன் பேசிய தோரணைக்கும், சிரித்த சிரிப்புக்கும் கூடவந்த இராணுவத்தினரே பயந்துதான் போனார்கள்.

திடீரென்று இடி அமீனுக்கும் அவன் படையினருக்கும் முன்பாக அக்காட்சி விரிந்தது. வெள்ளைக் கொடிகளை ஏந்தியபடியும், கைகளை தலைக்கு மேலே உயர்த்தியபடியும் கிளர்ச்சியாளர்கள் குழு அவர்களை நோக்கி வந்துகொண்டிருந்தது.

இடி அமீன் தன் கையிலிருந்த துப்பாக்கியை உயர்த்தி, தம்மை நோக்கி வந்துகொண்டிருந்த கூட்டத்தை நோக்கி குறிப்பார்த்தான்.

அவர்கள் வந்துகொண்டே இருந்தனர். நெருங்கிவரும்வரை, குறி விலகாமல் துப்பாக்கியை நீட்டிக் கொண்டிருந்தான் அமீன்.

குறியை விலக்காமலேயே "யார் நீங்கள் எல்லாம்?" என்று கேட்ட கேள்வியில் அதட்டல் தொனித்தது.

"ஸயார் கிளர்ச்சியாளர்கள்" என்று அவர்கள் சொன்ன பதிலுக்கு, தன் வழமையான இடிச் சிரிப்பை உதிர்த்தான் அமீன்.

"உங்களுடன் மோதுவது எங்கள் நோக்கமல்ல" என்று அவர்களில் ஒருவன் கூறியதும், அடுத்த நடந்தது பயங்கரம். சொன்னவன் சட்டையை தன் ஒரு கையால் மட்டும் கொத்தாகப் பிடித்து அமீன் தன் தலைக்கு மேல் தூக்கிப்பிடித்த போது, அசல் இராட்சதன்போலவே ஏனையோர் பார்வைக்கு காட்சியளித்தான். "என்னடா பையா சொன்னாய்? மோதும் நோக்கம் இல்லையென்றா சொன்னாய்? என் சுண்டுவிரலுக்குக்கூட தாக்குப் பிடிக்க

(தொடரும்)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும்
வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன்
பங்குகொண்டு பரிசுகளையும்,
பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**வாசகர்களின் கவனத்திற்கு...**

முரசு வாசகர்களின் உரிமையான வேண்டுகோளுக்கு அமைவாக, (முரசு 1021 - கு.எ. போ. - 528) குறுக்கெழுத்துப் போட்டியில் இருந்து வெற்றியாளருக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூபா 1000/= ஆக உயர்த்தப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை அறியத்தருகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 538

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | | 23 | |
| 25 | 26 | | 28 | 29 | 30 |
| 31 | | 33 | 34 | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **23.09.2013** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 538
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-169, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 536 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ப 1 | ஞ் 2 | ச 3 | ச 4 | த 5 | ம் 6 |
| க 7 | ம் 8 | | ம் 10 | வ 11 | தி 12 |
| வ 13 | ல 14 | சை 15 | | ச் 17 | |
| தி 19 | கை 20 | ச் 21 | த் 22 | சி 23 | |
| நா 25 | ச 26 | ர் 27 | | றி 29 | நா 30 |
| ள் 31 | | ச 33 | | | னா 36 |

**இடமிருந்து வலம்**

01. இரக்கம். (குழம்பியுள்ளது)
07. நாலு கூப்பிடு கொண்ட தூரம். (குழம்பியுள்ளது)
11. ஒரு சாரியை உருபு.
13. "கண்ணிழந்து வாழின் எண்ணிழக்கும் - தமிழ் ............ வாழின் மண்ணிழக்கும்."
19. வெற்றி, உயர்வு, ஒரு பக்கம். (குழம்பியுள்ளது)
25. கள், தேன்.
28. பல், உமி. (திரும்பியுள்ளது)
33. இலங்கையில் உள்ள நீர்வீழ்ச்சிகளில் ஒன்று. (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. தில்லைநாதன் ; நடராசன்.
02. தனுசு. (குழம்பியுள்ளது)
03. செப்பம்; நாட்டுப்பகுதி. (திரும்பியுள்ளது)
05. இந்துக்களின் ஒரு விரதம். (குழம்பியுள்ளது)
06. இறைச்சி. (திரும்பியுள்ளது)
28. தன்மை பன்மைப் பெயர். (திரும்பியுள்ளது)
30. பயனின்மை. (திரும்பியுள்ளது)

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 536 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

தி.நித்தியானந்தன், கட்டப்பிராய், கோப்பாய்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. சி.குந்தவை, கண்டி வீதி, அரியாலை.
02. அ.யசிதரன், 50, கனகரட்ணம், வீதி, யாழ்ப்பாணம்.
03. மா.கவிந்தா, நல்லூர், யாழ்ப்பாணம்.
04. சி.ஆலவர்த்தன், முள்ளியவளை, முல்லைத்தீவு.
05. பொ.வரதராஜா, துன்னாலை மேற்கு, துன்னாலை.
06. எம்.ஆருஜன், கோயில் வீதி, மன்னார்.
07. ஆர்.வொறின் மரீனா, பிரதான வீதி, திருகோணமலை.
08. சி.பபிதா, கண்டி வீதி, சாவகச்சேரி.
09. எஸ்.இம்ஹானா, கல்லடி, மட்டக்களப்பு.








# கமலுக்கு இஸ்லாமிய அமைப்பு ஆலோசனை...

பல்வேறு சர்ச்சைகள், போராட்டங்களுக்கு மத்தியில் விஸ்வரூபம் படம் வெளியாகி ஹிட்டானது. இந்நிலையில் விஸ்வரூபம்-2 படமும் பிரச்சினையில் சிக்கியுள்ளது. பூஜா குமார், ஆண்ட்ரியா உட்பட பலரின் நடிப்பில் மிக பிரமாண்டமாக உருவாகிவரும் இப்படம், விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் இப்படத்திற்கு தற்போது எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இப்படம் குறித்து இந்திய தேசிய முஸ்லிம் லீக் மாநில தலைவர் ஜவஹர்அலி வெளியிட்டுள்ள அறிக்கையில், கமலஹாசன் நடித்து இயக்கிவரும் விஸ்வரூபம் பார்ட் 2 தீபாவளிக்கு வர இருப்பதாகவும், விஸ்வரூபம் படத்தை போன்று இப்படத்திலும் முஸ்லிம்களை தீவிரவாதிகளாக சித்தரித்து முஸ்லிம்களின் மனம் புண்படும்படியான காட்சிகள் இருப்பதாகவும் தகவல்வந்துள்ளதை கண்டு மிகவும் வேதனை அடைந்துள்ளோம். சகோதரர் கமலஹாசன் தொடர்ந்து முஸ்லிம்களை காயப்படுத்தி படம் எடுத்துவருவதும் பிறகு கருத்து சுதந்திரம் என்று பேசி அதன்மூலம் படத்தை விளம்பரப்படுத்திக் கொள்வதும் நல்ல கலைஞனுக்கு அழகல்ல. யார் மனதையும், காயப்படுத்தி திரைப்படம் எடுப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும். எனவே முஸ்லிம்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து விஸ்வரூபம் 2 திரைப்படத்தில் முஸ்லிம்களை காயப்படுத்தும் காட்சிகள் இல்லாதவாறும், சமூக ஒற்றுமையை பறைசாற்றும் விதமாகவும் திரைப்படத்தை எடுக்குமாறு கமலஹாசனை இந்திய தேசிய முஸ்லிம் லீக் சார்பாக கேட்டுக் கொள்கிறோம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

# மறுக்கிறார் காஜல்

துப்பாக்கி, மாற்றான் போன்ற படங்களில் நடித்த காஜல் அகர்வால், மார்க்கெட் சூடுபிடித்ததால் தனது சம்பளத்தை ஒன்றே கால் கோடி முதல் ஒன்றரை கோடி வரை உயர்த்திக் கேட்டதாக கூறப்படுகிறது.

இதனால் தமிழில் கமலுடன் நடிக்கவந்த வாய்ப்பு தெலுங்கில் பவன் கல்யாண், ஜூனியர் என்.டி.ஆர் போன்றவர்களுடனான வாய்ப்பு என்பன கைநழுவிப்போனது. தவிர நிறைய வாய்ப்புகளை அவர் ஏற்க மறுத்ததால் அவருக்கு திருமண ஏற்பாடு நடப்பதாகவும் திரையுலகில் தகவல் பரவியது.

இதுபற்றி காஜல் அகர்வால் தாய் கூறுகையில், காஜல் தனது சம்பளத்தை ஏற்றவில்லை. ஒன்றரை கோடி, ஒன்றேகால் கோடி சம்பளம் வேண்டும் என்று கேட்டதே இல்லை.

அவரிடம் கால்ஷீட் இல்லாததால்தான் புதிய படங்களை ஏற்கவில்லை. எனக்கு திருமண ஏற்பாடு எதுவும் நடக்கவில்லை. விரைவில் 2 இந்தி படங்களில் நடிக்கவுள்ளேன் என்றார்.

# சிம்புவின் காதலுக்கு ஆப்படித்தார் நடிகை

வாலு, வேட்டை மன்னன் படங்களில் இணைந்து நடித்த சிம்பு- ஹன்சிகாவுக்கு இடையே காதல் பற்றிக் கொண்டது. இருவரும் காதலிப்பதை மறைத்து வைக்காமல் அறிவிப்பு வெளியிட்டனர். இதன் பின்பு ஹன்சிகாவின் பிறந்தநாளுக்கு கேக் ஒன்றைப் பரிசாக அளித்தார், இருவரும் நெருக்கமாக உள்ள புகைப்படங்களும் வெளியானது. இந்நிலையில் இருவரின் காதலில் விரிசல் வந்துவிட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

அதாவது, பிரபல நடிகை ஒருவர் ஹன்சிகாவுக்கு போன் போட்டு பேசியுள்ளார். அப்போது, கடந்தாண்டு சிம்பு என்னை காதலிப்பதாக கூறினார். நான்தான் வயது வித்தியாசத்தில் அதை ஏற்கவில்லை என்று தெரிவித்துள்ளார். இதனால் சரியான பதற்றமாக இருக்கிறாராம் ஹன்சிகா. குறிப்பாக அவரது நலன்விரும்பிகளும் சிம்புவை பற்றி கொளுத்திப்போட, பேசுவதையே நிறுத்திவிட்டாராம்.

# நித்யா மேனனின் சமூக விழிப்புணர்வு

அதிரடி அக்ஷன் என்று இல்லாமல் மென்மையான நாயகி எனப் பெயர் எடுத்துள்ளார் நித்யா மேனன். இந்நிலையில் புதிய படமொன்றில் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளார். அதாவது டெல்லி மருத்துவ மாணவி பாலியல் பலாத்கார சம்பவத்தை மையப்படுத்தி உருவாகும் படத்தில் நடிக்க உள்ளார். முதலில் இந்த படத்தில் பலாத்கார காட்சி இருந்ததால், நடிக்கமாட்டேன் என்று தயங்கினாராம். பின்பு, இதனை ஒரு கதையாக பார்க்காமல் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் படமாக பாருங்கள் எனப் படக்குழுவினர் தெரிவித்ததால் ஒப்புக் கொண்டாராம்.

இதுகுறித்து கூறுகையில், முதலில் தயங்கி பின்பு நடிக்க ஒப்புக்கொண்டேன். பெண்களை பாலியல்ரீதியாக துன்புறுத்தும் நபர்கள் இந்த படத்தை பார்த்தால் நிச்சயம் தகாத செயல்களில் ஈடுபடமாட்டார்கள். அந்த அளவுக்கு அவர்கள் மனிதில் மாற்றத்தை நிச்சயம் உருவாக்கும் என்று தெரிவித்துள்ளார்.

# தெலுங்…

கிஷோர்சினேகாவின் நடிப்…
படம் ஹரிஸ். ஆட்டிசம் பாதி…
அவனது லிஸ் தந்தை எப்…
என்பதை ஊர்வுபூர்வமாக செ…
இப்படத்திசிறுவனாக மாஸ்ட…
நடித்திருப்ப ஜி.என்ஆர்.குமர…
இயக்கத்தி டாக்டர் ராம் தய…
இலையில் தற்போது…
தெலுங்கில்மாழிமாற்றம் செய்…
வெளியாகஉளது.

# விழி…

கவிய கண்ணதாசனின்…
இருக்கும் ம்தான் 'பொன்மா…
வ் கண்ணதாசனு…
அப்பா அதாஸ் எந்நேரமு…
அப்பா கிர் இதற்கு நேரம…
தயங்குபஆதவ், காயத்ரியி…
விடுகிறார்ருள்தாஸ். அதன்…
காதலிக்ச காயத்ரி.
ரி பருவத்து தீவி…
அதற்கு ர் என்ன முடிவு…
முயற்சித்க்கிறார். அப்பாவி…
யாகவும் துகொள்ளாமல் …
அப்பா(வின்ளையாக ஆதவ்…
அளவிற்குர்ஜுன் பாத்திரத்தி…
காயத்ரிய நிஜமான நெருக்…
த்ரி, திவ்யாவாக …
'நடுவுல ஞ்சம் பக்கத்த கா…
நடிப்பில் பக்குவம் தெரி…
காதலைப்ளாஷ்பேக்கில் நி…
முள்ளின்பட்ட சேலையாக…
வைக்கிறழைய இரும்பு…
நாயகி கரியின்
அலறஹைார்.
ஸ்ரீரஞ்…







எப்போதும் ராஜா



அங்குசம்

# தெலுங்கில் ஹரிதாஸ்

கிஷோர்சினேகாவின் நடிப்பில் வெளிவந்த படம் ஹரிதாஸ். ஆட்டிசம் பாதித்த சிறுவனை, அவனது லிஸ் தந்தை எப்படி வளர்க்கிறார் என்பதை ஊர்வுபூர்வமாக சொல்லி இருப்பர். இப்படத்தில்சிறுவனாக மாஸ்டர் பிரதீப் ராவத் நடித்திருப்ப ஜி.என்ஆர்.குமரவேலனின் இயக்கத்தி டாக்டர் ராம் தயாரித்திருந்தார்.

இலையில் தற்போது இப்படம் தெலுங்கில்மாழிமாற்றம் செய்யப்பட்டு வெளியாகளளது.

இப்படத்திற்கு 'மா நன்ன பொலிஸ்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இதுகுறித்து தயாரிப்பாளர் டாக்டர் ராம் கூறுகையில், ஹரிதாசை தெலுங்கில் ரீமேக் செய்யும் திட்டத்தில் இருந்தோம். அதனால் டப் செய்ய தீர்மானித்து அதற்கான பணிகள் முடிந்திருக்கிறது. ஹரிதாஸ் படத்தின் கதை சர்வதேசத்துக்கும் பொருந்தும் என்பதால் நல்ல வரவேற்பு கிடைக்கும் எனத் தான் நம்புவதாக தெரிவித்துள்ளார்.

# விழிப்புணர்வு பாடம்!

கவிய கண்ணதாசனின் பேரன் ஆதவ் கண்ணதாசன் கதாநாயகனாக அறிமுகமாகி இருக்கும் ம்தான் 'பொன்மாலைப் பொழுது.'

வ் கண்ணதாசனும் காயத்ரியும் ஒரே பள்ளியில் படிக்கிறார்கள். காயத்ரியின் அப்பா அ்தாஸ் எந்நேரமும் சந்தேகத்தோடும், கண்டிப்பாகவும் இருப்பவர். ஆதவின் அப்பா கிர் இதற்கு நேர்மாறானவர். மகன் சிகரெட் அடிப்பதைக்கூட தட்டிக்கேட்க தயங்குபஆதவ், காயத்ரியிடம் நட்பாக பழகுவதைக் கண்டு அடித்து, அவமானப்படுத்தி விடுகிறார்ருள்தாஸ். அதன்பின்பு அப்பாவை பழிவாங்கவேண்டும் என ஆதவ்வை காதலிக்ர் காயத்ரி.

ளி பருவத்து தீவிர காதல் என்னென்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்பதையும் அதற்கு ஷார் என்ன முடிவு எடுத்தார் என்பதையும் இயக்குனர் யதார்த்தமாக சொல்ல முயற்சித்க்கிறார். அப்பாவின் தட்டிக்கொடுத்தலை தவறாகவும் பயன்படுத்தாமல், சரி யாகவும் துகொள்ளாமல் பள்ளியில் உடன்படிக்கும் காயத்ரியுடன் காதலில் விழும் அப்பா(வின்ளையாக ஆதவ் கண்ணதாசன். அறிமுகம் என்று சொல்லமுடியாத அளவிற்அர்ஜுன் பாத்திரத்தில் அப்பா(வி) பிள்ளையாக அசத்தியிருக்கிறார். காதலி காயத்ரிய நிஜமான நெருக்கம் கிறக்கம் காட்டி நடித்திருக்கிறார்.

த்ரி, திவ்யாவாக வாழ்ந்திருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும். 'நடுவுல ஞ்சம் பக்கத்த காணோம்', '16 வயசு' படங்களைக் காட்டிலும் இவரின் நடிப்பில் ல பக்குவம் தெரிகிறது. ஆதவ்வின் அப்பாவாக கிஷோர். தன் சிறுபிராய காதலைய்ளாஷ்பேக்கில் நினைத்தபடி, மகனையும் அவனது காதலையும் முள்ளின் பட்ட சேலையாக வைக்கிறபழைய இரும்பு நாயகி கரியின் அலறவைார். ஸ்ரீரஞ்

கையாளும் விதத்தில் பாராட்ட வியாபாரி யாகவும் புதிய அப்பாவாகவும் அருள்தாஸ் அனுபமா, உள்ளிட்ட அம்மா கதாபாத்திரங்களும் பளிச்சிட்டி ருக்கின்றனர். பாடல்கள் சுமார் ரகம்தான். ராஜவேல் ஒளிவீரனின் ஒளிப்பதிவு உண்மையாகவே அவரை ஒளிவீரன் என ஒப்புக்கொள்ள வைக்கும் பலம்! ஏ.சிதுரை எழுதி இயக்கி இருக்கும் பொன்மாலைப் பொழுது - இசை, பாடல்கள் மாதிரி ஒரு சில குறைகள் இருந்தாலும் பள்ளி மாணவப்பருவ காதல் விழிப்புணர்வு ப(பா)டமாகும்.

# தற்கொலை முயற்சியில் நடிகை

சமுத்திரம் படத்தின் மூலம் கொலிவூட்டுக்குவந்த சிந்து மேனன், கடல் பூக்கள், யூத், ஈரம் உட்பட பல தமிழ் படங்களில் நடித்துள்ளார். இவர் கடந்த 2010ம் ஆண்டு டொமினிக் பிரபு என்ற தமிழரை திருமணம்செய்து கொண்டார். இந்நிலையில் இவர் தூக்க மாத்திரைகளை சாப்பிட்டு தற்கொலைக்கு முயன்றுள்ளார். இதனையடுத்து சிந்துவை, சென்னை வடபழனியில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சேர்த்துள்ளனர். உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகி-றார்.





# தமிழுக்கு வருகிறார் மம்முட்டியின் புதல்வன்

குறும்பட இயக்குனராக இருந்து பெரிய திரைக்குவந்து வெற்றிபெற்ற பாலாஜி மோகன். அடுத்து இயக்கவிருக்கும் படத்தில் மலை யாள மெகா ஸ்டார் மம்முட்டியின் மகனும், மலை யாள முன்னணி நடிகர்களில் ஒருவருமான துல்கர் சல்மான் கதாநாயகனாக நடிக்க இருக்கிறார். துல்கர் சல்மான் முதன்முதலாக தமிழில் நடிக்க இருக்கும் இந்தப் படத்தில் அவருக்கு ஜோடியாக தமிழ் சினிமா ரசிகர்களின் தற்போதைய தேவதையான நஸ்ரியா நசீம் நடிக்கிறார்.

விரைவில் படப்பிடிப்பு துவங்கவுள்ள இந்தப் படத்தின் பெயர் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்களின் தேர்வு நடந்துவருகிறது. துல்கர் சல்மான், நஸ்ரியா தற்போது 'சலாலா மொபைல்ஸ்' என்ற மலையாள படத்திலும் நடித்து வரும் ஜோடி என்பது குறிப்பிடத்தக்கது

# தேன் கிண்ணம்



## கதறியழும் தாய்...

சுவரையோட்டை வழியே
நாரை யூர்வலம்...!
தரை வழியேயும்
கோரைப் புற்கள்
அரங்கேற்றம்...!

கீரைக் கறியும் சோறும்
மண்பாத்திர குளிர் நீரும்
ஓர் வேலையுணவு...
மறு வேளைகள் அமெரிக்க நாட்டு
பீரைப் போல் கஞ்சியும்...!

திருமண நாளை
யெண்ணி யெண்ணி
தன் மகளும்...
பாறையளவு தங்க, வைரம்
சீர்வரிசை கேட்கும்
மாப்பிள்ளைகளும் இன்று...!

கண்ணீரை விற்க
இடமுண்டோ...?
சோகம் அடகு வைத்து
இன்பம் பெறுவதென்றோ...?

யாரைக் கேட்பது
இறைவன் வரைந்த
ஓவிய மிது
வர்ணம் தீட்டாமல்
குறை நிலையில்
விட்டுவிட்டான்...

நாட்கள் கடப்பதற்கு
வரி கட்ட வேண்டியதாகிற்று
பாரி போன்று யாரும் வருவானோ...
பிள்ளைக்கு (மகள்கு) தாலி கட்டி
காரில் கொண்டு செல்ல
கவலைகள் கரைந்திடாதோ...

N.M ஹலீம்.



## வெற்றிக் களிப்பு

கசந்த வாழ்வு
களையிழந்த மகோன்னதம்
தினமும் சேகரமாகும்
தணலில் விழுந்த
நீர்த்துளிச் சொற்கள்
அத்தனைக்கும் மேல்
இலவுகாத்த இரவுகளால்
வெறுத்த விடியல்.

இடி மின்னல்
தவிப்பு வேதனைகளால்
கண்ணீரில் கரைந்து
வியாபித்து நின்ற
கால வரையறைகளிடையே
என்றும் திருப்திகாணும்
மேலோச்சிய பிரார்த்தனை

எங்கும் கிடைக்கும்
படைத்தவன் பார்வை
கல்லினுள் ஈரமாய்
இங்கும் கிடையாதாவென
துயருக்குச் சொன்னது
சிறு சமாதானம்
எல்லை யறாதிருக்க

இருட்டிய கருமேகம்
கனத்து முட்டிய
வயிற்றின் சுமை
ஆனந்தக் கண்ணீராய்
கரைந்து போகும்
காலக்கெடு
இவைகள் அத்தனையும்
மறுபுறம் நியதிகளாக..

பொழிந்த மழைவெள்ளம்
மண் கண்ட மழலை
தெளிந்த வானம்
அதோ அந்தத் தாயின்
சுமை கழைந்த
நிம்மதிச் சாதனை
தேடலற்ற செய்திகளாக

கண் காதுகள்
நனைத்து குளித்தது
களங்கமற்ற முறுவலில்
வேதனைப் போராட்டம்
வெற்றிக் களிப்பானது
வாழ்வாதாரமானது
கண்காணும் முகங்களாக
இவை இன்னும்
கேட்டுத் தெரிந்தவைகளாக.

எம்.ஐ.எம். அஷ்ரப்.
சாய்ந்தமருது - 07.



## என் புன்னகையைத் தேடுகின்றேன்

என்னைத் தொட்டிலில் இட்டு நீ
தாலாட்டுப் பாடி துயிலவைக்கின்ற
சுகமான நாட்களை தேடுகிறேன்

உன் மடி மீது தலை வைத்து
கதைகள் பலவும் கேட்டுக்கொண்டே
கண்ணயர்ந்து கொள்கின்ற
காலங்களை தேடுகிறேன்

நீ எங்கு சென்றாலும்
முந்தானையைப் பிடித்தபடி
உன் பின்னே அழுதுகொண்டு
திரிகின்ற காலங்களைத் தேடுகிறேன்

அடிக்கடி அண்ணாவிடம்
சண்டை போட்டு உன்னிடம்
திட்டுக்களும் குட்டுக்களும்
அதிகமாகவே வாங்குகின்ற
அந்த நாட்களையும் தேடுகிறேன்

பாடசாலைக்குப் போவதற்கு முதல்
அழுது அடம்பிடித்து
வீட்டையே இரண்டாக்கி
உன்னிடம் ஏச்சுக்கள்
தாராளமாய் வாங்குகின்ற
நிமிடங்களையும் தேடுகின்றேன்.

புத்தாடை அணிந்து கொண்டு
உன் கரம்பிடித்துக் கோயில் சென்று
சாமி கும்பிடுகின்ற
அந்த நாட்களையும் தேடுகிறேன்

எல்லாமே தொலைவாக
நான் மட்டும் தனிமையில் நின்று
தேடிக்கொண்டிருக்கின்றேன்
அஸ்தமித்த புன்னகையை
மீண்டும் படரவிடுவதற்காய்
கடந்துபோன காலங்களை...

ஆஷா. யாழ்ப்பாணம்



## பிச்சைக்காரன் தரும் பிச்சை

துரத்தாதே அவனை
வாசலில் வைத்தே
வசைபாடி அனுப்பாதே.

கழித்து வைத்த உணவையும்
கால் பைசாவும் கொடுத்து
கண்ணீர் வழக்கச் செய்யாதே

இதயத்து உணர்வோடு
ஏதேனும் கொடு
இதோ... பார்
ஏராளம் புண்ணியங்களை
ஏதுமே இல்லா அவன்
பிச்சையிட்டுப் போகிறான்
பாவி உந்தனுக்கு...

யோ.புரட்சி.

## கடற் பட்டணம்

முறுக்கிய கைகள்
உடைந்த மண்டையோடு
கிழிந்த பாவாடையில்
கைவிரல் அடையாளங்கள்
இதயமில்லாக் கடற்கரையில்
குருதிக் கழிமுகம்
இவைதான் எங்களூர்
கடற் பட்டணமொன்றின்
முன்னாள் முகவரி

உன்னைப் போலவே
அயல் வீட்டானையும்
நேசி என்றனர்
அவனோ தன் வீட்டு
அடுப்பெரிக்க என் வீட்டு
கூரைச் சிலாம்புகளை
களவாடிச் சென்றான்
வீட்டுச் சுவர்கள் கதறக் கதற..

ஒரு திறந்த வெளியைத்தானும்
எனக்காக விட்டுவைக்கவில்லை
நாம் ஒன்றாய்ச் சேர்ந்து
ஒரு கருங்கல் கோட்டையை
தகர்க்கத் தொடங்கினோம்
சிதறிய கற்கள்
எம் தேன் கூட்டைக் கலைத்து
விஷக் கொடுக்குகளையும்
உடைத்துவிடும் என்று நாம்
எண்ணியிருக்கவேயில்லை...

இந்த புகழ்மிக்க
கடற் பட்டணத்தில்
எதுவோ கோளாறாகிவிட்டது
ஒரு கைக்கிண்ண மதுவிற்காக
ஜீவனுள்ள ஓவியமொன்று
கைமாற்றப்பட்டுவிட்டது
முன்னாளில் விடுதலைக்
கனவைத் தகனித்த
சுடுகாட்டுப் பூவாயிருந்தது
இந்நாளில் கனவு காண்பதே
கடும் குற்றமாகிவிட்டது.

தேர்தல் கூச்சல்கள்
சுவரொட்டிகள், கோஷங்கள்
ஒலிபெருக்கிகளின் முழக்கம்
சுழலும் நாற்காலிக்கான அவசரம்
இவைதான் எமது கடற்பட்டணத்தின்
இன்றைய முகவரி!

இந்த பட்டணத்தின் இதயம்
இடிபாடுகளோடு கனக்கிறது
அவைகளின் கரிய தூண்களை
அவர்கள் இடி முழக்கத்துடன்
உடைத்து வீழ்த்தும்போது
நீலக்கடல் ஓலமிட்டது.

நாங்கள் சுதந்திரமானவர்கள்
வௌவால்களின் உலகத்தில்
தலை கீழ் விகிதங்களைத்
தேர்ந்தெடுக்கும் உரிமையுடைய
நாங்கள் சுதந்திரமானவர்கள்
எங்களது வாழையடி
வாழையின் வேர்களையே
அறுத்துத் தின்னுகின்ற
நாங்கள் சுதந்திரமானவர்கள்
ஆனந்தமாய் சரசரத்து வீசும்
தென்றல் காற்றில்
ளவாடையைக் கலந்து விடுகின்ற
நாங்கள் சுதந்திரமானவர்கள்.

இதோ பட்டணத்தில்
மதுக்கடைகளின் கல்லாக்கள்
மனித உயிர்ச் சாற்றினால்
நிரம்பி வழிகின்றன
அனக்கொண்டாக்களாய் நீளும்
காப்பெற் சாலைகள்
பச்சய உருமணிகளை
உறுஞ்சி விடுகின்றன.

ஓ... உலகத்து கனவான்களே
பறவைகள் பறக்கத் தயங்கும்
என் கடற்பட்டணத்தில்
ஒரு பசுமைத்திட்டை
ஒரு சிறந்த வெளியை
எனக்காக விட்டுவிடுங்கள்
என் அந்திம கிரியையாவது
அதில் அரங்கேறட்டும்...

வேல். லவன்



பிரசவம் ஒரு இயற்கை நிகழ்வு. உலகில் 3 விநாடிக்குள் ஒரு குழந்தை பிறக்கின்றது. ஆனால் ஒவ்வொரு தாய்க்கும் இது வாழ்வில் ஓர் முக்கியமான காலம். மகிழ்ச்சி, பயம், கடின உழைப்பு கலந்த ஓர் புதிய அனுபவம்.

கர்ப்ப காலத்தில் தாய்மாருக்கு மனதில் எழும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்திலும் கர்ப்ப காலத்தில் ஏற்படும் மாற்றம், பிரச்சினைகள் என்பவற்றை விளக்கவும் எடுத்த முயற்சி இது. சற்று ஆழமாக காலை வைத்திருப்பதாக தோற்றலாம். ஆனால் இந்த கணினி யுகத்தில் கண்ணாடித் தன்மை (Transparency) அவசியமென நான் கருதுகின்றேன். மருத்துவம் மூடுமந்திரமாய் இருந்த காலம் விண்ணேறிவிட்டது. நோயாளிகள் தங்கள் பிரச்சினை களை நன்கு விளக்கமாக அறிய விளைகின்றனர்.

**Dr. சி.நவநீதன்**

# ஆரம்ப கர்ப்ப காலம்



## அன்புள்ள அம்மா

**ஆரம்ப கால கர்ப்பத்தில் கவனிக்க வேண்டியன எவை?**

**உணவு**

நீங்கள் இருவருக்காக உணவை உட்கொள்ள வேண்டியுள்ளதால் சமநிலைப் படுத்தப்பட்ட உணவை உட்கொள்ளுதல் அவசியம். உங்கள் குழந்தையின் உள்ளுறுப்புக்கள் சீராய் அமைவதற்கும் அதன் எதிர்காலம் நோய்களற்றதாக இருப்பதற்கும் ஊட்டச்சத்துள்ள உணவு அவசியம். சத்துக் குறைபாடு உடைய தாய்மாருக்கு நிறை குறைவான குழந்தைகள் பிறக்கும் சாத்தியம் அதிகம். கர்ப்பகாலத்தில் மேலதிகமாக 350 கலோரி உணவு தேவைப்படுகிறது.

**கர்ப்பிணித் தாய்மாருக்குரிய உணவுகள் எவை?**

01. பழவகைகள், காய்கறி, கீரைவகை, (எந்தப் பழமும் உண்ண முடியும். பப்பாசி, அன்னாசி உட்பட)
02. தானிய உணவு, சோறு, பாண்.
03. பால், தயிர், யோகட்.
04. கோழி இறைச்சி, மீன், முட்டை, பருப்பு வகை.

மேற்கூறிய 4 உணவு வகைகளிலிருந்தும் ஒரு வகையாக, 4 வேறுவிதமான உணவுகள் சேர்க்கப்படுவது சிறந்தது.

பொதுவாக, கொழுப்பு, உப்பு சத்துக்கள் குறைவாக பாவிப்பது நல்லது. எண்ணெய் பாவிக்கும்பொழுது (நிரம்பிய கொழும்பு வகை) நல்லெண்ணெய் விரும்பத்தக்கது. மாமிசம், மீன் உட்கொள்ளாத தாய்மார் மேலதிகமாக பால், பருப்பு வகைகளை உட்கொள்ள வேண்டும்.

கர்ப்பகாலத்தில் மலச்சிக்கலைத் தவிர்க்க குறைந்தது 10 - 12 கிளாஸ் நீர் அருந்துதல் அவசியமாகும்.

**கனியுப்புக்களும் விற்றமின்களும்**

**இரும்புச்சத்து**



உடலில் இரத்தக் கலங்களுக்கு இது அத்தியாவசியமாகும். இதன் தேவை கர்ப்ப காலத் தின் போது பன்மடங்காக அதிகரிப்பதால் கர்ப்பிணித் தாய்மாருக்கு இரத்தச்சோகை ஏற்படுகிறது. இதனை தடுப்பதற்கு எல்லாக் கர்ப்பிணித் தாய்மாருக்கும் இரும்புச் சத்து குளிசைகள் அரசாங்க கிளினிக்கில் இலவசமாக வழங்கப்படுகிறது. கீரைவகை, மற்றும் ஈரல் போன்ற உணவு வகைகளிலும் இரும்புச்சத்து காணப்படுகிறது.

**போலிக்கமிலம்**

இது குழந்தைகளில் நரம்புத் தொகுதியில் ஏற்படும் குறைபாடுகளை தவிர்க்க உதவுகிறது. இவ் உயிர்ச்சத்து

01. பச்சைக் காய்கறி
02. தோடம்பழம், பச்சை போஞ்சி

போன்ற உணவு வகைகளில் கிடைக்கிறது. இதுவும் வில்லை வடிவில் தாராளமாகக் கிடைக்கின்றது.

**கல்சியம்**

குழந்தைக்குத் தேவையான கல்சியம் தாயிலிருந்தே பெறப்படுவதால் இதை ஈடு செய்ய கல்சியம் நிறைந்த உணவுகளை (சிறிய மீன்வகை, பால்) உட்கொள்ளல் அவசியமாகும்.

இவற்றைவிட, அயடீன், நாகம் என்பனவும் கர்ப்பிணிகளுக்கு இன்றியமையாததாகும்.

அளவுக்கு மிஞ்சிய அமிர்தம் நஞ்சாவது போல் விற்றமின்களும் வைத்தியரின் ஆலோசனையின்றி பெறுதல் தீங்கு விளைவிக்கும் செயலாகும். உதாரணமாக அளவுக்கு மிஞ்சிய விற்றமின் A குழந்தையின் வளர்ச்சியையும் உடல் உறுப்புகளையும் பாதிக்கலாம்.

(தொடரும்)

# டென்ஷன் டென்ஷன் மாதவிடாய் டென்ஷன் தீர்வு என்ன?



பெண்கள் திடீரென்று சில நாட்களாகக் காரணமில்லாமல் எரிந்துவிழுவது, வயிற்று வலி, தலைவலி, கோபப்படுவது, டென்ஷன் இவையனைத்தும் மாதவிடாயின் முன்பு அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளின் பிரதிபலிப்பு. ஹோர்மோனின் வேலைகள்தான். இதற்கான மருத்துவ உண்மைகள், அதற்கான தீர்வுகள் பற்றி விளக்கமளிக்கிறார் மகப்பேறு மருத்துவர் கீதா ஹரிப்பிரியா! சினை முட்டையை உற்பத்தி செய்கிற ஒவ்வொரு பெண்ணும், மாதவிடாய்க்கு முன்பு சில மாற்றங்களை அனுபவிக்கிறாள்.

மார்பக வலி, வீக்கம், தலைவலி, மனச்சோர்வு, தசைப்பிடிப்பு, எரிச்சல் போன்ற அறிகுறிகள் மாதவிடாய்க்கு முன்பு இருக்கும். இதனை மருத்துவம் Premenstrual Syndrome என்கிறது. இதனால் தொடர்ந்து சில நாட்கள் அவர்களுடைய இயல்பு வாழ்க்கைப் பெரிதும் பாதிப்படைகிறது. இன்றைய மருத்துவத்தில் இதற்குத் தேவையான மருந்துகள் வந்தாகிவிட்டது. மாதவிடாய்க்கு முந்தைய நாட்களில், அவதிகள் காரணமாக பெண்கள் தங்கள் வேலைக்கோ, குடும்ப உறவுகளிலோ எந்தவித இடையூறுகளும் வராமல் ஜாலியாகச் சமாளிக்கலாம் என்கிறார்கள் நிபுணர்கள்.

மாதவிலக்கின் முன்பு ஏற்படக்கூடிய இந்த அறிகுறிகளில் ஏற்படும் பிரச்சினைகளை உட்கொள்ளும் உணவின்மூலமாகத் தீர்வுக் காணலாம். சரி... என்ன செய்யலாம்?

கொழுப்புச் சத்துள்ள உணவுகள் PMS (Pre menstrual syndome) அறிகுறிகளை அதிகப்படுத்தும். குறைவான கொழுப்புள்ள உணவு வகைகளை உட்கொள்ளவேண்டும். உப்பு அதிகம் சேர்ந்த ஊறுகாய், நொறுக்குத்தீனி வகைகளை ஒதுக்கிவிடவேண்டும். ஸ்வீட், ஐஸ்க்ரீம்களை ஒரு பிடி பிடித்தால் நன்றாக இருக்குமே என்று படும். சொக்லெட், சிப்ஸ் போன்றவற்றை ஒரு வெட்டு வெட்டத் தோன்றும். இருந்தாலும் இனிப்புக் குறைவாக உள்ள உணவுகளைச் சாப்பிடுவதே நல்லது.

மாதவிடாய் நாட்களுக்கு ஒரு வாரம் முன்பு, இருபது நிமிட வாக்கிங் பழகிக்கொண்டால் மனரீதியான பாதிப்புகளைக் குறைக்கலாம். கோப்பி, பால் போன்ற பானங்களைத் தவிர்க்கலாம். காபியில் உள்ள கா∴பின் பதற்றத்தையும் எரிச்சலையும் அதிகப்படுத்தும்.

இந்தச் சமயத்தில் விற்றமின் ஏ,டி அவசியம். இவை அதிகம் உள்ள கரட், பசலைக்கீரை, பால் போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். மார்பக வலி, களைப்பு போன்றவற்றிலிருந்து நிவாரணம்பெற, விற்றமின் பி6 உதவும். மீன், கோழி, வாழை, உருளை போன்றவை விற்றமின் பி6 உள்ள உணவுகள். மன அழுத்தம் நீங்க விற்றமின் 'சி' உள்ள ஒரேஞ்சு, திராட்சை, எலுமிச்சை சேர்த்துக் கொள்ளுங்கள்.

இந்த உணவுப் பழக்கங்களை மாதவிடாயின் ஒரு வாரத்துக்கு முன்பும், மாதவிடாயின் போதும் கடைப்பிடித்தல் நல்லது. எல்லாவற்றிற்கும் மேலாக குடும்பத்தாரின் ஆதரவு ஒவ்வொரு பெண்ணுக்கும் மிக முக்கியம். இதுதான் அவர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வாக அமையும்.

# குறட்டை விடுவது ஆபத்தின் அறிகுறியா..?



நாம் தூங்கும்போது, லேசான தூக்கத்தில் துவங்கி, ஆழ்ந்த தூக்கத்திற்குச் செல்கிறோம். இப்படி தூங்கும்போது, வாயின் மேல் பகுதியில் உள்ள தசைகளும், தொண்டைப் பகுதியும் ஓய்வு எடுத்துக்கொள்ளும் வகையில், தளர்ந்துவிடும். அப்போது, மூச்சுக் குழாயில் தற்காலிக அடைப்பு ஏற்படுகிறது. மூச்சு வெளியேறும் போது, இந்த அடைப்பை மீறி காற்று வெளியேறுவதால், விதவிதமான ஒலிகளை எழுப்புகிறது. இது தான் குறட்டைச் சத்தமாக நமக்குக் கேட்கிறது.

அதிக உடல் எடை கொண்ட குழந்தைகள் மற்றும் இள வயதினருக்கு குறட்டை ஏற்படுகிறது. கழுத்தைச் சுற்றி, அளவுக்கு அதிகமாக தசை வளர்வதால், சதை அடைப்பு உருவாகி, குறட்டை ஏற்படுகிறது.

குறட்டை என்பது, ஆபத்தான மருத்துவக் கோளாறாக இது கருதப்படுகிறது. ஆழ்ந்த தூக்க நிலைக்குச் செல்லும்போது, நம் கண்கள் வேகமாக அசையும். அந்த நேரத்தில் நம் மூச்சுக் காற்றும் வேகமாக உட்சென்று, வெளியேறும். இதற்கு, 'அப்ஸ்ட்ரக்டிவ் ஸ்லீப் அப்னியே' என்று பெயர். அந்த நேரத்தில் குறட்டையும் அதிகரிக்கும். ஒரு மணி நேரத்திற்கு, 15க்கும் .மேற்பட்ட முறை, நம் கண்கள் வேகமாக அசைந்து, மூச்சுக் காற்றும் வேகமாக உட்சென்று வெளிவருகிறது. குறட்டைவிடும் போது திடீரென நின்று, திடீரென அதிகரிக்கும் சுவாசத்தால், நம் உடலில் இரத்த அழுத்தம் அதிகரித்து, இதய அடைப்பு, திடீர் மரணம் ஆகியவை ஏற்படலாம்.

கவலை, மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள உயரதிகாரிகள், சாதாரண வாழ்க்கையை வாழ முடியாமல் தவிக்கின்றனர். உடற்பயிற்சி செய்ய அவர்களுக்கு நேரமே இல்லை. பள்ளிகளில் குழந்தைகள் விளையாட ஊக்குவிப்பதில்லை. மாலை நேரங்களில், 'டி.வி' பார்க்கவே நேரம் சரியாகிவிடுகிறது. உடல் பருமன் அதிகரித்த நிலை, தொற்றுநோய் போல பரவிவிட்டது.

போதைமருந்து சாப்பிடுபவர்களின் மூளையில், மூச்சு மையம் பாதிக்கப்படுவதால், அவர்களுக்கு இந்த நோய் ஏற்படலாம். தங்கள் பழக்கத்தை அவர்கள் நிறுத்திவிட்டால், குறட்டை, நோயிலிருந்து மீண்டுவிடலாம். மீதமுள்ள 70 சதவீதத்தினர், உடல் பயிற்சி மற்றும் சீரான உணவு முறை ஆகியவற்றை மேற்கொண்டு, உடல் பருமனைக் குறைத்தால் போதும் இப்பிரச்சினைகளிலிருந்து விடுபட்டுவிடலாம்.

# இரத்தம் சுத்தமடைய குங்குமப் பூ...

குங்குமப் பூ இரத்தத்தை சுத்தமாக்கும் தன்மை கொண்டது. இதனால் கருவுற்ற பெண்களுக்கு 5 மாதம் முதல் 9 மாதம்வரை கொடுப்பார்கள். இரத்தச்சோகையைப் போக்கி குழந்தையும் தாயும் ஆரோக்கியத்துடன் இருக்கச் செய்யும். பிறக்கும் குழந்தை நல்ல நிறப்பொலிவுடன் பிறக்கும் என்பது சித்தர் கருத்து.


குங்குமப் பூவை வெற்றிலையோடு சேர்த்து சாப்பிட்டு வந்தாலும் அல்லது பாலிலிட்டுக் காய்ச்சி அருந்தினாலும் பிறக்கும் குழந்தை நல்ல ஆரோக்கியத்துடன் பிறக்கும். பிரசவத்தின் போது உண்டாகும் வலியைக் குறைத்து குழந்தையை சுகப்பிரசவமாக பெற்றெடுக்க குங்குமப்பூ உதவுகிறது. பிரசவித்த தாய்மார்களுக்கு உண்டாகும் குருதியிழப்பை சரிசெய்யவும், மயக்கத்தைப் போக்கி புத்துணர்வு கொடுக்கவும், இரத்தச்சோகை ஏற்படாமல் தடுக்கவும் தினமும் 1/2 கிராம் அளவு 1 டம்ளர் பாலில் கலந்து அருந்துதல் நல்லது. குங்குமப் பூவை பாலில் இட்டு காய்ச்சி இரவு படுக்கைக்கு செல்லும்முன் அருந்திவந்தால் ஜீரண சக்தி அதிகரித்து நன்கு பசியைக் கொடுக்கும், வாய்ப்புண், வயிற்றுப்புண் குணமாகும், இரத்தம் சுத்தமாகும், இரத்தச்சோகை நீங்கும்.



அத்துடன், கருவுற்ற பெண்களுக்கு சளி, இருமல் இருந்தால் அது குழந்தையின் நலத்திற்கு கேடு விளைவிக்கும். சளி, இருமல் தாக்காமல் இருக்க குங்குமப்பூ சிறந்த மருந்தாகும். எப்படியோ, ஆரோக்கியமான குழந்தை பிறக்க குங்குமப்பூ உதவும் என்பது அழுத்தமான உண்மை.




# 22 - 25 வயது பெண்கள் சந்திக்கும் பிரச்சினைகள்



1. உடல் பருமன் ஏறாமல், நீங்கள் விரும்பிய அனைத்தையும் உங்களால் சாப்பிட முடியாது. பொது இடத்தில் விளையாட்டுத் தனமாய் இருக்க ஆசைப்பட்டாலும் இருக்கமுடியாது.

2. தினமும் முகத்தை பொலிவுற செய்யாவிட்டால், வாலில்லா குரங்கைப் போல் இருப்பீர்கள். யாராவது உங்களையே உற்றுப் பார்ப்பதுபோல் நினைத்தாலும் யாரும் பார்க்கவில்லை என்பதே உண்மையாக இருக்கும்.

3. முகப்பரு, நிறம் குறைவு, உடற்பருமன், மாதவிடாய் வலி இப்படி ஏதாவதொரு பிரச்சினையை ஒரே நாளில் முடித்துவிட ஏங்குவீர்கள்.

4. உறவினர் வீடுகளுக்குச் சென்றாலோ, சுப நிகழ்ச்சிகளுக்கு சென்றாலோ அத்தைமார்கலெல்லாம் எப்போது திருமணம் என்பார்கள்?

5. இந்த உலகைப் பற்றி உங்களுக்கு பள்ளிகளில் என்ன கற்பிக்கப்பட்டதோ, அது அத்தனையும் ஒன்றுமே இல்லை என்பது உங்களுக்கு தெரியவந்திருக்கும்.

6. வேலைக்காக எழுதும் தேர்வுகளில் தேர்ச்சிபெற்ற பின்னர் கூட, வேலை கிடைத்திருக்காது.


7. சிபாரிசு என்றவுடன் வேலை கிடைக்கும். இங்கு எல்லாமே அரசியல்தான் என்பதை புரிந்துகொள்வீர்கள். பெண்கள் என்றால் சிபாரிசுடன் சேர்ந்து புன்னகைக்காகவும் வேண்டும் என்றும் உணருவீர்கள். மேலதிகாரியின் சுரண்டலுக்கு பதிலாக செருப்பால் அடிக்கவேண்டும் என்று ஒரு தடவையாவது நினைப்பீர்கள்.

8. காதலுக்கு கண்கள் உண்டு என்பீர்கள். காதலைவிட நட்புச் சிறந்தது என்று உணர்வீர்கள். ஆணும் பெண்ணும் நட்புடன் இருக்க முடியுமா என்ற கேள்வி ஒரு நாளில் ஆயிரம் முறை வந்துபோகும்.

9. கற்பு, கலாசாரம், நாகரிகம் எல்லாவற்றுக்கும் நடுவில் உங்களுக்கென்று தனிவட்டம் அமைத்து அதில் சுதந்திரமாக வாழ ஆசைப்படுவீர்கள். ஆனால் ஒவ்வொரு நாளும் இதுதொடர்பான மூன்று பிரச்சினைகளையாவது எதிர்நோக்குவீர்கள்.

10 பஸ்ஸில், தெருவில், கல்லூரியில் சிலமோசமான தருணங்களை சந்திக்கும்போது, ஆணாகப் பிறந்திருக்கலாம் என்று ஒரு தடவையாவது நினைப்பீர்கள். நீங்கள் பெண்ணாக பூரிப்படையும்போது, யாராவது ஏமாற்ற காத்திருப்பார்கள்.

# பெண்களுக்கெதிரான வன்முறைகள் நிகழ்த்தப்படும் முறைகள்




பெண்களுக்கு எதிரான வன் முறை இனம் வயது பாலியல் நோக்கு மதம் அல்லது பால் ரீதியி லான வேறுபாடின்றி யாருக்கும் ஏற்படலாம். பெண்களுக்கு எதிரான வன்முறையானது சமூக பொருளா தார பின்னணியுடன் கல்வியறிவு மட்டம் கூடியது. வீட்டு வன்முறை யானது எதிர்ப்பவர் இருவருக்கும் அல்லது அதே பாலினம் கொண்டவர் களுக்கிடையில் மற்றும் மிக நெருங்கிய திருமணமான நண்பர்கள் ஒன்றாக தங்கியிருப்பவர்கள் மத்தியில் இடம்பெறலாம்.

வீட்டு வன்முறையானது பாதிக்கப்பட்டவரை மட்டுமன்றி முறையே குடும்ப அங்கத்தவர்கள், நண்பர்கள், சக தொழிலாளர்கள், வேறு நேரில் பார்த்தவர்கள், இவர்களுடன் பெருமளவில் சமுதர்யத்தையும் பாதிக்கக் கூடியது.

வீட்டு வன்முறையை நேரில்' சந்தித்து அத்தடன் வளரும் பிள்ளைகள் இக்குற்றத்தினால் மிகவும் அதிகமாக பாதிக்கப்படுகின்றனர். வீட்டில் அடிக்கடி இவ்வாறான வன்முறைகளை சந்திக்கும் பிள்ளைகள் சமூக உடல்ரீதியான பல்வேறு பிரச்சினைக்கு முகம் கொடுப்பதோடு வன்முறை சாதாரண வாழ்க்கை முறை என்ற தோற்றப்பாட்டை வளர்த்து எதிர் காலத்தில் சமூகத்தில் அடுத்த சந்ததியினர் குற்றவாளிகளாகவும் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவராக வும் தம்மை அவ்வாறான சூழலுக்கு தள்ளப்பட்டு விடுகின்றனர்.

**உடல் ரீதியான துஷ்பிரயோகம்:**

தூக்குதல், அடித்தல், தள்ளுதல், கிள்ளுதல், இழுத்தல், கடித்தல், முடியை இழுத்தல் என்பன வற்றை நாம் உடல்ரீதியான வன்முறையாகவே காணப்படுகின்றது. மற்றும் மது அருந்த வைத்தல், போதைப்பொருள் பாவிக்கத் தூண்டுதல் போன்றவற்றை யும் நாம் அவ்வாறான உடல்சார்ந்த ஒரு பெண் களுக்கு எதிரான வன்முறையாகவே கருதலாம்.

**பாலியல் துஷ்பிரயோகம்:**

ஆபத்து ஏற்படும்வகையில் பால்ரீதியான உறவுச் செயற்பாட்டுக்கு முயற்சித்தல் அல்லது சம்மதமின்றி அவ்வாறான செயற்பாட்டிற்கு முயற்சித்தல். பாலியல் துஷ்பிரயோகத்திற்கு மட்டுமன்றி உடல்ரீதியாக ஏற்படுத்தப்படும் தாக்குதல்கள் உடல்ரீதியாக தாக்கம் ஏற்படுத்திய பின் தவறான பாலியல் உறவுக்கு முயற்சித்தல் மரியாதைக் குறைவாக ஒரு பாலியல்ரீதியான பயமுறுத்தல் என்பனவற்றை நாம் பாலியல்சார்ந்த துஷ்பிரயோகமாக கொள்ளலாம்.

**மன எழுச்சி ரீதியான துஷ்பிரயோகம்:**

ஒருவரின் சுயகௌரவத்தையும் உணர்வு களையும் பாதிக்கும்வகையில் தாக்கத்தை ஏற்படுத்தல். இது விமர்சனத்திற்கு அப்பாற்பட்ட தாக ஒருவரின் திறமைகளை குறைத்தல் பெயரை இழுக்கப்படுதல் அல்லது அவனது - அவளது பிள்ளைகளை தொடர்புபடுத்தி ஒருவரது பெயரை அவமதித்தல் என்பனவற்றை நாம் இங்கு மன எழுச்சி சார்ந்த துஷ்பிரயோகமாகவே நாம் கொள்ளலாம்.

**பொருளாதார துஷ்பிரயோகம்:**

ஒருவரது நிதி வளங்களைக் கட்டுப்படுத்தி நிதிக்காக தனிநபரில் தங்கியிருக்கும் நிலை ஏற்படுத்தல். பணம் கிடைக்கும் வழிவகைகளை ஏற்படுத்தாமல் முடக்குதல் மற்றும் வேலைக்குச் செல்லுதல். பாடசாலை செல்லுதல் போன்ற நடவடிக்கைகளை கட்டுப்படுத்தல் போன்ற செயற்பாடுகளை நாம் இங்கு உள்ளடக்க முடியும்.

**உள ரீதியிலான துஷ்பிரயோகம்:**

பயமுறுத்தல் மூலம் பயன் ஏற்படுத்தல். உடல் ரீதியாக குறித்த நபருக்கும் துணைவருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் துணைவரின் குடும்பத்தவற்கு அல்லது நண்பர்களுக்கு தீங்கு விளைவித்தல் செல்லப்பிராணிகளின் உடைமை- களை அழித்தல், குடும்பத்தவர் நண்பர் அல்லது பாடசாலை மற்றும் தொழில்புரியும் இடத்தில் இருந்து பிரித்து தனிமைப்படுத்தல் ஆகியன அடங்கும்.

# வாரம் ஒரு சமையல்
## இறால் பூண்டு குழம்பு



**தேவையான பொருட்கள்:**

இறால் - 250 கிராம்
வெங்காயம் - 1 (நறுக்கியது)
பூண்டு - 1 கரண்டி (பொடியாக நறுக்கியது)
தக்காளி - 4 (நறுக்கியது)
எலுமிச்சை சாறு - 1 கரண்டி
மஞ்சள் தூள் - 1 கரண்டி
மிளகாய் தூள் - 1 கரண்டி
சீனி - 1/2 கரண்டி
உப்பு - தேவையானளவு
கறிவேப்பிலை - சிறிது
எண்ணெய் - தேவையான அளவு

**செய்முறை:-**

முதலில் இறாலை நன்கு சுத்தம்செய்து, நீரில் அலசி தனியாக வைத்துக் கொள்ளவேண்டும். பின்னர் அதனை ஒரு பாத்திரத்தில் போட்டு, எலுமிச்சை சாறு மற்றும் உப்பு சேர்த்து, 10 நிமிடம் ஊற வைத்துக் கொள்ளவேண்டும்.

பின்பு ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் தேவையான அளவு எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், வெங்காயம் சேர்த்து 3- 4 நிமிடம் வதக்கி, பூண்டு சேர்த்து 2 நிமிடம் வதக்கவேண்டும்,

பின் நறுக்கிய தக்காளி, மஞ்சள் தூள், மிளகாய் தூள், சீனி மற்றும் உப்பு சேர்த்து, 5 நிமிடம் தீயை குறைவில் வைத்து கிளறி விடவேண்டும். அடுத்து ஊற வைத்துள்ள இறாலை சேர்த்து, 1 நிமிடம் வேகவைத்து, பின் 1/2 கப் தண்ணீர் ஊற்றி, மூடிவைத்து 10-15 நிமிடம் தீயை குறைவில் வைத்து வேக வைக்கவேண்டும். இறாலானது நன்கு வெந்ததும், அதனை இறக்கி விடவேண்டும். இப்போது சுவை யான பூண்டு இறால் குழம்பு தயார்!

**வாசகர்களின் கவனத்திற்கு...**

முரசு வாசகர்களின் உரிமையான வேண்டுகோளுக்கு அமைவாக. (முரசு 1021 - வாரமொரு அதிர்ஷ்டசாலி - 375) இப்போட்டியிலிருந்து வெற்றியாளருக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூபா 250/= என்பதை அறியத்தருகின்றோம்.

**250/= ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**

**பரிசுப் போட்டி இல :-385**

**கேள்வி: பெண்களுக்கு உடல்ரீதியாக நடைபெறும் வன்முறைகள் எவை?**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 23.09.2013**

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 385
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :-383 இற்கான விடை:- மனதைப் பதற்றமின்றி வைத்திருத்தல்
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி:- S.மோகனதாசன், திருமுறிகண்டி.

385

பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
தே.அ. அட்டை இல : ..............................
விடை : ..............................
..............................
கையொப்பம் : ..............................

## அரபு உலகத்தில் இயங்கிடும் ஒரேயொரு மதச்சார்பற்ற அரசான சிரியா

ஆப்கானிஸ்தான், லிபியா, துனிசியா, ஏமன் மற்றும் செச்சன்யா நாடுகளைச் சேர்ந்த இஸ்லாமியக் குழுக்களும் இப்போராட்டத்தில் இணைந்து கொண்டுள்ளன. முப்பதாண்டுகளுக்கு முன்பு ஆப்கானிஸ்தான் என்ன செய்ததோ அதைப் போன்றே இப்போது சிரியாவிலும் இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் படையினருக்கு அமெரிக்கா அனைத்து உதவிகளையும் செய்துவருகிறது. அரபு உலகத்தில் இயங்கிடும் ஒரேயொரு மதச்சார் பற்ற அரசான சிரியாவை பலவீனப்படுத்தவேண்டும் என்பதே அமெரிக்காவின் ஒரே குறிக்கோளாகும். சிரியாவில் கலகம் செய்துவரும் கும்பல் விரைவில் தன்னுடைய இலட்சியத்தை எய்திடும் என்றும், சிரியா ஆட்சி தூக்கி எறியப்படும் என்றும் அமெரிக்கா எதிர்பார்த்தது. ஆனால் அது நடைபெறவில்லை.

தற்போது நடைபெற்றுவரும் மோதல்களின் காரணமாக இலட்சக்கணக்கானோர் உயிரிழந்திருக் கிறார்கள். இருபது இலட்சத்திற்கும் மேற்பட்டோர் அண்டை நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள்.

ஐ.நா. மன்றத்தின் ரஷ்யத் தூதர், சிரியாவில் அலெப்போ என்னுமிடத்தில் தாக்குதல்களில் ஈடுபட்டுள்ள கலகக் கும்பல்கள்தான் சரின் வாயுவை உபயோகப்படுத்துகின்றன என்பதை தக்க ஆதாரத்துடன் நிரூபித்தார். கடைசியாக ஆகஸ்ட் 21 அன்று டமாஸ்கஸ் அருகில் 'கௌதா' என்னு மிடத்தில் நடைபெற்ற மோதலில் 'சரின் வாயு' பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அன்றைய தினம்தான் ஐ.நா. ஆய்வாளர்கள் டமாஸ்கஸ் போய்ச் சேர்ந்தி ருந்தனர். சிரிய அரசாங்கம் மோதல்களில் வாயு பயன்படுத்தப்படுவதாக எழுந்துள்ள புகார்களை விசாரணை செய்வதற்காக ஐ.நா. ஆய்வாளர்களை சிரியா அரசாங்கம் அனுமதித்தபின்னர் இச்சம்பவம் நடந்துள்ளது.

## ஆயுதந்தாங்கிய ஐந்து அமெரிக்க கப்பல்கள்

ஆயுதந்தாங்கிய ஐந்து அமெரிக்கக் கப்பல்கள் குருயீஸ் ஏவுகணைகளுடன் கிழக்கு மத்திய தரைக்கடல் நோக்கி நகரத் துவங்கியுள்ளன. இராணுவத் தாக்குதல்கள் நிச்சயம் நடைபெற விருக்கிறது. ஐ.நா. ஆய்வாளர்கள் சிரியாவை விட்டுப் புறப்பட்டவுடனேயே இவை நடத்தப்பட இருக்கின்றன என முன்னர் எதிர்பார்க்கப்பட்டது. அநேகமாக எந்த நிமிடமும் இது நிகழலாம் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கேமரான் மற்றும் பிரெஞ்சு அதிபர் பிரான்காய்ஸ் ஹாலண்டே இராணுவத் தாக்குதல்களில் தங்கள் நாடுகளும் இணைந்துகொள்ளத் தயாராயிருப்பதாகப் பிரகடனம் செய்திருந்தார்கள். எனினும் பிரிட்டன் பின்வாங்குகிறது.

அமெரிக்க காங்கிரசின் ஒப்புதல் கிடைத்த பின்னர் இராணுவ நடவடிக்கை தொடரும் என்று அவர் அறிவித்திருக்கிறார். அமெரிக்க காங்கிரஸ் செப்டம்பர் 9 அன்று மறுபடியும் கூடவிருந்தது. ஒபாமா, அதிபர் என்ற முறையில், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆளும் வர்க்கநலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். அவர் மிகவும் அர்க்கத் தனமாகவும், வலதுசாரி சிந்தனைப்போக்கும் உடைய ரிபப்ளிகன் கட்சியினரின் ஆதரவையே மிகவும் நம்பி இருக்கிறார். பிரான்ஸ், தன்னுடைய முன்னாள் காலனியாக இருந்த சிரியாவுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையில் இணைந்திட இன்னமும் அறிவிக்கவில்லை.

## ஈரானைத் தனிமைப்படுத்த அவை விரும்புகின்றன

அமெரிக்கா, அதன் மேற்கத்திய கூட்டாளிகள் மற்றும் இஸ்ரேல் சிரியாவை பலவீனப்படுத்த விரும்புகின்றன. இவ்வாறு செய்வதன்மூலம் ஈரானைத் தனிமைப்படுத்த அவை விரும்புகின்றன. லிபியாவில் செய்ததைப்போல அல்லாமல், இராணு வத் தலையீட்டிற்கு ஐ.நா.வின் அனுமதியை இதற்கு அவர்கள் பெற்றுவிட முடியாது. ஏனெனில் ரஷ்யாவும் சீனாவும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றன.

ஆயினும், மேற்கு ஆசியாவை அதன் எண்ணெய் மற்றும் வாயு இருப்புகளுக்காகத் தங்கள் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும், தங்கள் ஆதிக்கத்தை அங்கே நிலைநிறுத்த வேண்டும் என்கிற ஏகாதிபத்தியத்தின் எண்ணத்தை அதனால் மூடிமறைக்க முடியவில்லை. ஈராக்கிலும், லிபியா விலும் அமெரிக்காவும் மற்றும் மேற்கத்திய நாடுகளும் எண்ணெய் வளங்களைத் தற்போது தங்கள் கட்டுப்பாடுகளில் கொண்டுவந்துவிட்டன. இருநாடுகளுமே அமெரிக்க - நேட்டோ தலையீடு களுக்குப் பின்னால் ஏற்பட்ட விளைவுகளால் பிரிவினை சக்திகளின் மோதல்களை சந்தித்துக் கொண்டிருக்கின்றன.

"அமெரிக்காவே, சிரியாமீது கை வைக்காதே" என்ற கோரிக்கையுடன் உலக அளவிலான இயக்கம் உருவாகிக்கொண்டிருக்கிறது.

## சிரியா மீது தாக்குதல்: ஜி20 நாடுகள் இடையே கருத்து வேறுபாடு

ரஷ்யாவின் செயிண்ட் பீட்டர்ரஸ்பர்க் நகரில் நடைபெற்ற ஜி-20 உச்சிமாநாட்டில் ரஷ்ய அதிபர் புடின், அமெரிக்க அதிபர் ஒபாமா உள்ளிட்ட சர்வ தேச நாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

சிரியாமீது தாக்குதல் நடத்துவதற்கான அமெரிக்காவின் திட்டம் குறித்து ஜி-20 நாடுகளின் தலைவர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட் டுள்ளது.

ஜி-20 நாடுகளின் தலைவர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது என்பதை, விருந்தில் பங்கேற்ற இத்தாலி நாட்டின் பிரதமர் என்ரிகோ ரெட்டா உறுதிப்படுத்தியுள்ளார். அவர், டுவிட்டர் இணையத்தளத்தில் இத்தகவலை வெளியிட்டிருந்தார்.

## சர்வதேச சட்டத்துக்கான சவப்பெட்டியின்மீது அடிக்கப்பட்ட மற்றொரு ஆணி

ரஷ்ய அதிபர் மாளிகை செய்தித் தொடர் பாளர் ஒருவர் கூறுகையில், "சிரியா மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால், அது சர்வதேச சட்டத்துக்கான சவப்பெட்டியின் மீது அடிக்கப்பட்ட மற்றொரு ஆணியாக இருக்கும். இந்த விவகாரத்தில் ஜி-20 நாடுகளின் தலைவர் களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. ஜி-20 அமைப்பின் உறுப்பு நாடுகளைப் பொறுத்தவரை, சிரியா மீதான நடவடிக்கையை ஆதரிக்கும் நாடுகளைவிட, எதிர்க்கும் நாடுகளே அதிகம்" என்றார்.

அமெரிக்கா தாக்குதல் நடத்துவதற்கு ரஷ்ய அதிபர் புடின் ஏற்கெனவே கடந்த வாரம் எதிர்ப்பு தெரிவித்திருந்தார். சீனா, ஐரோப்பிய யூனியன், வத்திக்கான் உள்ளிட்டவை சிரியாமீது தாக்குதல் நடத்தக் கூடாது என்பதில் உறுதி யுடன் உள்ளன. ஐ.நா. ஒப்புதலின்றி சிரியா மீது எடுக்கப்படும் எந்த நடவடிக்கையும் சட்டவிரோதமானது என்று ரஷ்யாவும், சீனாவும் வலியுறுத்திக் கூறியுள்ளன.

சிரியாமீது இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு சர்வதேசக் கூட்டணி ஒன்றை உருவாக்க இந்த உச்சிமாநாட்டில் முயற்சியெடுக்க ஒபாமா முனைந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், மற்ற நாடுகளிடையே இந்த விவகாரத்தில் கருத்து வேற்றுமை நிலவியதால் அவரது முயற்சிக்குப் பலன் கிடைக்கவில்லை. இதையடுத்து, இந்த விவகாரம் தொடர்பாக ஐ.நா. பாதுகாப்பு கவுன் சிலில் ரஷ்யாவின் ஆதரவை நாடும் முயற்சி யைக் கைவிட்டுவிட்டதாக அமெரிக்கா கூறி யுள்ளது.

## ஐ.நா., பாதுகாப்பு கவுன்சிலின் அனுமதியின் பேரில் சிரியா மீது நடவடிக்கை: மன்மோகன்

சிரியா நாட்டின்மீது, எந்த நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், அது ஐ.நா., வரம்புக்கு உட் பட்டதாக இருக்கவேண்டும், எனப், பிரதமர் மன் மோகன் சிங் கூறியுள்ளார்.

கடந்த, 21ம் திகதி, டமாஸ்கஸ் நகரத்துக்கு அருகே, இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப் பட்டதில், 1,300 பேர் பலியாயினர். இதற்குரிய தடயங்களை ஐ.நா., சிறப்பு ஆய்வாளர்கள் பரிசோதித்துவருகின்றனர்.

ரஷ்ய அதிபர், விளாடிமிர் புடின் அளித்த விருந்தின்போது, பிரதமர் மன்மோகன்சிங் பேசிய தாவது: இரசாயன ஆயுதம் சிரியாவில் பயன்படுத்தப் பட்டாலும், உலகில் எங்கு பயன்படுத்தப்பட்டாலும் அது, கண்டனத்துக்குரியது. சிரியாவில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டது குறித்து, ஐ.நா., நிபுணர்களின் அறிக்கை, வெளிவரும்வரை, உலகத் தலைவர்கள் அமைதிகாப்பது நல்லது. சிரியாவில், இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டது உறுதியானால், அந்நாட்டின் மீது மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கையும், ஐக்கிய நாடுகள் சபையின் வரம்புக்கு உட்பட்ட தாக அமையவேண்டும். சிரியாமீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள, ஐ.நா., பாதுகாப்பு கவுன்சிலின் அங்கீகாரம் தேவை. இவ்வாறு பிரதமர் மன்மோகன் சிங் பேசினார்.

## சிரியா மீது போர்:அமெரிக்கா வுக்கு ரஷ்யா கடும் எச்சரிக்கை

சிரியா மீது போர் தொடுக்க முயலும் அமெரிக்காவுக்கு ரஷ்யா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆயுதம் தாங்கிய குழுவினருக்கு அமெரிக்கா, இஸ்ரேல், சவுதி அரேபியா, துருக்கி ஆகிய நாடுகள் ஆயுத உதவியும், பொருளாதார உதவியும் அளித்துவருகின்றன. இந்த நிலை யில் சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸின் கிராமப்புற பகுதிகளில் கடந்த 21ஆம் திகதி சிரியா இராணுவத்தினருக்கும், ஆயுதக் குழுவினருக்கும் கடும் சண்டை நடந்துவந்தது. இதில் ஆயுதக்குழுவினர் பின்னடைவை சந்தித்து வந்தனர். இந்நிலையில் அன்றைய தினமே அப்பகுதி மக்கள்மீது இரசாயன குண்டுவீசி தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலை சிரியா இராணுவம்தான் நடத்தியது என ஆயுதக் குழுவி னர் குற்றஞ்சாட்டினர். ஆனால் சிரிய அரசின் இராணுவமோ கடுமையாக மறுப்பு தெரிவித்தது. இதனை பயன்படுத்தி அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளை நேரடியாக சிரயாவில் தலையிட வழிசெய்யும் வகையில் செய்யப்பட்ட சூழ்ச்சியே ஆகும் என குற்றஞ்சாட்டியது.

இதையடுத்து மத்திய தரைக்கடல் பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள அமெரிக்கப் போர் கப்பல்கள் போருக்கு தயார்நிலையில் உள்ளன. மேலும் அமெரிக்காவின் ஏவுகணை தாங்கி கப்பல் மத்திய தரைக்கடல் பகுதிக்கு விரைந்துள்ளது. மத்திய தரைக் கடல் அருகே நிறுத்திவைக்கப்பட்ட யூ.எஸ்.ஹாரி என்ற விமானம் தாங்கி கப்பல் சுயஸ் கால்வாய் வழியாக செங்கடலுக்கு விரைந்தது. இந்த கப்பலுக்கு பாதுகாப்பாக சிறிய கப்பல்களும் செல்கின்றன. மத்திய தரைகடல் டவுலான் துறைமுகத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள பிரெஞ்சு அணுசக்தி நீர்மூழ்கி கப்பலும் தாக்குதலுக்கு தயாராக உள்ளது. மேலும் ஐக்கிய அரபு குடியரசில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள அமெரிக்காவின் மிராஜ், ரபேல் ஜெட் விமானங்கள் தாக்குதலுக்கு தயார்ப்படுத்தப்பட்டுள்ளன.

இதுபற்றி சிரியாவின் தகவல் தொடர்பு அமைச்சர் ஒம்ரான் அல் ஜோபி கூறும்போது, தற்போதைய நிலையில் எங்கள் உள்நாட்டு பிரச்சினையில் யார் தலையிட்டாலும் அது தீயை வீசுவதற்கு சமமாகும். அந்தத் தீ சிரியாவை மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த மத்திய கிழக்கு நாடுகளை எரித்துவிடும் என்றார்.

இந்த நிலையில் ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லவராவ் போர் தொடுக்க முயற்சிக்கும் அமெரிக்காவுக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். இதுபற்றி அவர் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெர்ரியை தெரிவிக்கும்போது, சிரியாமீது அமெரிக்கா மற்றும் அதன் ஆதரவு நாடுகள் இராணுவ நடவடிக்கை எடுத்தால் மத்திய கிழக்கு ஆசியா மற்றும் வடஆபிரிக்க பகுதிகளில் கடும் விளைவுகள் ஏற்படும். அந்த பகுதிகளில் பெரும் ஆபத்தை ஏற்படுத்தும். சிரியா உள்நாட்டு விவகாரத்தில் அமெரிக்கா தலையிடுவது ரஷ்யாவுக்கு பெரும் கவலை அளிக்கிறது என்று தெரிவித்தார். மேலும், சிரியாவுக்கு ஆதரவாக ஈரான் குரல் கொடுத்துள்ளது.

ஈரான் நாட்டு வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் அபாஸ் அரக்ஜி கூறும்போது, சிரியாமீது தாக்குதல் நடத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது அபாயக்கோட்டை தாண்டும் நடவடிக்கையாகும். சிரியாவை நோக்கி போர் கப்பல்களை அனுப்புவதால் நிலைமை மேலும் தீவிரமாகுமே ஒழிய கட்டுப்படுத்த முடியாது. அபாயக்கோட்டை அமெரிக்கா தாண்டினால் விளைவுகளை வெள்ளை மாளிகை சந்திக்க வேண்டிவரும். எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுபவர்கள் மக்களிடமிருந்து தப்பமுடியாது என்றார்.

## இரசாயன குண்டுவீச்சு மேற்கத்திய நாடுகளின் சதியே

சிரியா அதிபர் பஷீர் அல் அசாத் ரஷ்ய பத்திரிகை இவஸ்தாவுக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:- சிரியா இராணுவம் மக்கள் மீது இரசாயன குண்டு எதுவும் வீசவில்லை. தங்கள் நாட்டு மக்கள்மீது இராணுவம் இரசாயன குண்டுவீசியதாக கூறுவது முட்டாள்தனமானது. இந்த குற்றச்சாட்டு மேற்கத்திய நாடுகளின் சதியாகும். தீவிரவாத குழுக்களுக்கு எதிராக சிரியா போராடிவருகிறது. ஆனால் தீவிரவாத குழுக்களுக்கு அமெரிக்காவும், சவூதி அரேபியா வும் ஆயுத உதவியும், பண உதவியும் அளித்து வருகின்றன.

இந்த போரில் தீவிரவாதிகள் அழிக்கப்படுவது உறுதி. ஒவ்வொரு மாதமும் சிரியாவுக்குள் 10 ஆயிரம் தீவிரவாதிகள் ஊடுருவிவந்து இராணுவத்தை எதிர்த்து போரிட்டுவருகிறார்கள். இதில் காயம் அடையும் தீவிரவாதிகளுக்கு இஸ்ரேல் நாட்டில் மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேற்கத்திய நாட்டுத் தலைவர்கள் சிரியாவை தங்கள் கைப்பாவை யாக்கிவிடலாம் என்று கனவு காண்கிறார்கள். அது நடக்காது. சிரியா எந்த நாட்டுக்கும் அடிபணியாது. சிரியாமீது போர்தொடுக்க அமெரிக்கா முயன்றுவருகிறது. சிரியாமீது போர் தொடுக்கப்பட்டல் அது அமெரிக்காவுக்கு தோல்வியில்தான் முடியும் என்று எச்சரித்தார்.

## சிரியா போர்: உலகம் முழுவதும் பரபரப்பு

சிரியாவில் போர் ஏற்படும் சூழல் உருவாகி யுள்ள நிலையில், இஸ்ரேலும், அமெரிக்காவும் இணைந்து மத்திய தரைக்கடல் பகுதியில் ஏவுகணைச் சோதனை நடத்தியதால் உலகம் முழுவதும் பரபரப்பு ஏற்பட்டது.

ஏவுகணைச் சோதனை நடத்தப்பட்டதை இஸ்ரேல் அரசு உறுதிசெய்துள்ளது.

இரு ஏவுகணைகள் வீசப்பட்டதாகவும் அவை இரண்டும் மத்திய தரைக் கடல் பகுதி யிலேயே விழுந்துவிட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மத்திய தரைக்கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் அமெரிக்கப் போர்க் கப்பல்களில் இருந்து இந்த ஏவுகணைகள் வீசப்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

இந்த ஏவுகணைகள் வீசப்பட்டதை ரஷ்ய ராடர்கள் கண்காணித்ததாக தகவல் வெளியானது. சிரியாவில் தாக்குதல் நடத்துவது குறித்து நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப்பெற அமெரிக்க அதிபர் ஒபாமா திட்டமிட்டிருக்கும் நிலையில், இந்த ஏவுகணைச் சோதனை நடந்துள்ளது. முன்னதாக சிரியாவை நோக்கி ஏவுகணைகள் வந்ததாகச் செய்திகள் வெளியானதால் உலக அளவில் பங்குச்சந்தைகளில் சரிவு ஏற்பட்டது.

## சிரியாவில் மனிதக் கேடயங்கள்: அரசு ஆதரவு அமைப்பினர் திட்டம்

அமெரிக்க தாக்குதலை சமாளிக்க மனித கேடயங்களாக மாறத் தயாராகுமாறு சிரியாவின் அரசுக்கு ஆதரவான அமைப்பினர் பிரசாரம் மேற்கொண்டுவருகின்றனர்.

அமெரிக்கா தாக்குதல் நடத்தும் வாய்ப்புகள் உள்ள பகுதிகளில் தற்காலிக கூடாரம் அமைத்து அவர்கள் தங்கிவருகின்றனர். ஓவர் அவர் பொடீஸ் (Over Our Bodies) என பெயரிடப்பட்டுள்ள இந்த பிரசாரத்தில் பங்கேற்க பலர் ஆர்வம் காட்டிவருவதாக தெரிகிறது.

"அரசே இரசாயனத் தாக்குதலை நடத்தியது" : பிரான்ஸ் உளவு தகவல்.

சிரியாவில் அதிபர் பஷர் அல் அசாதின் ஆதரவுப் படைகளே இரசாயன தாக்குதல் நடத்தியதாக பிரான்ஸ் உளவுப்பிரிவு தகவல்கள் தெரிவித்துள்ளன.

## "சிரியா: மனிதாபிமான பேரிடர்" இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய துயரம்

சிரியாவில் 15 நொடிக்கு ஒருவர் அகதியாவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

உள்நாட்டு போரால் நாட்டைவிட்டு வெளியேறி யவர்களின் எண்ணிக்கை 20 இலட்சத்தை தாண்டி விட்டதாக ஐ.நாவின் அகதிகள் ஆணையம் கூறுகிறது. ஏறக்குறைய 2 இலட்சம் பேர் 17 வயதிற்கும் குறைவானவர்கள் என கூறப்படுகிறது. ஓராண்டிற்கு முன்னதாக இந்த எண்ணிக்கை 2 இலட்சத்தை ஒட்டியே இருந்தது எனக் கூறும் அந்த அமைப்பு, இந்த போக்கு மிகவும் ஆபத்தானது என எச்சரித்துள்ளது.

மக்கள் எழுச்சியாக துவங்கியது இரண்டரை ஆண்டுகளாக உள்நாட்டுப் போராக மாறிவிட்டதனால் 1 இலட்சத்திற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருப்பதை ஐ.நா தொடர்ந்து சுட்டிக்காட்டிவருகிறது. இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய துயரம் என்றும், மனிதாபிமான பேரிடர் என்றும் ஐ.நாவின் சிறப்பு தூதர் ஆண்டானியோ குடெர்ரஸ் (Antonio Guterres) கூறியிருக்கிறார்.

உள்நாட்டிலேயே சுமார் 40 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அகதிகளாக வெளியேறுபவர்கள் அண்டை நாடுகளில் தங்கிவருவதால் அந்த நாடுகளில் போதிய கட்டமைப்பு வசதிகள், பொருளாதார நிலைமை பாதிக்கப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. பதிவு செய்யக்கோரி காத்திருக்கும் சிரியா அகதிகளின் பட்டியலையும் ஐ.நா வெளியிட்டுள்ளது. அதன்படி லெபனானில் 7 இலட்சம், ஜோர்தானில் 5 இலட்சம், துருக்கியில் நான்கரை இலட்சம், ஈராக்கில் ஒன்றே முக்கால் இலட்சம் என தெரியவந்துள்ளது.

## அசாத்துக்கு சீனா, ரஷ்யா ஆதரவு

மத்திய கிழக்குப் பகுதியில் துருக்கி, லெபனான், ஜோர்டான், இஸ்ரேல் போன்ற நாடுகள் சூழ அமைந்திருக்கிறது சிரியா. ஒரு காலத்தில் ஒட்டாமன் பேரரசின் பகுதியாக இருந்த இந்த நாடு, பின்னர் பிரான்சின் காலனி ஆதிக்கத்தின் கீழ்வந்தது. 1946ஆம் ஆண்டில் பிரான்ஸின் ஆதிக்கத்தில் விடுதலை கிடைத்த பிறகு பல ஆட்சி மாற்றங்கள் நடந்தன.

1970ஆம் ஆண்டு முதல்முறையாக அசாத்தின் குடும்பம் சிரியாவில் ஆட்சிக்கு வந்தது. 1970 முதல் ஹபீஸ் அல்-அசாத்தின் ஆட்சியின் கீழ் இருந்த சிரியா, அதன்பிறகு அவரது மகனும் தற்போதைய அதிபருமான பஷார் அல்-அசாத்தின் கட்டுப்பாட்டுக்கு வந்தது. கடந்த இரு ஆண்டுகளுக்கும் மேலாக அங்கு நடந்துவரும் உள்நாட்டுப் போருக்கு முக்கியமான காரணமாகக் கூறப்படுவது அந்நாட்டின் மதப் பிரிவினை.

ஷியா இஸ்லாமியப் பிரிவான அலாவி மதத்தவர் 10 சதவீதமும், சன்னி பிரிவினர் 74 சதவீதமும், கிறிஸ்தவர்கள் 10 சதவீதமும் சிரியாவில் வசிக்கின்றனர். ஆட்சியில் இருக்கும் அசாத், அலாவி இனத்தைச் சேர்ந்தவர். அவருக்கு எதிராகச் சண்டையிட்டு வருபவர்கள், சன்னி பிரிவைச் சேர்ந்தவர்கள். இந்தச் சண்டையில் அரசுப் படைகளும், அவற்றுக்கு ஆதரவாக சில ஆயுதக் குழுக்களும் இருக்கின்றன. எதிரணியில் சிரிய விடுதலை இராணுவம் என்ற ஆயுதப் பிரிவும், சிரிய தேசியக் குழு என்ற அரசியல் பிரிவும் நிற்கின்றன.

உள்நாட்டுப் போர் தொடங்கிய காலத்தில் இருந்தே அண்டை நாடுகளான துருக்கி, ஈராக், ஜோர்தான், லெபனான் போன்ற நாடுகளுக்கு இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயரத் தொடங்கினர். இது சர்வதேச சமூகத்துக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியது. பொதுவாக மத்திய கிழக்கில் உள்நாட்டுப் போர் நடக்கும் நாடுகளில் அமெரிக்காவோ, பன்னாட்டுப் படைகளோ தலையிடுவது வழக்கம்.

லிபியாவில் கடாபி, ஈராக்கில் சதாம் உசைன், ஆப்கானில் தலிபான்கள் ஆட்சிக்கு எதிராக இதுபோன்ற தலையீடுகள் நடந்தன. ஆனால், சிரிய அரசுக்கு ஆயுத விற்பனை செய்துவரும் ரஷ்யா, ஷியா முஸ்லிம் உறவுகொண்ட ஈரான், வர்த்தக உறவு கொண்ட சீனா ஆகியவை அசாத்துக்கு ஆதரவாக இருப்பதால், அந்நாட்டுக்கு எதிரான நடவடிக்கை எடுப்பதற்கு மேற்கத்திய நாடுகள் தயக்கம் காட்டிவருவதாகக் கூறப்படுகிறது.

## அமெரிக்கா, சிரியா மீதான இராணுவ நடவடிக்கையில் பல நாடுகள் பங்கெடுப்பு

சிரியாமீது மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கையில் 10க்கு மேலான நாடுகள் கலந்துகொள்ளும் என்று அமெரிக்க வெளி யுறவு அமைச்சர் ஜோன் கேரி செப்டம்பர் 7ஆம் நாள் பிரான்ஸின் பாரிஸ் நகரில் தெரிவித்தார். அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் லாரண்ட் ஃபாபியுஸுடன் நடைபெற்ற கூட்டுச் செய்தியாளர் கூட்டத்தில் அவர் இவ்வாறு கூறினார்.

வில்னியஸ் வெளியுறவு அமைச்சர் நிலை கூட்டத்தில் சிரியாவுக்கு வன்மையான கண்டனம் தெரிவித்த ஐரோப்பிய நாடுகளின் அறிக்கையை வரவேற்பதாகவும் கேரி தெரிவித்தார்.

குறுகியகால, தெளிவான இலக்கைக் கொண்ட இராணுவ நடவடிக்கையை நடத்த பிரான்ஸும் அமெரிக்காவும் விரும்புவதாக ஃபாபியுஸ் கூறினார். சிரியாவின் மீதான இராணுவத் தாக்குதல் திட்டத்தால் பிரான்ஸும் அமெரிக்காவும் சர்வதேசத்தில் தனிமைப்படுத்தப்பட்டன என்பதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

சிரியாமீது இராணுவத் தாக்குதல் நடவடிக்கைக்கு எதிர்ப்புத்தெரிவிக்கும் வகை யில், நூற்றுக்கு மேலான ஆர்ப்பாட்டக் காரர்கள் அதேநாள் வாஷிங்டனில் அமைந்துள்ள நாடாளுமன்றம் மற்றும் வெள்ளை மாளிகைக்கு முன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆனால் "இதோ அமெரிக்கா தாக்கப் போகிறது" என்றே அமெரிக்காவின் பிரபல அச்சு ஊடகங்கள் செய்திகள் வெளியிடுகின்றன. அமெரிக்கக் காங்கிரஸ் முடிவு இன்று அல்லது நாளை வெளிவரும். அதன்பின்னர் தீர்க்கமான அமெரிக்க செயற்பாடு தெரியவரும்.



# எந்த மலர் தேவை



அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியில் புதிதாக நுழைந்துள்ளவர் பவாட் அகமட். இவர் தனது முதலாவது சர்வதேச நுழைவாக இங்கிலாந்துக்கு எதிரான இருபதுக்கு இருபது ஆட்டத்தில் பங்குபற்றினார். இவ்வேளையில் அணியும் உடையில் காணப்பட்ட மதுபானம் தொடர்பான விளம்பரத்தை அகற்றுமாறும், தனது மதநம்பிக்கைக்கு விரோதமானதெனவும் கூறியிருந்தார். இதனை ஏற்று அந்த விளம்பரத்தை அகற்ற (V.B) அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை சம்மதித்திருந்தது. இதனால் அவுஸ்ரேலிய ரசிகர்கள் ஒரு பகுதியினர் ஆத்திரப்பட்டுள்ளார்கள். விளையாட்டையும் மதத்தையும் ஒன்றுக்குள் ஒன்று போட்டுக்குழப்பாதே என்று அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். மேலும் அவுஸ்ரேலிய பண்பாட்டை ஏற்றுக் கொள்ள முடியாதவர்கள் விலகிக்கொள்ள வேண்டும், அல்லது தம் நம்பிக்கையை தமக்குள் வைத்துக் கொள்ளவேண்டும் என்று காட்டமாகக் கூறியுள்ளனர்.

முன்னதாக ஹசிம் அம்லாவினாலும் (தென் ஆபிரிக்கா) இத்தகைய வேண்டுகோள் விடுக்கப்பட்டு குறித்த மது விளம்பரம் இல்லாமலே உடைகள் அணிந்து விளையாடிவருவது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்ற இன்னொரு சம்பவம் இங்கிலாந்தின் நியூகாசல் உதைபந்தாட்ட அணிக்கும் ஏற்பட்டது. இந்த அணியில் விளையாடும் ஆபிரிக்கக்கண்டத்தின் செனகல் நாட்டின் வீரர் பாப்பிஸ் ஸிஸி வட்டி பெறும் நிதி நிறுவனமொன்றின் விளம்பரத்தை அணிய மறுத்திருந்தார். கழகத்தின் மத்தியில் இது சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இதன் பின்னர் ஸிஸி கழகத்துடனும், இஸ்லாமிய அறிஞர்களுடனும் கலந்துரையாடிய பின் அந்த இலச்சினையுடன் விளையாடச் சம்மதித்திருந்தார்.

மீண்டும் பவாத்தின் விடயத்துக்கு வந்தால், இவர் ஒரு பாகிஸ்தானியர். தனக்கு தலிபான் குழுவினால் உயிராபத்து ஏற்படும் என்ற காரணம் கூறியே அவுஸ்ரேலியாவில் தஞ்சமடைந்தார். குடியுரிமையும் பெற்றார். கிரிக்கெட் அணியிலும் இடம்பிடித்தார். இப்போது எல்லாம் முடிந்துவிட்டது. தன் விருப்பங்களைத் திணிக்கலாம் என்று இவர் நினைப்பதாக அவுஸ்ரேலியர்கள் ஆத்திரப்படுகிறார்கள்.

ஆனாலும் அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை இவர் பக்கம் நிற்கிறது. இவர்மீது குற்றஞ்சாட்டுவது தவறென்று கூறுகிறது. இது அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபையின் உயர்ந்த பண்பைக் காட்டுகிறது. இதேவேளை உயர்ந்த தர கிரிக்கெட் வளம் நிறைந்துள்ள அவுஸ்ரேலியாவில் பவாத்தை விடச்சிறந்த அல்லது சமமான திறமைகொண்ட ஒரு லெக்ஸ்பின் பந்து வீச்சாளர் கிடைக்காமல் போனதுதான் ஆச்சரியம் மாற்றான் தோட்டத்து மல்லிகை வாசனைபுரியும் அவுஸ்ரேலியக் கிரிக்கெட் சபைக்கு, தன் தோட்டத்து லில்லி மலர்களைத் தெரியவில்லை என்பதுதான் ஆச்சரியம்.






ஜோசெப் கிருஷ்ணா

# புதுக்கவிதை



இலங்கையின் கிரிக்கெட் ஆர்வத்தை மென்மேலும் அதிகப்படுத்தும் வகையில் சிறிது மாற்றங்கள் உடனான கிரிக்கெட் ஆட்ட மொன்று அறிமுகப் படுத்தப்பட வுள்ளது. ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல போஷகராக அமைந்துள்ள இந்த ஆரம்ப நிகழ்வில், இந்த கிரிக்கெட் புதிய மாதிரியான உருவாக்கத்துக்குக் காரணமாக இருந்த நிஷாந்த ஹெட்டியாராச்சி மற்றும் ஜோண்டன் இருவரும் மாதிரி வெற்றிக் கிண்ணத்தை அமைச்சரிடம் கொடுத்தனர்.

புதிய கிரிக்கெட் ஆட்டத்தில் பயன்படுத்தப்படும் பந்து டென்னிஸ் பந்தைவிட நிறைகூடியதாக இருக்கும் இதேவேளை சர்வதேச கடின பந்தை விட (LEATHER BALL) கனம் குறைந்ததாக இருக்கும். இலங்கையின் பல பாகங்களிலும் இருந்தும் இந்தச் சுற்றுப் போட்டிக்கான வீரர்கள் தெரிவு செய்யப்பட்டு, இறுதியில் அமையப்போகும் பன்னிரண்டு அணிகளுக்கான வீரர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள். ஒரு ஆட்டம் என்பது ஒரு அணி எட்டு தலா ஓவர்கள் கொண்ட இரண்டு இனிங்ஸ் விளையாடுவதாக அமைந்திருக்கும் இறுதிப்போட்டியில் வெற்றிபெறும் அணிக்கு வெற்றிக் கிண்ணம் மற்றும் பத்து இலட்சம் ரூபா பணப் பரிசும், இரண்டாம் இடம்பெறும் அணிக்கு ஐந்து இலட்சம் ரூபா பணப்பரிசும் கிடைக்கும் வீரர்களுக்கான உடைகள், வர்ண உடைகளாக அமைந்திருக்கும். எனவே பன்னிரண்டு அணிகளுக்கும் பன்னிரண்டுக்கு மேற்பட்ட வர்ணக் கலவைகள் கொண்ட உடைகளாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம் இரவு, பகல் ஆட்டங்களாகவே இந்த ஆட்டங்கள் நடைபெறத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. ஆட்டங்கள் அனைத்தும் 'பல்லேகல' சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிறப்பாக, சகல கிரிக்கெட் ஆட்டங்களும் ரூபவாஹினி தொலைக் காட்சியில் நேரடி ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளதாகவும் அறிவிக் கப்பட்டுள்ளது. மேலும் சுற்றுப் போட்டி ஒக்டோபர் 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை நடை பெறவுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

வீரர்களைத் தேர்வுசெய்யும் முகமாக மாவட்டங்கள் மட்டும் மாகாண மட்டங்களில் மென்பந்துக் கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடுபவர்களுக்கு பந்து மற்றும் கால்காப்பு போன்ற வற்றைக் கொடுக்கவும் இதனை உருவாக்கிய எல்.பி.எல்.என்ரர்டெயின்மன்ஸ் நிறுவனம் தீர்மானித்துள்ளது. இலங்கை கிரிக்கெட் சபை இந்தப் புது அறிமுகம் பற்றிப் பேசுகையில், பாரம்பரிய கிரிக்கெட் முறைக்கு இது ஒன்றும் முரணானது அல்ல, இதேவேளை நாட்டின் கிரிக்கெட் வளர்ச்சியை அதிகப்படுத்தும் வகையில் இது அமையும் என்ற நம்பிக்கை உள்ளது என்று கூறியுள்ளது. மேலும் பாரம்பரிய கிரிக்கெட் தற்காலத்தில் அதிக செலவுள்ள விளையாட்டாக இருப்பதால் மாகாணங்களில் காணப்படும் வசதிகள் குறைந்த பாடசாலைச் சிறார்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமையும் எனவும் அமைச்சர் எடுத்துக் காட்டியுள்ளார். எனவே இது நல்லதொரு ஆரம்பம், வீரர்களின் ஆர்வத்தைப் பொறுத்து இது வேகமாக வளரும் என்று எதிர்பார்க்கலாம் அதோடு மகளிர் அணிகளும் விரைவில் இந்த விளையாட்டில் ஈடுபடும் என்றும் நம்பலாம்.

# இனியும் வேண்டாம் இப்படி



இலங்கை உதைபந்தாட்ட வரலாற்றில் ஒரு சில தினங்களுக்கு முன் ஏற்பட்ட கசப்பான நிகழ்வுபோல் என்றும் ஏற்பட்டதில்லை. தென் ஆசிய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நேபாள நாட்டின் காத்மண்டு நகரில் நடைபெற்றுவரும் இவ்வேளையில் இலங்கை அணி தனது முதலாவது ஆட்டத்தில் மாலைதீவுகள் அணியிடம் 10 - 0 என்றவகையில் மிகப்பரிதாபமாகத் தோற்றுவிட்டது.

இதன்காரணமாக ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் பாரிய மாற்றங்களைச் செய்யவேண்டி இருக்கும் என்று இலங்கை உதைபந்தாட்ட அணியின் பயிற்றுனர், பிரேசில் நாட்டின் குளோடியா றொபோட்டோ கூறியிருந்தார். ஆனாலும் என்ன ஆப்கானிஸ்தானுக்கு எதிராக 3 - 1 என்று இலங்கை அணி மீண்டும் தோற்றுவிட்டது. மாலைதீவுகள் அணியுடனான போட்டியில் இலங்கை அணியின் கோல் காப்பாளர் மொகமட். இம்ரான் முரட்டுத்தனமாக விளையாடியதால் முதல் இருபது நிமிடத்துக்குள்ளேயே சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார். போதாததற்கு முன்னணி வீரர் பண்டார வறக்கா கொடவும் காயம் காரணமாக வெளியேற அணி மிகப்பலவீனமாகப் போய்விட்டது.

ஆனாலும் இந்த நிலையில் தற்காப்பு ஆட்டத்தை மேற்கொள்ளும்படி தான் கேட்டுக்கொண்டும் அணிவீரர்கள் அதனைப் பின்பற்றவில்லை என்ற ஆதங்கம் பயிற்றுனரின் அறிக்கையில் இருந்து வெளிப்படுகிறது. எனினும் அவர் அணி வீரர்கள் பற்றிக் குற்றச்சாட்டுக்கள் எதனையும் முன்வைக்கவில்லை.

மாறாக இலங்கை அணி ஒரு நிலைமாறு காலத்தில் அல்லது இடைமாற்று நிலையில் இருப்பதாகவும் விரைவில் எல்லாவற்றையும் சீர் செய்துவிடலாம் என்றும் கூறியுள்ளார்.

எது எவ்வாறாயினும் ரசிகர்களைப் பொறுத்து எந்த நியாயமும் எடுபடப்போவதில்லை என்பதே உண்மை. என்னதான் தடங்கல்கள் ஏற்பட்டாலும்கூட ஒரு கோலும் போடாமல் பத்துக்கோல்களை விட்டுக்கொடுத்தல் என்பது எந்த மட்டத்திலும் ஜீரணிக்க முடியா துரதிர்ஷ்டவசமான நிலையில் இலங்கையின் உதைபந்தாட்டம் இப்போதுள்ள நிலையைவிட ஆரோக்கியமான நிலையில் இருந்த காலம் ஒன்றிருந்தது. இப்பொழுது ஏன் இப்படி ஒரு இருண்ட காலம் ஏற்பட்டது? உதைபந்தாட்டத்துக்கு பொறுப்பாக இருப்பவர்கள் எல்லோரும் சேர்ந்து இந்நிலையை மாற்றியமைக்க எல்லா வழிகளிலும் முயற்சி செய்யவேண்டும்.

# நினைத்தது நடந்தது




நாவலப்பிட்டி நகரில் 39ஆவது தேசிய விளையாட்டு விழா நடைபெற்று முடிவடைந்துவிட்டது. பல சர்ச்சைகள் குழப்பங்கள் இருந்தாலும்கூட நிறைவான பல அம்சங்களுடன் விளையாட்டு விழா முடிவடைந்தது மகிழ்ச்சிக்குரியதே.

இந்தப் போட்டிகளில் சிறந்த வீராக 2.18 மீற்றர் கடந்த உயரம் பாய்தல் வீரர் மஞ்சுளகுமாரவும், சிறந்த வீராங்கனையாக 54.52 செக்கன்களில் 400 மீற்றர் ஓட்டத்தை முடித்து வெற்றிகண்ட சந்திரிகா சுபாசினியும் தெரிவுசெய்யப்பட்டார்கள். இவர்கள் இருவரும் பரிசாக மோட்டார் சைக்கிள்களைப் பெற்றுக்கொண்டார்கள். இதேவேளை தேசிய சாதனையை முறியடிக்கும் வீரருக்கு ஒரு கார் பரிசாக அளிக்கப்படும் என்று அறிக்கையும் விடப்பட்டிருந்தது. இருந்தாலும் விளையாட்டுத் திருவிழா நடைபெற்ற மைதானம் சாதனைகள் புரிய உகந்ததாக இல்லை என்ற விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டிருந்தன.

ஆனாலும் கூறப்பட்டிருந்த வசதிக்குறைவுகளுக்கும் அப்பால் சாதனை முறியடிக்கப்பட்டமை மிகுந்த வியப்புக்குரியதாகும். மொத்தத்தில் இரண்டு மைதான சாதனைகளும், ஒரு தேசிய சாதனையும் பதியப்பட்டன. தேசிய சாதனை புரிந்தவர் இலங்கையின் முன்னணி கோலுன்றிப் பாய்தல் வீராங்கனை அனோமா கருணாவன்ஸ. இவரது சாதனை உயரம் 3.31 மீற்றர். IAAF தரவரிசையில் இந்த உயரம் மிகக் குறைந்த உயரமாயினும் இலங்கையில் சாதனையைப் பதிவுசெய்ய இந்த உயரம் போதுமானதாக இருந்தது. இதற்காக அனோமா புத்தம்புது அல்டோ கார் ஒன்றைப் பரிசாகப் பெற்றுக்கொண்டார். இன்னொரு வீரரும் கார் ஒன்றைப் பரிசாகப் பெற்றுக்கொண்டார். பளு தூக்கும் வீரர் இவர் தேசிய பளு தூக்கும் சாதனையை முறியடித்தமைக்காக இந்திக திஸா நாயக்கவும் ஓர் கார் வென்றுகொண்டார்.

இறுதி முடிவுகளின்படி முறையே: மேல் மாகாணம், மத்திய மாகாணம், தென் மாகாணம் என்பன முதல் மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்டன. அடுத்த தேசிய விளையாட்டு விழா கிளிநொச்சி நகரில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# எதிர்கால இலங்கையில், கிழக்கு

— பிரகஸ்பதி —

கிழக்கு மாகாணத்தின் முக்கியத்துவம் மிக்க மூன்று அபிவிருத்தி வேலைகளை கடந்த மாதத்தின் இறுதித்தினத்தன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச திறந்து வைத்திருந்தார். அவற்றின் முக்கியத்துவங்கள் வித்தியாசப் பட்டாலும், கிழக்கில் வாழும் அனைத்து சமூகங்களுக்கும் அவை முக்கியமானவை யாகும். அந்தவகையில், இந்த வாரத்தில் இந்த விடயம் பற்றி ஆராயலாம்,

கிழக்கின் உதயம் திட்டத்தின்கீழ், கடந்த 9 வருடங்களில் பெருந்தொகையான அபி விருத்திகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த காலத்தில் யுத்த சூழ்நிலையினால் பாதிக்கப் பட்ட மட்டக்களப்பு விமான நிலையம் பாரிய அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. அதில் முக்கியமானதாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உல்லாசப் பிரயாணிகளின் வருகையினை அதிகரிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள், மக்களின் போக்குவரத் தினை மேம்படுத்தும், பொருளாதாரத்தினை உயர்த்தும் எனப்பல வகைப்பட்ட அபிவிருத்தி பாங்குகளை கைவிட்டு அமைதியாகவும் ஐக்கி யமாகவும் சகவாழ்வுடன் வாழவேண்டும். சமயத் தலைவர்கள் போதித்தவை அன்றைய காலத்தை விட இன்று மிகவும் முக்கியமானதாக உள்ளது. கடந்த 30 வருடங்களாக யுத்தத்தினால் பாதிக்கப் பட்டிருந்த வாகரைப் பிரதேசம் துரிதமான அபி விருத்தி முன்னேற்றத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது. எதிர்கால சந்ததியினரை நல்வழிப்படுத்த வேண்டிய பொறுப்பு சகல மதத் தலைவர்களுக்கும் இருக்கின்றது எனத் தெரிவித்திருந்தார்.

அதேநேரம், ஒலுவில் துறைமுகத்தை திறந்துவைத்து உரையாற்றுகையில், கடந்த கால சம்பவங்களை நினைவூட்டி மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்துவதன்மூலம் தேசிய நல்லிணக்கத்தினை கட்டியெழுப்ப முடியாது. வடக்காக இருந்தாலும் சரி, தெற்காக இருந் தாலும் சரி சகல மக்களின் தேவைகளையும் நிறைவேற்ற அரசாங்கம் தயாராகவுள்ளது. அரசாங்கம் வங்கிகளை விற்பனைசெய்வதாக பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன.

ங்களின் கஷ்ரங்கள் நீங்கவேண்டும் என்பது ஜனாதிபதியின் நல்லெண்ணமாக இருக்கிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தினைப் பொறுத்த வரையில், மட்டக்களப்பு விமான நிலைய புனரமைக்கென 1000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் புனரமைப்பு பணிகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ கடந்த செப்ரம்பர் 03ஆம் திகதி ஆரம்பித்துவைத்தார். இந்த புனரமைப்பு பணிகள் நிறைவுபெறும் பட்சத்தில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நேரடியாக மட்டக்களப்புக்கு வரக்கூடிய வசதிகள் ஏற்படும் என்பதும் ஒரு நோக்கமாகும்.

தேசத்திற்கு மகுடம் கண்காட்சியை முன்னிட்டு கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி மட்டக்களப்பு, புதிய கல்லடிப் பாலம் மக்கள் பாவனைக்காக மேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவால் திறந்து வைக்கப்பட்டது. 260 மீற்றர் நீளமாகவும் 14.5 மீற்றர் அகலமாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கென பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள், பல மில்லியன் ரூபாய்கள் செலவில் டென்மார்க் நிறுவனமாக எம்.ரி.ஹோஜ்காட் என்னும் நிறுவனத்தின் மூலம் நவீன முறை யில் மேற்கொள்ளப்பட்டுள்ள மீன்பிடி மற்றும் வர்த்தக துறைமுகம் இதுவாகும். இத்துறைமுகம், கொழும்பிலிருந்து 370 கிலோமீற்றர் தொலை வில் அமையப் பெற்றுள்ளது. மூவாயிரம் தொன் நிறையுடைய பாரிய கப்பல்கள் இந்த துறைமுகத்தில் நங்கூரமிட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

துறைமுகத்திறப்பு விழாவில், துறைமுகங் கள் அபிவிருத்தி கருத்திட்ட அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன, சிரேஷ்ட அமைச் சர் பீ.தயாரட்ன, அமைச்சர்களான ரவுப் ஹக்கீம், ஏ.எல்.எம்.அதாவுல்லா, பிரதிய மைச்சர் எம்.டி.எஸ்.குணவர்த்தன, கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ.மஜீத், கிழக்கு மாகாண ஆளுநனர் மொஹான் விஜேவிக்ரம, திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர்களான சரத் வீரசேகர, சிறியாணி விஜேவிக்ரம, பி.எச்.பியசேன, எம்.எச்.எம்.ஹரீஸ், பைசால் காசீம், மாகாண அமைச்சர்கள், மாகாண



கள் மேற்கொள்ளப்பட்டன.

அவற்றில், ஜனாதிபதியவர்கள் கடந்த 2004ஆம் ஆண்டு சுனாமியில் அழிந்துபோய், புதிதாக் நிர்மாணிக்கப்பட்ட, வாகரை புனித பேதுருவானவர் ஆலயத்தினைத் திறந்து வைத்தார். அத்துடன், புதிதாக அமைக்கப் பட்ட திருமலை மட்டக்களப்பு வீதியில் உள்ள பனிச்சங்கேணி பாலத்தினை திறந்தார். இந்தப் பாலம் வெள்ள காலத்தில் போக்குவரத்து க்குச் சிரமமாக இருந்துவந்தது. அந்தக்குறை இப்போது தீர்ந்துள்ளது. அதேநேரம், அம்பாறை மாவட்டத்தின் ஒலுவில் பிரதேசத்தில் அமைந்துள்ள மீன்பிடித் துறைமுகத்தைத் திறந்துவைத்தார்.

இவை மூன்றுக்கும் இணைந்த சம்பந்தம் இல்லை என்றாலும், இனநல்லுறவுக்கும், மதமேம்பாட்டுக்குமாக கிறிஸ்தவர்களின் தேவாலயமும், மூவின மக்களும் போக்குவரத்துச் செய்யும் முக்கிய பாதையான திருமலை மட்டக்களப்பு வீதியிலுள்ள பனிச்சங்கேணிப் பாலமும், முஸ்லிம் மக்கள் தமக்கான துறை முகமாகக் கருதும் ஒலுவில் துறைமுகமும் திறந்து வைக்கப்பட்டமை ஒரு வரலாற்றுச் சிறப்பம்சமாகும்.

அந்தவகையில், தேவாலயத்தினைத் திறந்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி, சகல மதங்களையும் சார்ந்தவர்களின் உரிமை களைப் பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், தற்போதைய அரசாங்கம் சகல மதங்களையும் சமமாக கருதுகின்றது. அமைதியும் சகவாழ்வும் முக்கியமானதாகும். சகலரும் ஒற்றுமையுடன் வாழ்வதன்மூலம் அமைதியான, சுதந்திரமான நாட்டைக் கட்டி யெழுப்ப முடியும்.

வைராக்கியம், குரோதம் என்னும் மனப் இவ்வாறான வதந்திகளை எதிர்க்கட்சிகள் பரப்பி வருகின்றனர். இது விற்பனைசெய்யும் யுகமல்ல. விற்பனை செய்த வகைகளை மீளப்பொறுப்பேற்கும் யுகமாகும். எதிர்க்கட்சிகள் கூறுவதற்கு ஒன்றும் இல்லை. இவ்வாறான போலிப் பிரசாரங்களை மக்கள் நம்பவேண்டாம் எனத் தெரிவித்திருந்தார்.

அரசாங்கம் மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் மக்களது நலன்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. இவற்றினை மக்கள் பயன்படுத்திக் கொள்வதிலேயே அவற்றின் பயன்கள் கிடைக்கப்பெறும் என்பது பொது வான கருத்தாகும். தற்போதைய நிலையில் இந்த நிலையினைத் தோற்றுவிப்பதற்கான ஊக்கம் கொடுக்கப்படுவதே கூடுதலாக இருக்க வேண்டும். அதன்மூலமே நாட்டை மேல் நிலைநோக்கி உயர்த்திச் செல்லமுடியும்.

எமக்குள் சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்ற இனவாத அரசியல் இனிமேல் வேண்டாம். குறுகிய எண்ணம் ஒரு நாளும் வேண்டாம், எந்தத் தீர்மானம் எடுத்தாலும் நாம் புத்தியோடு செயற்படவேண்டும் என்ற ஜனாதிபதியின் நல்லிணக்கக் கருத்துடன் இணைந்து செயற் படுவதே அபிவிருத்திகளின் நூறுவீத நன்மை களைப் பெறுவதற்கான வழி என்பது இந்த இடத்தில் சொல்லிக் கொள்ளப்பட வேண்டியதாகும்.

வடக்கினைப் பொறுத்தவரையில் வடக்கின் வசந்தமாகவும் கிழக்கில், கிழக்கின் உதயம் என்ற பெயரிலும், அபிவிருத்தி திட்டங்கள் பல செய்யப்பட்டுள்ளன. இப்போதும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன.

மூவின மக்களும் வாழும் கிழக்கில், கல்வி, சுகாதாரம், வீதி அபிவிருத்தி, பாலங்கள் உட்பட சகல துறைகளும் அபிவிருத்தி கண்டுவரு கின்றன. இந்த அபிவிருத்திகள்மூலம் பிரதேச மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் பாசிக் குடா வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளை பிரதான நோக்காகக் கொண்டும், உள்ளூர் சுற்றுலாப் பயணிகளைக் கவரும்வகையில் மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் அபிவிருத் தித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்படி சுற்றுலா சிறப்புமிக்க பாசிக்குடா பிரதேசத்தில் தற்போது, 14 சுற்றுலா விடுதிகள் அமைக்கப்பட்டுவருகின்றன. இவற்றில் தங்கும் அறைகளின் எண்ணிக்கை 1033 என கணிக்கப் பட்டுள்ளது. இவற்றுக்காக சுமார் 6533 மில்லியன் ரூபா செலவிடப்படுகிறது. இதேநேரம் மட்டக் களப்பு நகரில் சுற்றுலாத்துறையைக் கவரும் வகையில், நகரை அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ், முதியோர் பூங்கா, லீனியர் பூங்கா என்பன தயாட்ட கிருள வேலைத்திட்டத்தின் ஊடாக அபிவிருத்தி செய்யப்பட்டுவருகின்றன.

காந்தி சதுக்கம் காந்தி பூங்காவாக தேசத்தின் மகுடம் (தயட்ட கிருள) வேலைத்திட்டத்தின் கீழ் 38.301 மில்லியன் ரூபாய் செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இவற்றினைத் தொடர்ந்து, மட்டக்களப்பு மாநகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 2030 வரையில் மட்டக்களப்பு மாநகரை அழகுபடுத்தும் திட்டத்தின்கீழ், 28 இணைத்திட்டங்கள் இணைக்கப்பட்டுள்ளன. அதன்படி, மட்டக்களப்பு கோட்டை, விமான நிலையம், வெள்ளைப்பாலம், காந்தி சதுக்கம், வெபர் மைதானம், மட்டக்களப்பு வாயில் உள்ளிட் டவை முதலில் அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

அம்பாறை மாவட்டத்தின் ஒலுவில் முறை முகம், மறைந்த முன்னாள் கப்பற்துறை, துறை முகங்கள் அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் எண்ணத்தில் அடித்தளமிடப்பட்டு, மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் முன்னெடுக் கப்பட்டு நிறைவுக்குக்கொண்டு வரப்பட்டுள்ளது.

சபை உறுப்பினர்கள், பௌத்த, கத்தோலிக்க, இந்து, முஸ்லிம் மதத்தலைவர்கள், இலங்கை துறைமுக அதிகாரசபையின் உயர் அதிகாரி கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டர்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தின், வாகரை, பனிச்சங்கேணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய பாலம் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் 950 மில்லியன் ரூபா செலவில் இலங்கை அரசாங்கத்தினால் இந்த பனிச்சங்கேணிப் பாலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, வாகரை புனித பேதுருவானவரின் தேவாலயம், 2004ஆம் ஆண்டு சுனாமியில் முழுமையாக பாதிக்கப்பட்டு தற்போது புதிதாக அமைக்கப் பட்டு புதுப்பொலிவுடன் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேசத்தில் சுனாமி பேரலையால் சேதம டைந்த புனித பேதுருவானவரின் தேவாலயத் திறப்பு விழாவில், ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ, அமைச்சர் பசீர் சேகுதாவூத், பிரதிய மைச்சர்களான விநாயகமூர்த்தி முரளிதரன், எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, கிழக்கு மாகாண ஆளுநர் மொஹான் ஜயவிக்கிரம, வாகரை பிரதேச செயலாளர் செல்வி. ஆர்.இராகுலநாயகி, மறை மாவட்ட ஆயர் யோசப் பொன்னையா ஆண்டகை உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மூன்று தசாப்தங்களாக போரினால் பாதிக் கப்பட்டிருந்த கிழக்கின் பல பகுதிகளும், தற்போது துரித வளர்ச்சி கண்டுவருகிறது. இந்த வளர்ச்சிகளின் பட்டியலில் பெருந்தொகை யான நிதிகள் அடங்கியிருக்கின்றன. இவை மக்களின் பொருளாதாரத்துக்கும் மேம்பாட்டுக்கும் மென்மேலும் பங்காற்ற வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும்.

# மண்கும்பான் கடற்கரைப் பள்ளிவாசல் கொடியேற்றம்



நபியவர்களின் காலத்திலும் கலீபாக்களின் காலத்திலும் மார்க்க பிரசாரம், வியாபாரம் நோக்கில் அரோபியர்கள் கடல்மார்க்கமாக ஈழத்தின் பல்வேறு கரைகளையும் அடைய சிலர் மரணித்த நிலையி- லேயே கரையை அடைந்தார்கள்.

அவர்களில் ஒருவர்தான் மண் கும்பான் பள்ளிவாசலில் ஹழரத்து சுல்தான் அப்துல்காதர் ஒலியுல்லா வின் சியாறம்(அடக்கஸ்தலம்) உண்டு அவரின் தங்கையே நயினாதீவில் அடங்கியுள்ளார்கள்.

இங்கு வருடாவருடம் கொடியேற்று வைபவமும் 10ஆம் நாள் கொடி யிறக்கு வைபவமும் அன்னதான மும் வழங்கப்படும். இக்கால கட்டத்தில் யாழ்ப்பாண முஸ்லிம்கள் பலர் அங்கு சென்றுதங்குவர்.

பழைமைவாய்ந்த பள்ளிவாசல் களில் மண்கும்பான் பள்ளிவாசலும் ஒன்றாகும். தமிழ் நாட்டு கீழைக் கரைச் சோனகர் தாம் கடற்றொழில் புரியும் காலத்தில் அந்த அடக்க ஸ்தலத்தில் 1598ஆம் ஆண்டு இப் பள்ளிவாசலைக் கட்டினார்கள்.

யாழ்ப்பாணம் சோனகத் தெருவில் மிகவும் பழைமைவாய்ந்த பள்ளி வாசலாக முஸ்லிம் கல்லூரி வீதியில் அமைந்துள்ள பெரிய பள்ளி வாசலாகும் (காட்டுப் பள்ளிவாசல்) இது 1713இல் கட்டப்பட்டது. இதனை யொட்டியே மையவாடியும் அமைந் திருந்தது.

யாழ்ப்பாணத்தில் மிகவும் பழைமை வாய்ந்த முதன்முதலில் கட்டப்பட்ட பள்ளிவாசல் இன்று சின்னக்கடையில் அமைந்துள்ள புதுமை மாதா கோவில் (Our lady of Miracles) முன்பு முஸ்லிம் களின் முதலாவது மிகவும் பெரிய ஜும்மா பள்ளியாக இருந்தது. ஒரேநேரத்தில் 1000 பேர் நின்று தொழத்தக்க பிரமாண்டமான பள்ளியாக இருந்தது. அச்சூழலில் வாழ்ந்த முஸ்லிம்கள் இம்சிக்கப்பட்டனர். அவர்கள் வாழ்ந்த இடங்களில் இருந்து அனைவருமே போர்த்துக் கீசரினால் துரத்தப்பட்டனர். இதனால் அனைவரும் இடம்பெயர்ந்தனர். குடாநாட்டின் ஏனைய இடங்களுக் கும் சிலர் தமது எதிர்கால நலன் கருதி தெற்கு, கிழக்கு, மத்திய பகுதிகளுக்கும் செல்லத் தலைப் பட்டனர். இவ்வாறு முஸ்லிம்கள் அனைவருமே துரத்தியடிக்கப்பட்ட பின்பு மே மாதம் 8ஆம் திகதி 1614ஆம் ஆண்டில் பள்ளிவாயிலும் இடிக்கப்பட்டு "பிறேசிபெட்ரோடி பெண்டாக்" என்பவரால் அப்பள்ளி வாசல் அமைந்திருந்த இடத்தில் ஒரு தேவாலயம் நிறுவப்பட்டது. (ஆதாரம் Notes on Jaffna - by John Hentry Martin 1922 page 138) அப்போது அதற்கு வெற்றித் திருமகள் கோவில் (Our Lady of Victory) என்று பெயருமிட்டனர். பின்பு காலகதியில் அக்கோயில் புதுமை மாதா கோவில் (Our lady of Miracles) என்று அழைக்கப் பட்டது. அக்கோயிலை இன்றும் சின்னக்கடையில் காணலாம்.

இது நடைபெற்றபோது யாழ்ப் பாணத்தைப் பரராசசேகர பாண்டி யன் ஆண்டுவந்தான். யாழ். குடா நாட்டில் முஸ்லிம்கள் 8ஆம் நூற் றாண்டு தொடக்கம் வாழ்ந்து வரு கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**அல்ஹாஜ்**
**எம். எப். எம். இக்பால்,**
**யாழ்ப்பாணம்.**

சோ. திலகராஜ்
கண்டாவளை






# மாற்றங்கள்

அதிலை வைத்து ஆர்த்திக்கு ஒரு அறைவிட்டால் என்னவென நினைத்த அரவிந் ஒருவாறு அடக்கிக்கொண்டு ஓர் ஆட்டோவைப் பிடித்து எதுவுமே பேசாது பிள்ளையை வேண்டிக் கொண்டு புறப்பட்டான் பிள்ளை பிறந்து ஐந்து நாட்கள் பாலூட்டி தனது அரவணைப்பில் வைத்திருந்து தற்போது பிள்ளை பிரிந்து போவதையும், தனது சந்தர்ப்பத்திற்காக அரவிந்தை அடிக்கடி ஏமாற்றுவதையும் நினைத்து ஆர்த்தி துடியாய் துடித்தாள்.

அரவிந் பிள்ளையைப் பார்த்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தவர். பெற்ற தாய் பிள்ளையைப் பார்த்துக் கொள்வதை விட மிக்கவனமாகக் கவனித்துக் கொண்டான் அத்தோடு வேளாவேளைக்கு சமைப்பது, அரவிந்தின் குறைநிறைகளைக் கவனிப்பது போன்ற எல்லாவற்றையும் கவனித்துவந்த போது இவ்வளவு வேலைகளையும் செய்வதல் பேசிய சம்பளத்தைவிட அதிகமாகச் சம்பளம் கொடுக்க வேண்டுமென அரவிந் எண்ணியிருந்தான்.

அவ்வாறு ஓர் நாள் சம்பளத்தை கொடுக்க முற்பட்டபோது எட மோனை எனக்கும் 02 பிள்ளைகள், 05 பேரப்பிள்ளைகளென இருந்தவை. உந்தப் போரிலை எல்லோரும் ஒன்றாக இருந்தோம் விழுந்த ஷெல்லில நான் மட்டும் தப்பினன். எனக்கு யாரும் இல்லை. ஆனால் இப்ப இந்தக் குறை எனக்கில்லை. பிள்ளை, பேரப்பிள்ளை மாதிரி நீங்கள் இருக்கிறியள். சாப்பாடு, உடுப்பு தாறியள். சுகயீனம் என்டால் கவனிக்கிறியள். இதைவிட எனக்கேன் காசு. இயலாத நேரம் வயோதிபர் இல்லத்திலை விட்டுவிடு என அந்தத் தாய் கூறியபோது, இறுதிவரை நீங்கள் எங்களுடன் இருக்கவேண்டுமென அரவிந் கூறினான். பிள்ளையாரப்பா இனியாவது என்னை வாழவிடு! எனக்கு இந்த வாழ்வே போதுமென பிள்ளையைத் தூக்கிக்கொண்டு வழமையாகப் பொழுதைப் போக்கும் சாய்மனைக் கட்டில் பக்கம் போனான்.

ஒரு வருடமாக விடுப்பில் நின்ற ஆர்த்தி வேலையைப் பொறுப்பேற்றுக் கொள்ள இன்னும் சில நாட்களே இருந்தன. தொடர்ந்து வேலை செய்யும் மனநிலை ஆர்த்திக்கு இல்லாததினால் மேலும் 06 மாதமோ அல்லது ஒரு வருடமோ விடுப்பில் நிற்பதற்காக விண்ணப்பம் செய்யச் செல்வதற்கு முருகேசனிடம் அனுமதி கேட்டாள்.

நீ இனி வேலைக்குப் போகவேண்டாம். லண்டனில் இருக்கின்ற சிவராசா மாமாவின்ர ராசனுக்கு கல்யாணம் கட்டிய பெண்சாதி செத்துப் போச்சு. ஒரு பிள்ளை இருக்கு அவனைக் கல்யாணம் பேசியாச்சு. இனி என்னத்திற்கு வேலை...? அங்கை போய் அவனோடு சந்தோஷமாய் இரு எனக்கூற அரவிந்திடம் பிள்ளையைக் கொடுப்பதற்கு ஆர்த்தியிடம் பார்வதி பிள்ளையை வாங்கியபோது ஆர்த்தியின் சட்டையைப் பிடித்த பிள்ளையின் கையை எவ்வளவு சிரமத்தின் மத்தியில் ஆர்த்தியின் தாயார் விடுவித்துக் கொண்டார்.

இதைத் தாங்கமுடியாமல் அன்று கண்ணீர் விட்டழுத ஆர்த்தி இன்னும் அழுகையை விடவில்லை. இந்நிலையில் ஆர்த்திக்கு வெளிநாட்டு வாழ்க்கை சந்தோஷத்தைக் கொடுக்குமா? எதுவுமே பேசாமல் மௌனித்துக்கொண்ட ஆர்த்தியைப் பார்த்த முருகேசன் அவள் மனம் எதையோ கேட்க நினைத்து மறைப்பதை எண்ணி மனம் நெகிழ்ந்துபோனார்.

விபரீதம் எதுவும் நடக்கலாமென எண்ணிக்கொண்டார். மறுநாள் ஆர்த்தி லீவு விண்ணப்பம் செய்யப் போனபோது தானும் கூடவே புறப்பட்டார்.

வேகமாகச் சென்றுகொண்டிருந்த பேருந்து இடையில் யாரையோ ஏற்றுவதற்காக நின்றது.

அப்போது பேருந்து நடத்துனர் அண்ணை முன்னால் வாங்கோ. இந்தப் பிள்ளையோட, வாற அண்ணைக்கு சீற் கொடுங்கோ எனக் கூறினார்.

(தொடரும்)

# "கறுப்புத்தான் எனக்கு புடிச்ச கலரு"



அப்ரார் ஏ.அனஸ்,
யாழ்ப்பாணம்.

கட்டிலின் மேல் பரவிக்கிடந்த பட்டுச்சாரிகளும், பளபளக்கும் தங்க நகைகளும், அலங்காரப் பொருட்களும் காவ்யாவைப் பார்த்து அனுதாபத்துடன் சிரிப்பதுபோன்று தோன்றியது!

"ஏய்ம்! காவ்யா நீயும் எங்களையெல்லாம் அள்ளி அணிந்து உன்னை அழகுபடுத்தி எத்தனை தடவை எடுப்பா? கைப்பிள்ளைபோல பெண்பார்க்கும் படலத்துக்காய் வலம் வருகின்றாய்! ஒன்றா, இரண்டா பத்துத் தடவையும் தாண்ட தயாராகும் இந்த தவமிருப்பு தேவையா? என்று கேள்விக்கணை தொடுப்பது போல இருக்கவே, மனதினுள் அடக்கி வைத்திருந்த வேதனைத் தீக்கொழுந்து விட்டெரிய - கண்ணீர் மழை கொப்புளிக்க கன்னங்கள் மடைதிறந்த வெள்ளமாக ஆற்றுநீரை கொட்டி உடலை நனைத்துக் கொண்டிருந்தது...!

சீ... இதென்ன நடைமுறைகள், கொஞ்சமும் நெஞ்சத்தில் ஈவிரக்கமில்லாமல் நெறிக்கு நேரே, எங்களுக்கு எல்லாமே ஓ.கே. ஆனா உங்க பொண்ணு கொஞ்சம் நிறம் குறைவாம், மாப்பிள்ளைக்கு திருப்தியில்ல என்றுவிட்டு போகின்றார்களே.

இறைவன் படைத்துவிட்ட படைப்பை குறை சொல்ல இவர்களுக்கு என்ன தகுதி இருக்கு.

என் அழகில் குறையில்லை, சீதன நிலையில் திருப்திக்கு மேல் திருப்தி. ஏனென்றால் பணக்கார பெற்றோருக்கு ஒரேயொரு செல்லப் பிள்ளையும் நான்தான். செல்வப் பிள்ளையும் நான்தான். பின்னே என்ன சொத்துப்பத்து ஏராளம் தாராளமாக, தவமிருந்தாலும் கிட்டாத நான்கு தட்டு வீடு தானே விசேஷம். நிலைமை இப்படி இருக்க, அவை அனைத்தையும் பெறுவதற்கு வெள்ளையாய் வேணுமாம்..! என்று எண்ணியவளாக அவ்விடத்தை விட்டு அசையாது அமர்ந்திருந்தாள்.

"காவ்யா... காவ்யா..." என்று தோழியின் அழைப்பு பரபரப்பாக ஒலித்தழைத்துக் கொண்டு அறைக்குள் நுழைந்த திவ்யாவை ஏறெடுப்பார்த்தாள் காவ்யா? என்ன என்பது போல...

என்ன? காவ்யா...! நீ இன்னும் ஆயத்தமாக முகம்கூட கழுவாம உம்முன்னு இருக்கியே.. மாப்பிள்ளை வீட்டார் வாறதாக டெலிபோன் வந்துள்ளதாம். உன்னை ரெடியாக்கி அழைத்து வர அம்மா சொன்னா! சுருக்கா எழும்பு...

சும்மா போ திவ்யா... நான் எழும்பவும் இல்ல வரவும் இல்ல... இந்தக் கல்யாணச் சந்தையில் காட்சிபொருளா காட்சியளித்து கரைசேராத கப்பலாக அலையும் நிலை, இனிமேலும் எனக்கு வேண்டாம். அம்மாவிடம் போய்ச் சொல்லு திவ்யா "நான் வரவேமாட்டேன் என்று...!"

என்ன செய்வது, ஏது செய்வது என்று புரியாத திவ்யா என்ன காவ்யா நீ... இக்கட்டான இந்த நேரத்தில் நீ இப்படி பெரிய குண்டைத்தூக்கிப் போடுகின்றாய், இது வெடித்தால் இதனால் என்ன விபரீதங்கள் ஏற்படும் என்று தெரியுமா, உனக்கு!

உங்கம்மா துடிச்சிடுவா, அப்பா பதறிடுவார் அல்லவா? உந்தன் அழுமூஞ்சியை என்றும் காணாதோர் நிலையேற்றி நீ நான் சொல்லியா தெரியணும் எழும்பு வா... பாத்ரும் போய் கழுவு முகத்த...

முடியாது... முடியாதென்றால் முடியாது. எந்த முயற்சியும் பயன்தராது திவ்யா... தயவுசெய்து என்னை தனிமையில் இருக்கவிடு. வருபவர்களை ஆதரித்து அனுப்பிவையுங்கள் எல்லோரும் சேர்ந்து. சத்தியமாக நான் அவர்களை அவமதிக்கவில்லை. இந்த நிகழ்வு எனக்கு அவமானமாக உள்ளது. சடங்கு சம்பிரதாயம் எதையும் நான் நிந்திக்கவில்லை. என் குறை கறுப்பாக பிறந்தது. அதை அடுத்தவர் குத்திக்காட்டுவதை இனி நான் அனுமதிக்கப் போவதில்லை. இப்போவாவது நீ புரிந்துகொள்வாய் என்று எண்ணுகின்றேன் என்றாள்.

புரியுது... புரியுது என்று புலம்பிய திவ்யா, மலை அசைந்தாலும்கூட இவள் மனம் அசையாது போலும் என்று எண்ணியவாறு அவ்விடம் விட்டகன்று அவசர அவசரமாக மாடிப்படிகளை தாண்டிக் கொண்டிருந்தாள்.

வசந்தா... சேலைத்தலைப்பில் கையை துடைத்தவாறு வேலைக்காரர்களுக்கு ஏவிய வேலைகள் அனைத்தும் செய்யப்பட்டு விட்டதை கண்காணித்தவளாக,

பலகாரத்தட்டுகளை அடுக்கி வைக்க அமுதாவை அழைத்துக்கொண்டாள். அவளுக்கும் உள்ளூர வேதனை இல்லாமல் இல்லை. எல்லாவற்றையும் விதியின் மேல் பாரம்போட்டு மதியை மழுங்கவைக்கும் மாதிரிகளை மனதில் எடுக்காது, இது ஒரு வழமைதானே என்று தனக்குத்தானே சமாதானம் என்ற தரவை சேர்த்துக்கொண்டு எப்படியும் மகள் திருமணம் முடிய மனமுருகிப் இறைவனை அழைத்துக் கொண்டாள்.

இறைவா! இந்த வரனையாவது ஒன்றுசேர்த்து வைத்துவிடு. இதற்கு என் மகளுக்கு ஆறுதல் சொல்ல முடியாது என்னால் என்று மனமுருகி வேண்டிக்கொண்டாள். மேலே அறையில் நடந்த சம்பவம் எதையும் அறியாதவளாக!

அவசர அவசரமாக ஓடிவந்த திவ்யா, மேல் மூச்சு - கீழ் மூச்சு வாங்க வேர்த்து விறுவிறுத்து தன்முன் நிற்பதைக் கண்டதும் என்னம்மாதிவ்யா! எல்லாம் ரெடியா? என்றாள்.

இல்ல அன்ரி கொஞ்சம் பொறுமையா கேளுங்க அன்ரி இன்று இந்த நிகழ்வில அவ கலந்து கொள்ளமாட்டாவாம். தன்னத் தொந்தரவு செய்ய வேணாமாம். தயவுசெய்து தன்னிடம் யாரையும் வரவேண்டாமாம். கட்டாயப்படுத்தினால் கவலைப் படவேண்டிவரும் என்று அடித்துக் கூறிவிட்டா அன்ரி, முகத்தில் அடித்தால்போல என்னை திருப்பிவிட்டாள் அன்ரி.

ஐயோ... ஐய்யய்யோ.. நான் என்ன செய்வேன் திவ்யா இதை எப்படி இவரிடம் கூறுவேன்... ஐயோ எனக்கு கையும் ஓடல காலும் ஓடலயே, திடீரென்று என் தலையில் இப்படியொரு தீச்சட்டியா? இதை அடுத்தவர் அறிந்தால் என்ன நினைப்பார்கள் என்று சுற்றி நிற்கும் உற்றம் சுற்றம் அறிந்திடக்கூடாது என்றே மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது அவதிப்பட்டுக்கொண்டிருந்தாள்!...

திவ்யா அவளுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தாள் அந்த நேரம்தான்...

ஆ... வாங்க... வாங்க என்று ஆரவாரங்களும் வந்துவிட்டார்.. வந்துவிட்டார்கள்... என்ற அமளி துமளிகளும் ஆரவாரங்களும் முன் ஹோலை நிறைத்து ஒலித்துக்கொண்டிருந்தது.

கணவரின் அழைப்பும் தொடர்ந்து அவளை வந்துசேரவே அவசர அவசரமாக முகத்தைத் துடைத்துக்கொண்டு ஓடிப்போய் வந்தவர்களை வரவேற்று உபசரித்தாள்.

எல்லோரும் அமர்ந்து நாழிகை பல செல்ல வந்தவர்களில் ஒருவர் மற்றவரை இடித்து இப்படியே இருக்கவா வந்தோம் எங்கே பெண்ணை வரச்சொல்லாமே என்று கூறவே,

இதை சற்று தள்ளி இருந்து கேட்ட மாப்பிள்ளையின் தந்தை தன் மனைவி விசாலத்தை நோக்கி... என்ன விசாலம் எல்லாம் சரியா? என்றார்.. கொஞ்சம் பொறுங்க இதோ வாரேன் என்றவர் எதிரே நின்ற வசந்தாவை ஓர் ஓரமாக அழைத்துச் சென்றாள். என்ன செய்வது ஏது செய்வது என்று தெரியாது கையைப் பிசைந்து கொண்டு போலிச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு விசாலத்தை வாய்திறக்க விடாது தானே முந்திக் கொண்டு ஆ.. ஓம்..ஓம் இன்னும் கொஞ்ச நேரத்தில மகள் அழைச்சு வாரேன்!..

அவர் தனக்கு வரப் போறவவை தான் மட்டும்தான் பார்க்க விரும்பறார்.... அதனால் அவரை அழைத்து சென்று உங்க மகளை பார்க்க வைங்க என்றார்.

வசந்தாக்கோ, அவள் சொல்லும் வார்த்தைகள் அனைத்தும் கானாமிர்தமாக காதுகளில் ஒலிக்க மகிழ்ச்சியால் உள்ளம் துளிர்க்க, வருவது வரட்டும் என்று... இந்தளவு உதவிய கடவுள் இதை நிறைவேற்றுவார் என்ற தன்னம்பிக்கையுடன், ஏன் நீங்களும் வாருங்கள் மகனுடன் என்றவள் கால்கள் தரையை தொட்டாலும் உள்ளத்தால் உவகையுடன் மகளின் மனமாறுதலுக்கு மனமுருகிக் கொண்டாள்.

வந்தோர்கள் எதுவும் புரியாது தின்பண்டங்களை சுவைத்தபடி கதைத்துக் கலாய்த்துக் கொண்டிருந்தனர். இவர்கள் மாடியறையை அடைந்து, காவ்யாவைப் பார்த்து பூத்த புன்னகையில், உதிர்ந்த சத்தில்லாத புன்னகையின் தன்மை அவர்களை குழப்பமடையச் செய்தது. ஏன் பிள்ள, அழுது அழுது முகம் வீங்கி இருக்கு. இஷ்டமில்லயா இந்த திருமணத்தில என்று இழுத்த விசாலத்தை இடைமறித்த வசந்தா, தெரியாதா சந்தர்ப்ப சூழ்நிலை சதி செய்வதால் அவ உள்ளம் உடைஞ்சிபோச்சு. ஆனா அவ இனி அழவேமாட்டா!...

எதையும் புரிந்துகொள்ள முடியாது முழித்த காவ்யாவை பார்த்த பார்த்தீபன் பாருங்க காவ்யா எதையும் அவசரக்கண் கொண்டு பார்க்கக்கூடாது. எனக்கு உங்கள ரொம்ப புடிச்சிட்டுது. இந்தாங்க எனது அன்புக்கான பரிசு உங்களுக்கு என்று ஓர் தங்க மாலையை பரிசளித்தான்.

நடப்பது கனவா?, நனவா? என்று எதுவுமே புரியாது விழித்த அவள், என்னை 'கறுப்பி' என்று நீங்களும் கணக்கெடுக்கமாட்டீர்கள் என்று தப்பாகக் கருதிவிட்டேன் மன்னியுங்கள் என்றாள்!

ஐயோ பாவமே! இங்க பாருங்கம்மா இவை! உனக்கு தெரியாத விசயம். "கறுப்புத்தான் எனக்குப் பிடிச்ச கலரு" என்று கூறிச்சிரித்தபடி அம்மாவை நோக்கினான். ஆமா அவன் அடிக்கடி சொல்வான் பிள்ளை, தான் வெள்ளை என்றாலும் தனக்கு கறுப்புநிற மனைவிதான் வேணும் என்று! அப்போதான் நகை நட்டுப்போட்டு பார்க்க மகாலட்சுமிபோல இருக்கும் என்று! இனி என்ன? காவ்யா வாழ்க்கை கள்ளமில்லாத மகிழ்வுடன் உள்ளம் நிறைய இல்லம் இனிக்கும்.



# நீங்காத சந்தேகம்



மனிதன் தோன்றியபோதே
அவனுடன் ஒட்டிக்கொண்டு பிறந்தது
காதல்! இனிய காதல்!

மனிதன் தோன்றி
மனித நாகரிகம் தோன்றாக் காலத்திலேயே
மனதுக்குள் தோன்றிய காதல்!

காதல் நிரந்தரமானது
மெய்க் காதலுக்கு
எந்த நிலையிலும் மரணமில்லை!

பொய்யான காதல் என்பது
காகிதப் பூ மாதிரியானது.
பார்க்க அழகாக இருக்கும்.
பழகினால் ஆழம் இருக்காது!

மெய்யான காதல் என்பது
குறிஞ்சிப் பூ மாதிரியானது.
எப்போதாவதுதான் பூக்கும்.
பூத்துவிட்டால்
மனதுக்குள் தினமும் வாசமடிக்கும்!

காதலுக்கு எப்படி மரணமில்லையோ
காதலின் சில விதிகளும் அப்படித்தான்!
காலம் மாறினாலும் காலாவதியாவதில்லை!

மணிமாறனின் அணைப்பில்
பஞ்சுப் பொதிபோல சிறைப்பட்டுக் கிடந்த
நந்தினியின் மனதில் ஒரு வினா?
காலத்தின் கரம் தீண்டாத
காதல் விதியால் தோன்றிய வினா!

பொன்மேனியின்
இடையளவை அளந்து கொண்டிருந்தவன்
எடையளவை அறிய
அவளை தன் மேல் ஏந்த துடித்துக் கொண்டிருந்தவன்
வினாவால் இழுக்கப்பட்டான்.

"என்மேல் பிரியமா?
உண்மையாகவே பிரியமா?
மலரிலும் மெல்லிய இதழாள்
சந்தேகச் சரம் தொடுத்தாள்!

கழுத்துக்குள் உதடு புதைத்திருந்தவன்
தோகைக்குள் ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருந்தவன்
விடுபட மனமில்லாமல் விடை சொன்னான்
'என் உயிர்மீதுள்ள பிரியத்தைவிட
என் உன்மீதுள்ள பிரியம் வலியது'

காளை சொன்ன பதிலால்
மனதுக்குள் இன்ப மின்னலடித்தது.

விரும்புகிறான், பிரியமுள்ளான்
என்பது அவளுக்கும் தெரியும்.
தெரியாமல்தானா தேக ஆராய்ச்சிவரை
அவன் கரம் நீள அனுமதித்தாள்?
எனினும் மனம் பொல்லாதது
மனம் கவர்ந்தவன் வாயால்
பிரியம் அறியும் பேராசை!
மறுபடி மறுபடி கேள்வி முளைக்கும்
விடை சொன்னால்தான் இன்பம் தழைக்கும்!

காதலிக்கு மட்டுமல்ல
காதலுக்கும் அந்த சந்தேகம் வரும்
அது சந்தேகமா? சந்தோசமா?

சந்தேகம்போல வினாத் தூண்டில்வீசி
சந்தோசத்தை வாரியள்ளும் தந்திரம்?!

"பொய்தானே?
உண்மையாய் பிரியமா?

"நமக்குள் ஏனடி சந்தேக நிழல்
உயிர் பிரிந்தாலும்
உன்மீதுள்ள பிரியம் மட்டும்
பிரியாதடி என் கண்மணி!"

"இப்படித்தான்
சகல ஆண்களும் சத்தியம் செய்வர்.
காரியம் முடிந்ததும்
சாதுரியமாய் நழுவி விடுவர்!"

"சொல்வது நீதானா நந்தினி?
இதைவிட என்னைக்
கொல்வதற்கு விஷம் கொடு போதும்!"

"பார்த்தீர்களா பார்த்தீர்களா!
வாக்குத் தவறிவிட்டீர்களே கண்ணாளா?

"என் கண்ணே, ஏன் கண்ணே
நீ என்னதான் சொல்கிறாய்?"

"உன்னைவிட்டுப் பிரியேன் ஒரு நாளும்
என்று சொன்னது நீர்தானே?

"ஆயிரம் தடவை 'ஆம்' என்பேன்
அதிலென்ன சந்தேகம் கண்மணி?"

"விஷம் கேட்டீரே
நான் இருக்க நீர் பிரிய நினைத்தீரே!"
சொன்னவள் விழிகள் உடைப்பெடுக்க
குலுங்கிக் குலுங்கித் தேம்பினாள்.

மெல்ல அவளின் தோள் தொட்டான்
மெல்லிய இதழில் உதடிட்டான்
கண்களின் வழியே இறங்கிய முத்தை
உதட்டால் ஒற்றித் துடைத்திட்டான்!
கூந்தலைக் கோதி குளிரவைத்தான்
குன்றுகள் நடுவே முகம் புதைத்தான்!

"தந்திரக்காரா! தந்திரக்காரா!
மந்திரம் உந்தன் விரலில் உண்டு
தந்திரம் உந்தன் உதட்டில் உண்டு
அந்தரமானது என் மனது
சுந்தர அழகா நீ கள்ளன்!"

"கொடியவளே! என் கொடியவளே!
மயக்கும் கணைகள் உன்னிடமே
மிரட்டும் கணைகளும் உன்னிடமே
கண்டபின் தூக்கம் தொலைந்திடுமே
கண்ணும் மனமும் தொலைந்திடுமே"

"இனியவரே! என் இனியவரே!
கொடியவள் மீது ஏன் விழுந்தீர்?
குறுநகை வீசி ஏன் கவர்ந்தீர்?
சுடு கரம் நீட்டி ஏன் அணைத்தீர்?
கொடுமைகள் செய்து ஏன் வதைத்தீர்?"

"மன்னித்துக் கொள்க மகாராணி
கன்னத்தில் ஒன்று தந்திடுக
கையினால் தந்தால் வலித்திடாது
கனியிதழினால் தந்தால் இனித்திடுமே"

"கள்ளா! கள்ளா! மாகள்ளா!
கைகள் ஓரிடத்தில் தங்கிடாதோ?
கண்கள் ஓய்ந்து தரித்திடாதோ?
மாயம் செய்யும் உன் கரத்தால்
காயம் பட்டது என் தேகம்!
பாயும் உந்தன் கொடுவிழிகள்
மேயும் எந்தன் தேகமெங்கும்!
போதும் போதும் இனி நிறுத்தும்
போகம் செய்ய நாள் வருமே!

"பசித்தேயிருக்கச் சொல்லாதே
பாவம் என்னைக் கொல்லாதே!"
இறைந்தபோல அவன் கெஞ்ச
இறுக்கிக் கொண்டே
இதழ் கொடுத்தாள்
நாவோடு நாவு கலந்தா...
பல்லூறும் நீரை பகிர்ந்து பசியாற
தேன் இதோ பால் இதோ
பொல்லாக் களிப்பில் மனம் ஆடும்

இறுக்கியணைத்தவள் மனம்
மீண்டுமொரு முறை மரம் தாவும்
"பிரியமா என்மேல் மெய் சொல்க
உண்மையை மட்டும் உரைத்திடுக"

"மரம் நான் கொடி நீ என்றாகி
பற்றிப் படர்ந்தோம் பாங்காக
மனப் புற்றுக்குள் இருந்து
சந்தேகம் வரலாமோ பாம்பாக?"

நிம்மதியாகிக் களிப்பாகி
மரம்மீது தாவும் கொடியாவாள்
மாலையாகி இருள்சூழ
உயிரில் பாதி பாதியாகி
இருவரும் பிரிந்து தனியாவர்.

பிரிந்தது உடல்கள் மட்டும்தான்
நிறைந்தது என்றும் என் நெஞ்சில்
சிறந்தவன் அவனின் உருவம் அன்றோ
நினைத்தவள் நெஞ்சில்
வினா தலைதூக்கும்
மறுபடி மரத்தில் மனம் தாவும்.

"என் நெஞ்சில் நிறைந்திருக்கிறார்
நீங்காமல் குடியிருக்கிறார்!
என்னவர் நெஞ்சில்
நான் இருப்பேனா?
அவரின் நினைவில் நான் உறைவேனா?
கேள்வி விரிந்து மனம் உலுப்பும்.

காதலர்க்கு வரும் இந்தச் சந்தேகம் கால
காலமாய் உள்ளதுதான் அததான் திருவள்ளு
வரும் சொல்லியிருக்கின்றார் இப்படி.

"யாமும் உளேங் கொல் அவர் நெஞ்சத்து
-எம் நெஞ்சத்து
ஓஒ உளரே அவர்"
அதிகாரம் - 121. குறள் -1204

---

## சிந்தியா பதில்

**சிந்தியா! இலங்கைக்கு நவநீதம் பிள்ளை எச்சரிக்கை விடுத்துள்ளது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

**தா.கம்சனா, கொழும்பு -15.**

கம்சனா உங்களுக்கு யோகர் சுவாமிகள் என்ற ஒருவர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தது பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீரா? அவர் கூறியிருக்கிறார், "எல்லாம் எப்போதோ முடிந்த முடிவு" என்று சொல்லியிருக்கிறார். அது போல்தான் இதுவும், எப்போதே தீர்மானிக்கப்பட்ட ஒன்று. கண்டிக்கவேண்டியது அவருக்கு ஊதியம் வழங்குபவர்களின் தேவை, அவ்வளவுதான்.

**இன்னொரு போருக்கு சிங்கள மக்கள் தயாராக இருக்கவேண்டும் என்கிறார் சம்பிக்க ரணவக்க. என்ன சிந்தியா இவர் இனத்துவேஷத்தை தூண்டிவிடுகிறார் போலல்லவா இருக்கிறது?**

**எம்.ஞானேஸ்வரன், கண்டி.**

அரசியல் நடத்த ஊருக்கு நல்லது செய்திருக்க வேண்டும் அல்லது நல்ல பிரஜைகளாகவேனும் வாழ்ந்திருக்க வேண்டும். அவ்வாறு இல்லாதவர்கள் அரசியல் செய்ய விரும்பும்போது நமது நாட்டில் அவ்வாறானவர்களுக்காகவே இருக்கிறது இனவாதம். சம்பிக்க ரணவக்க மட்டுமல்ல நம்மத்தியிலும் இவ்வாறான மூன்றாம்தரப் பேர்வழிகள் பலர் நடமாடிக்கொண்டிருக்கிறார்கள். கவனமாக தேர்வுசெய்ய வேண்டியது உங்களின் பொறுப்பு.

**சிந்தியா! வடக்கில் நடைபெறும் மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்களுக்கு ஒரு திருப்பநிலை ஏற்படுமா?**

**கு.ராணிமலர், அம்பாறை.**

அது உங்களின் கரங்களில்தான் இருக்கிறது. ஆரோக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியவர்களுக்கு, உங்கள் வாக்குகளை அளிக்கின்றீர்களா அல்லது செயற்திறன் அற்ற வாய்ச்சொல் வீரர்களுக்குத்தான் உங்கள் வாக்குகள் என்பதை பொறுத்துத்தான் எவ்வாறான மாற்றம் என்று சொல்லமுடியும்.

**சிந்தியா! சமீபத்தில் உங்களை மெய்மறக்கச் செய்தவர் யார்?**

**எவ்.பைசார், நிந்தவூர்.**

மன்னிக்கவும்! அந்தளவிற்கு சமீபத்தில் யாரையும் சந்தித்ததாக அடியேனின் பட்டறிவுக்குத் தெரியவில்லை.

**சிந்தியா! பணம் சம்பாதிக்க வழிசொல்லுங்கள்....?**

**சா.அபிசனா, கொக்குவில்.**

அதற்குப் பணம் சம்பாதிக்கப் பல வழிகள் இருக்கின்றது. ஆனால் நியாயமான முறையில் கடின உழைப்பால் சேர்க்கின்ற பணம்தான் எமது ஆரோக்கிமான வாழ்விற்கு வழி செய்கிறது. வழிதவறிச் சேர்கின்ற பணம் எம்மையும் அளித்து எமது சந்ததியையும் பாதாளத்தில் தள்ளிவிடும். எனவே பணம் சம்பாதிப்பது முக்கியமல்ல. எப்படிச் சம்பாதிக்கிறோம் என்பதில்தான் நாங்கள் நிதானமாக இருக்கவேண்டும்.

**சிந்தியா! எலும்புக்கூடுகளைக் கண்டால் உங்களுக்கு மனதில் தோன்றுவது என்ன?**

**மா.சோபன், திருகோணமலை.**

காணாமல் போனவர்களாகவே பல தசாப்தங்களாக இருந்துகொண்டிருக்கின்ற எமது உறவுகள், நண்பர்கள், அவர்களுடன் நாம் பகிர்ந்த பொழுதுகள் இப்படி பலபல துயரமான நினைவுகள் எங்கள் மனப் புத்தகங்களில் உயிர்ப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கையில், மேலைத்தேயத்தவர்களைப் போன்று ஆராய்ச்சி எண்ணம் வருவதற்கு வழியில்லை என்பது சோபனுக்குப் புரியும்தானே!

**சிரியாவின் விடாப்பிடியும், அமெரிக்காவின் அகங்காரமும் இதில் வெற்றி பெறப்போவது யார்?**

**எம்.சைந்தன், அரியாலை.**

தர்மத்தின் பக்கத்திற்கே இறுதி வெற்றி என்று நம்புபவர்கள் நாம். ஆனால் வலியாரின் கைகள்தான் உயர்ந்துநிற்கும் என்பதை எம்மைச் சுற்றிநடக்கும் நிகழ்வுகள் அன்றாடம் எமக்குக் கற்பித்துக் கொண்டிருக்கின்றது. வெற்றியை யார் கொண்டாடினாலும் நிரந்தர வலிகள் எப்பொழுதுமே



எதுவும் அறியாத அப்பாவிகளுக்கே சொந்தமாகிப் போகிறது. அதற்கு சிரிய மக்களும் விதிவிலக்கல்லவே.

**சிந்தியா! ஊடல், கூடல் என்று இலக்கிய நயத்தில் வருகிறது. இக்கால தம்பதியாரிடமும் இது இருக்கிறதா?**

**பொ.குணப்பிரியா,முல்லைத்தீவு.**

நிச்சயமாக. இருந்துகொண்டுதான் இருக்கின்றது. ஆனால் நாகரிகத்தின் பெயரால் வார்த்தைகள் மாறிவிட்டன. ஈகோ என்றும், டேட்ரிங் என்றும் நுனி நாக்கால் சப்பைக் கொட்டிக் கொண்டிருக்கின்றோம். காலங்கள் மாறினாலும் உணர்ச்சிகள் மாறுவதில்லை.

**சிந்தியா! பெண்கள் என்றால் ஆண்களைவிடக் குறைவானவர்களென நினைக்கின்றீர்களா?**

**ஆர்.சாளினி, கல்கிசை.**

நான் அப்படிச் சொல்லவேயில்லையே. நமது கலாசாரம், குடும்ப அமைப்பு என்பவற்றில் குடும்பம் வெற்றிபெற பெண்களுக்கு பொறுப்புடன் பொறுமை காக்கவேண்டிய அவசியம் இருக்கின்றது என்பதை மறுக்கவும் முடியாது.


ஸ்ரீ ராம ஜெயம்

**மலையாள மாந்திரிக சக்தி**



ஸ்ரீ துர்க்கை தாசன், தேச பந்து, கலாநிதி, பேராசிரியர், P.K.சாமி JP ஐயா

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்ட தெளிவான ஜாதக குறிப்புகளுக்கு....

**MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM**

23, Mayfield Road, Kotahena, Colombo - 13.
Tel : 011 2342463/4, 011 2470615 Fax : 011 2344831
E-mail : drpksamy@sltnet.lk
நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508

அரசியலும் தெரியாமல் போராட்டமும் புரியாமல் வாய் பிளந்துகொண்டிருக்கிற முன்னாள் நீதியரசரை வைச்சுக்கொண்டு எப்பிடி ஒப்பேற்றப் போகின்றோமோ எண்டு தமிழரசுக்காரரே தலையில அடிச்சுக் கொள்ளினமுங்கோ!

"இந்த மனிசனுக்கு தந்தை செல்வாவின்ர அஹிம்சைப் போராட்டமும் தெரியாது. பிரபாவின்ர ஆயுதப் போராட்டமும் புரியுதில்லையாமுங்கோ. அவரைக் கொழும்பிலயிருந்து பிடிச்சுக் கொண்டுவந்து தலைவர் சூத்தடிக்கிறாராமுங்கோ". நீதிமன்றங்களிலை தீர்ப்பை எழுதிவைச்சு வாசிக்கிறதுதானாம் ஐயாவுக்குப் பழக்கம். அதாலை, பிரசாரக் கூட்டங்களிலையும் எழுதிக்கொணடு வந்துதான் வாசிக்கிறாராமுங்கோ!

அப்பிடியானவரை பிடிச்சு பகிரங்க விவாதத்துக்கு வரச்சொன்னால் அவர் வருவாரோ? அதுவும் அரசுத் தரப்பின்ர தலைமை வேட்பாளர் தவராசா இந்த விசயங்களிலை விண்ணர். அவரிட்டை ஏன் வாயைக் குடுத்து வாங்கிக் கட்டுவான் என்ற பயத்திலைதான் மெல்ல அதை, இதைக் கூறி ஜகா வாங்கிவிட்டாராமுங்கோ..!

உது உப்பிடிக்கிடக்க, கொஞ்ச நாளைக்கு முன்னம் ஒரு சங்கதி நடந்ததுங்கோ! தலைநகரில நடந்த தந்தை செல்வா நினைவுப் பேச்சிலையும் எங்கட நீதியரசரைய்யா எழுதிக் கொண்டுவந்து வாசிச்சவருங்கோ"

தந்தை செல்வாவின் அடிப்படைக் கொள்கைக் கோட்பாட்டையே கோட்டை விட்டுவிட்டு, எங்கட சட்டம்பி பேசியதைப் பார்க்கப் பெரும் பரிதாபமாகவும் கண்றாவியாகவும் இருந்திச்சுதுங்கோ... தந்தையை மட்டுமில்லையுங்கோ, ஆயுதப் போராட்டத்தாலதான் தமிழருக்கு இந்தக் கெடுதி நிலை எண்டு வெளிப்படையாவே அந்த மனிசன் புலித்தலைவரையும் அவரின்ர போராட்டத்தையும் கொச்சைப்படுத்தி; நையாண்டி பண்ணின மாதிரிப் பேசேக்கை சம்பந்தமானவரும் நல்லா ரசிச்சுக் கொண்டிருந்தவருங்கோ" பாவம் அந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்த 'புலிவால்' வித்தியின்ர முகத்திலைதான் ஈயாடேல்லை. பொல்லை கொடுத்து அடிவாங்கின மாதிரி முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு இருந்தவருங்கோ..



* சட்டம்படிச்ச மனிசன் அப்பிடியென்ன பேசினவர் எண்டு நீங்கள் நினைக்கிறியளுங்கோ! "எமக்கு எதிராகப் பல காரியங்கள் நடக்கலாம்.

ஆனால் எவரையும் பகைக்காது, கோபம்கொள் ளாது, சட்டத்திற்கு எதிரான முறையில் நடந்துகொள்ளாது எமது எதிர்ப்பை எடுத்துக்காட்டுவது தான் இனிவரும் காலத்தில் நாங்கள் செய்யவேண்டிய காரியம்" – இதுதான் அவர் உரைத்த போதனை.

தந்தை என்ன சொன்னார், என்ன செய்தார் என்பது இவருக்குத் தெரியுமோ? பெரும்பான்மையினர், சிறுபான்மையினர் மீது திணிக்கும் நீதிக்கு முரணான சட்டங்களை மறுத்து, சட்ட மறுப்பு இயக்கம் நடத்திறதுதான் தந்தை காட்டின மார்க்கம். இவர், அதை விட்டுப்போட்டு, "சட்டத்திற்கு எதிரான முறையில் நடந்துகொள்ளாது எமது எதிர்ப்பைக் காட்டுவதுதான் ஒரே வழி" என்று தந்தை செல்வாவின்ர மார்க்கத்தையே கொச்சைப்படுத்திற மாதிரி புது 'தியறி'யை முன்வைக்கிறாருங்கோ.

அவர் அதைத்தான் செய்வார். காலம் காலமா நீதிமன்றத்தில பிரதான ஆசனத்தில் அமர்ந்திருந்து சட்டத்துக்கு வியாக்கியானம் செய்து, அதை நிலை நிறுத்துறதுக்காக சம்பளமும் வசதிகளையும் பெற்றவர். சட்டத்துக்கு முரணா ஏதும் செய்யச் சொல்லுவாரோ?

அத்தகைய ஒருத்தரை முன்நிறுத்தி வைச்சுக்கொண்டு தந்தையின்ர வழியிலை போராட்டம் நடத்தப்போறம் எண்டு 'பீலா' விடுறது சனத்திர காதில பூச்சுத்துற வேலையன்றி வேறென்னவெண்டு சொல்லுறது.

ஹி... ஹி...ஹி...

# அதிரடி அய்யாத்துரை

**'வடபகுதி முஸ்லிம்களின் துன்பியல் கதை' இக்கட்டுரையின் இறுதிப்பகுதி அடுத்தவாரம் பிரசுரமாகும்.**

# படுவான்கரையில் வாழ்வுக்கான பாலம்

**(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)**

**கடந்த** 25 வருடங்களாக கிழக்கில் உள்ளூர் மக்களின் போக்குவரத்து என்பது முற்றாகவே முடக்கப்பட்டு விட்டது போன்ற நிலைமைதான் காணப்பட்டது.

அந்தளவுக்கு அர்த்தமற்ற ஆயுத வன்முறைகள் அராஜகம் புரிந்திருந்தன.

ஆயுதவன்முறைகள் இடம்பெற்ற போது நகர்ப்புற மக்கள் ஓரளவுக்கு தமது போக்குவரத்தை மேற்கொண்டிருந்தாலும் தொலைதூரத்திலுள்ள கிராம மக்களின் போக்குவரத்து என்பது உயிரைப் பணயம் வைத்த ஒன்றாகவே இருந்துவந்துள்ளது.

பயங்கரவாத வன்செயல்கள் பெரும்பாலும் வறிய மக்களின் வாழ்வையும் நடமாட்டத்தையும் அவர்களது போக்குவரத்து மார்க்கத்தையும் இலக்கு வைத்திருந்ததே இதற்குக் காரணமாகும்.

காட்டிலுள்ள ஒற்றையடிப் பாதைகளில் தொடங்கி காப்பெற் வீதிகள் வரையும் பயங்கரவாதத் தாக்குதல்களின் இலக்காகக் கொள்ளப்பட்டிருந்தன.

சிறிய மதகுகள் தொடக்கம் பெரிய பாலங்கள்வரை அவற்றில் கண்ணிவெடிகளைப் புதைத்து மக்களுக்கும் சொத்துக்களுக்கும் அழிவை உண்டாக்கி உயிர்களைக் காவுகொள்ளும் காரியங்கள் நடந்தேறின.

அந்தவகையில் பயங்கரவாதம் என்பது கிழக்கிலே உள்ள அப்பாவி மக்களின் போக்குவரத்திற்கு ஒரு அச்சுறுத்தலாகவும் அழிவை ஏற்படுத்தும் ஒன்றாகவுமே இருந்துவந்தது.

ஏழை விவசாயிகளால் அவர்களது விளைபொருட்களை நகரப்பகுதிகளுக்கு எடுத்துவந்து விற்பனைசெய்ய முடியவில்லை.

அவர்களது அப்பாவிப் பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்று படிக்க முடியவில்லை, நோயாளிகள் வைத்திய வசதிகளை நாடி மருத்துவமனைகளுக்குச் செல்ல போக்குவரத்து வசதிகள் இருந்திருக்கவில்லை. கர்ப்பிணிப் பெண்களால் வைத்தியசாலைகளுக்குச் செல்ல முடியவில்லை.

இவ்வாறு வாலிபர்களும் வயோதிபர்களும் என்று எல்லோருமே பயங்கரவாதத்தால் நாசமாக்கப்பட்ட பாதைகளில்தான் சித்திரவதையான பயணத்தை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

கண்ணிவெடிகளால் பதம்பார்க்கப்பட்ட கரடுமுரடான பாதைகளில்தான் மக்கள் காததூரம் நடக்கவேண்டியிருந்தது.

பாலங்கள் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டதால் மக்கள் உயிர்ப் போராட்டத்தினூடே ஆறுகளையும் வாவி களையும் கடந்து பயணம் செய்ய வேண்டியிருந்தது.

விஷ ஜந்துக்களால் தீண்டப்படுபவர்களும், இன்னபிற இயற்கை - செயற்கை இடர்களுக்கு உள்ளானோரும் பாதைகளும் பாலங்களும் அழிக்கப்பட்டிருந்ததால் பயணம் செய்வதில் சொல்லொணாத் துன்பத்தை எதிர்கொண்டார்கள்.

கையில் குழந்தை, தலையில் நாளாந்த ஜீவனோபாயத்திற்காக ஏதோ உயிரைக் காப்பாற்றிக் கொள்ளத் தேவையான உணவுப் பொருட்கள் இப்படி நகருக்கு வந்து பொருட்களை வாங்கிக்கொண்டு சுட்டெரிக்கும் வெயிலில் தாய்மார் கால் நடையாகவே செல்லும் காட்சி நெஞ்சை உருக்கும்.

இது கடந்த பயங்கரவாதம் கோலோச்சிய போது கிழக்கில் இருந்த நிலைமை. ஆனால், இப்பொழுது இத்தகைய சிரமங்கள் எதுவுமில்லாது மக்கள் நிம்மதியாகப் பயணம் செய்யமுடிவதே ஆயுத வன்முறைகளால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கிடைத்த பெரும் வரப்பிரசாதமாகி இருக்கிறது.

மட்டக்களப்பு நகரையும் படுவான்கரைப் பிரதேசம் எனக்கூறப்படும் மட்டக்களப்புக்கு தென்புறத்தே உள்ள பரந்த பிரதேசங்களையும் இணைக்கும் பாலங்களை நிர்மாணிக்கும் பணிகள் யாவும் இம் மாதத்துடன் பூர்த்தியடைந்து, அவை மக்களின் போக்குவரத்திற்குத் திறந்து விடப்பட்டுள்ளதாக அக்ஸஸ் எனப்படும் பொறியியல் நிர்மாணக் கம்பனியின் திட்ட முகாமையாளரும் பொறியியலாளருமான சந்திமால் குமார தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 378 மில்லியன் ரூபாய்கள் செலவில் இந்த பாலங்களை நிர்மாணிக்கும் பணிகள் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வலையிறவு, வவுணதீவு, ஆயித்தியமலை, முள்ளாமுனை மற்றும் தொப்பிகல (குடுமி மலை) ஆகிய இடங்களில் உள்ள பாலங்களே ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

விவசாயப் பிரதேசமான படுவான் கரையை இணைக்கும் இந்தப் பாலங்கள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு பொதுப் போக்குவரத்திற்குத் திறந்து விடப்பட்டுள்ளதால் இதுவரை காலமும் போக்குவரத்தில் சொல்லெணாத் துன்பங்களை அனுபவித்த மக்களுக்கு இந்த நவீன வீதிப் போக்குவரத்து வசதி என்பது நினைத்துப் பார்த்திருக்க முடியாத ஒரு வரப்பிரசாதமாகும் என்றும் அவர். மேலும் தெரிவித்தார்.

ஆயித்தியமலை, முள்ளாமுனை வவுணதீவுக்கூடான மூன்று பாலங்களும் நிர்மாணிக்கப்பட்டு அவை மக்களின் போக்குவரத்திற்குத் திறந்து விடப்பட்டுள்ளதால் மக்கள் செங்கலடி ஊடாக சுமார் 80 கிலோமீற்றர் சுற்றி வளைத்து மட்டக்களப்பு நகருக்கு வரவேண்டியிருந்த சிரமம் தவிர்க்கப்பட்டுள்ளது.

இதனால் பயணக் களைப்பு, நேரவிரயம், அதிக செலவு என்பனவற்றையும் மக்கள் மீதப்படுத்த முடிந்துள்ளது என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

இதேவேளை தொப்பிகல (குடுமி மலை) கிரான் ஊடான போக்குவரத்தும் தொப்பிகல பாலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளதால் சீரடைந்துள்ளது. தொப்பிகல என்பது காடுகள் அடர்ந்த, எந்நேரமும் காட்டு விலங்குகள் நடமாடும் பிரதேசமாகும். மாரிமழை காலத்தில் பெரும்பாலும் அந்த மக்களின் போக்குவரத்து பாலங்கள் இல்லாததால் தடைப்பட்டேவிடும்.

பல மணிநேரங்களை, சிலவேளை இரண்டு நாட்களைக்கூட அங்குள்ள ஏழைக் கிராம மக்கள் விரயம்செய்து பயணத்திற்காக சிரமப்பட வேண்டியிருந்தது.

ஆனால், தற்பொழுது போக்குவரத்து நிலைமை என்பது கிழக்கில் முற்று முழுவதுமாக மாறியிருக்கின்றது.

புல்மோட்டை தொடக்கம் அறுகம்பை வரை வீதி அபிவிருத்தியும் பாலங்களின் கட்டுமானங்களும் நடந்திருக்கின்றன.

சேறும் சகதியும் நிறைந்து பள்ளமும் படுகுழியுமாக இருந்த வீதிகள் காப்பெற் வீதிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன.

கண்ணிவெடிகள் பொருத்தப்பட்டு உடைந்துவிழுந்து தொங்கிக் கொண்டிருந்த பாலங்கள் யாவும் சுமார் நூறு வருடங்கள் அதன் உறுதி இருக்கக் கூடியளவுக்கு நவீனமாக நிர்மாணிக் கப்பட்டுள்ளன.

பாலங்களும் வீதிகளும் நவீனமயப்படுத்தப்பட்டதன் மூலம் அபி விருத்தியின் பலாபலன் கிராமிய மக்களின் காலடிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்பதை இப்பொழுது கண்கூடாகக் காணமுடிகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாலங்கள் நிர்மாணிக்கப்பட்ட விடயத்தோடு ஒட்டியதாக சமூக சகவாழ்வும் பழைய காயங்களுக்கான ஒத்தடமிடுதலும் இடம்பெற்றிருப்பதாகப் பெருமைப்பட்டுக் கொள்கின்றார் அக்ஸஸ் பொறியியல் நிர்மாணக் கம்பனியின் திட்ட முகாமையாளர் சந்திமால் குமார.

அது என்ன? கிராம மக்கள், நகர வாசிகள் என்பதற்கு அப்பால் தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகங்களின் மனங்கள் பாலங்கள் அமைக்கப்பட்டதன் மூலம் ஒன்றிணைக்கப்பட்டிருப்பதாக அவர் கூறுகின்றார்:

பால நிர்மாணப் பணிகளுக்கான மனிதவளமாக முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ போராளிகளைக்கொண்டு அவர்களை சமூகரீதியிலும் மனோதிடத்திலும் வலுப்படுத்தி பயிற்சியளித்து பிரதேச அபிவிருத்தியின் பங்காளிகளாக மாற்றியதே அந்த சிறப்பம்சம் என்கின்றார் அவர்.

முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ. போராளிகளுடன் தொடர்பாடல் செய்வது ஆரம்பத்தில் ஒரு சிரமமான காரியமாகத் தோன்றினாலும் பின்னாட்களில் தொழிலாளர்கள் அனைவரும் தமிழ், சிங்களம் ஆகிய இருமொழிகளையும் கற்று தமிழ் பேசுவோரும் சிங்களம் பேசுவோரும் பரஸ்பர நட்புறவையும் வளர்த்துக் கொள்ள பாலக் கட்டுமானப்பணிகள் உதவியிருக்கின்றன என்பதை அவர் குறிப்பிட்டுக் கூறுகின்றார்.

இப்பொழுது கிழக்கின் எந்தவொரு பட்டிதொட்டிகளிலிருந்தும் பயணம் செய்வது பாலங்களும் வீதிகளும் நவீனமாக அபிவிருத்தி செய்யப்பட்டிருப்பதன் மூலம் இலகுவாக்கப்பட்டிருக்கின்றது.

அத்துடன் பயணத்துக்காக நாட் கணக்கில் செலவிட்ட நேரத்தையும், பணத்தையும் மீதப்படுத்த முடிந்திருக்கின்றது.

கிராமப்புறத்தின் மூலைமுடுக்கெல்லாம் மக்களின் காலடிக்கு பொருட்கள் எடுத்துச்செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. அபிவிருத்தியின் நன்மைகளை கிராம மக்களும் அனுபவிக்க வாய்ப்பேற்பட்டுள்ளது.

பாலங்களும் பாதைகளும் உண்மையான சமூக மாற்றத்தின் ஒரு இணைப்புக்கான அடையாளமாகக் கொள்ளமுடியும்.



# காதிலை பூ கந்தசாமி




கூட்டத்திற்கு வந்திருந்த மு.நீ. யின்ர பேச்சைக் கேட்கவே பரிதாபமாக இருந்திச்சு. தன்ன இந்த கிணத்துக்கை பிடிச்சு.

தள்ளிவிட்டதில கணேசன்ர பொடியனுக்கும் பங்கு இருக்கு தெண்டு பரிதாபமாய் புலம்பிக் கொண்டிருக்கிறார்.

அது மட்டுமில்ல. கந்தசாமி அந்த மனுசனுக்கு தான் எந்தக் கட்சியின்ர முதன்மை வேட்பாளர் என்பதே மண்டைக்குள்ள நிக்குதில்ல. பக்கத்தில நிக்கிறவையள் தான் சொல்லிக்குடுக்க வேண்டிக்கிடக்குது.

**கா.பூ.க:-** ஓம்.. ஓம்.. நானும் கொஞ்ச நாளாய் பார்த்துக்கொண்டுதான் வாறன். மனுசன் அறலபேந்த மாதிரித்தான் கதையள் சொல்லிக்கொண்டு திரியிறார். யாழ்ப்பாணத்தில காப்பெற் றோட் போட்டது ஆமிக்காரர் பாவிக்கிறதுக்கெண்டு தன்ர பாண்டித்தியத்தைக் காட்டியிருக்கிறார்.

**பொன்:-** ஓம்... ஓம்... ஒரு படிச்ச மனுசன் உப்பிடிச் சொல்லுராறே எண்டு நானும் யோசிச்சனான். மற்ற அரை வேக்காடுகள் சொல்லியிருந்தா பேசாமல்விட்டிருக்கலாம். இவர் உந்த மாதிரிக் கதைக்கிறத கேட்க கொஞ்சம் குழப்பமாய்த்தான் கிடக்கு

**கா.பூ.க:-** பொன்னம்பலம் அண்ணை நீங்கள் நினைக்கிற மாதிரி மு.நீ. இப்ப இல்லை. தன்ர கூட்டாளிகளுக்கு ஏற்றமாதிரி தன்னை சேன்ஜ் பண்ணிக்கொண்டார். தான் வெண்டதும் குடா நாட்டில இருந்து ஆமியைத் துரத்துவன், அடுத்த கட்டம் தொடங்குவன் எண்டெல்லாம் கப்சா விட்டுக்கொண்டிருக்கிறார்.

**பொன்:-** இது என்ன கந்தசாமி! நீதான் காதில பூச்சுத்திறாய் எண்டால் இப்ப எங்கட மு.நீ.யும் நல்லாய் சுத்திரார் போல கிடக்குது. மாகாண சபையில வெண்ட உடன தடியை எடுத்தாமோ கலைக்கப்போகிறார். மாகாண சபைக்கு பொலிஸ், காணி அதிகாரங்களைக் குடுத்தால்கூட ஆமி எங்க நிற்கவேணுமெண்டு உவையள் யாருக்கும் சொல்ல ஏலாது. அது பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விசயம்.

**கா.பூ.க:-** ஓம் ஓம்... அது உந்த மனுசனுக்கு தெரியாததில்ல. எங்கட சனத்தின்ர காதில சுத்திறதுக்கு இவரும் பழகீட்டார்.

**பொன்:-** என்னடா கன்றாவி இது... எங்கட சமூகத்தின்ர நிலையைப் பாருமன் கந்தசாமி. வாறவை - போறவையெல்லாம் இஷ்ரத்திற்கு போட்டு உருட்டுறாங்கள். எங்கட சனத்தை கடவுளாலும் காப்பாத்தேலாது போல கிடக்கு.

**கா.பூ.க:-** கடவுள் காப்பாத்திறது இருக்கட்டும். கடவுளின்ர பிரதிநிதியாத்தான் பொட்டு வைச்சு; பட்டை இழுத்து மு.நீ. ஃபீல்ட்டுக்கு வந்திருக்கிறாரெண்டு அவுட்டு விட்டுக்கொண்டு திரியுது ஒரு கூட்டம். உதுகளையெல்லாம் அந்தக் கடவுள் பாத்துக்கொண்டுதானே இருக்கிறார். ஹீ... ஹீ... ஹீ... ஹீ...

**கா.பூ.க:-** என்ன பொன்னம்பலத்தார் நாலைந்து வருசத்துக்குப் பிறகு நாட்டுக்கு வந்திருக்கிறியள் போல இருக்கு எப்படி சுக செய்திகளெல்லாம்?

**பொன்:-** ஏதோ இருக்கிறோமப்பா. ஆனா நாட்டுக்குள்ள வந்து இங்க நடக்கிற கூத்துக்களைப் பாக்கிறப்போதான் அழுறதோ?, சிரிக்கிறதோ? எண்டு தெரியல. வித்துவான்கள் எண்டு நினைத்துக் கொண்டிருந்தவர்களெல்லாம் விசர்க்கதையெல்லோ கதைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**கா.பூ.க:-** என்ன பொன்னம்பலத்தார் இப்படி அலுத்துக் கொள்ளுறியள் என்ன நடந்தது.

**பொன்:-** சட்டம் படிச்சவர்; பட்டங்கள் கணக்கெடுத்தவர் ; ஏதோ ஆரோக்கியமாய் சிந்திப்பார் எண்டு நினைச்சால் அந்த மனுசன் ஏதோ அறலபேந்த மாதிரி எல்லோ கதைச்சுக் கொண்டிருக்குது.

**கா.பூ.க.:-** என்ன அண்ண சொல்லுறியள்? ஒன்றும் விளங்கல்லை. ஏதோ பெரிசா புடிச்சுப்போட்டியள் போல இருக்கு. அதுதான் பொடி வைச்சுக் கதைக்கிறியள்.

**பொன்:-** போன கிழமை எங்கட கணேசன்ர பொடியன் கொழும்பில இருந்துவந்து பேப்பர்காரரோட கதைக்கப் போறான் எண்டு கேள்விப்பட்டு அங்க போய் பார்த்தனான். அந்தக்

**யாவும் கலப்படமற்ற பொய்**

# உயிர் காத்த விளக்கு



**இ**தைத் தவிர்க்கும்படியான ஒரு விளக்கைக் கண்டு பிடித்தால்? அந்த விளக்கின் சுடர் வெப்பக் கதிர்களைப் பரப்பாதிருக்கவேண்டும்.

டேவி அத்தகைய ஒரு விளக்கை உருவாக்குவதில் முனைந்தார். விளக்கை சுற்றி கம்பி வலை அமைத்தார். பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட வழிபிறந்தது. சுரங்கத் தொழிலாளிகளின் உயிர்களைக் காப்பதற்கான முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைத்தார் டேவி. விளக்கின் சுடர், வாயுவை வெடிக்கச் செய்யும் வெப்பக்கதிர்களை உருவாக்குவதில்லை. அதை கம்பி வலைத் தடுப்பு ஏற்றுக் கொண்டு, வெப்பத்தை வெளியிடாமல், தான் சூடாகியது. தன் ஆராய்ச்சியின் முடிவை உறுதிப் படுத்திக் கொள்ள முற்பட்டார்.

டேவி தயாரித்த இந்த விளக்கை, சுரங்கத்தினுள் கொண்டுபோய் ஓரிடத்தில் கட்டித் தொங்க விட்டார்கள். விளக்கின் சுடர், அதன் கம்பிவலை சிவக்கும்படி சூடாக்கியது. அதனால் அபாயம் ஏற்படவில்லை. சுரங்கத் தொழிலாளருக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. டேவியின் பாதுகாப்பான விளக்கை - சேஃப்ட்டி லாம்ப் - சுரங்கத் தொழிலாளிகள் ஏராளமாகப் பயன்படுத்தலானார்கள். பெரிய சுரங்கங்களில், ஆழமான பகுதிகளில் வேலைசெய்ய, டேவியின் விளக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. அதிக நிலக்கரியை அபாயம் இன்றி வெட்டிக்குவித்து, தொழில்துறையில் முன்னேறிய நாடுகளில் முதன்மையானதாக பிரிட்டனை உருவாக்க, டேவியின் கண்டுபிடிப்பான இந்த விளக்கு உதவியது.

சுரங்கத் தொழிலாளர்கள் பயன்படுத்திய ஆரம்ப கால விளக்கு ஓர் எளிய அமைப்பு. மெழுகு வர்த்தியே இதில் ஒளிதரும் சாதனம். இதன் சுடர் எளிதில் சுரங்கத்தினுள் ஏற்படும். எரிவாயு மற்றும் வேறு வாயுக்களோடு சுலபமாகத் தொடர்புகொள்ள முடியும். இந்த ஆபத்தை வெகுவாகக் குறைத்தது டேவியின் சேஃப்டி விளக்கு. இவ்விளக்கின் சுடர் கம்பி வலை உறையினால் மூடப்பட்டிருக்கும்.

(தொடரும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(12.09.2013 தொடக்கம் 18.09.2013 வரை)

## மேடம்

உத்தியோகத் துறையினருக்கு நினைத்த இடங்களில் பணி இடமாற்றமும் பதவி உயர்வுகளும் உண்டாகும். புதிய ஆடை மற்றும் ஆபரணங்களை வாங்க எண்ணிய எண்ணங்கள் நிறைவேறும். வெகுகாலமாக எதிர்பார்த்து இருந்த வங்கி உதவித்தொகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. புதிய வீடு, வாகனங்களை வாங்குவதற்கான முயற்சிகளில் இன்னும் சிறிது காலதாமதம் ஏற்படலாம். புதிய முயற்சிகளில் மற்றவர்களை நம்பிப் பணம்கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். குடும்பச் சொத்துக்களில் இருந்து வந்த பிரச்சினைகள் இன்னும் சிறிதுகாலம் நீடிக்கும். புதிய வீடு மற்றும் நிலபுலன்களை வாங்குவதற்கான முயற்சிகளில் வெற்றிபெறலாம்.

## இடபம்

வராத நாட்பட்ட கடன்கொடுத்து இருந்த பணம் மற்றவர்களின் தலையிடுதலால் திரும்பக் கிடைக்கும். உடம்பில் கண், காதுகளில் சிற்சில உபாதைகள் வந்துபோகும். நாட்பட்ட சொத்து சம்பந்தமான வழக்கு விசயங்களில் மிகு எச்சரிக்கையுடன் இருக்கவும். வேண்டாத விசயங்களில் தலைமிட்டு வீண் சிக்கல்களில் மாட்டிக் கொண்டு மனநிம்மதியை இழக்காதீர்கள். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவர எடுத்துக் கொண்ட முயற்சிகள் நிறைவேறும். நண்பர்களால் பொருள் நஷ்டமும் மனச்சஞ்சலமும் ஏற்படலாம். புதிய நண்பர்களின் சேர்க்கையால் மனமகிழ்ச்சி அடைவீர்கள். மாணவர்களுக்கு கல்வி பயிலும் இடங்களில் அவப்பெயர்கள் வர இருப்பதால் எச்சரிக்கையுடன் கல்வி பயிலுதல் நல்லது.

## மிதுனம்

உறவினர்களின் வரவுகளால் எதிர்பாராத பணச்செலவுகள் ஏற்படலாம். வெகுகாலமாக விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் தொடரும் காலமாகும். மாணவர்கள் கல்வியில் கல்விபயிலும் இடங்களில் சிற்றில சச்சரவுகள் வர இருப்பதால் மிகுந்த கவனமுடன் கல்வி பயிலுதல் சிறந்ததாகும். பெண்களால் வடதிசையில் இருந்து பொருள்வரவுகள் உண்டாகும். நாட்பட்ட அரசு சம்பந்தமான வழக்கு விசயங்களில் சம்பந்தம் இல்லாத நபர்களின் உதவியால் வெற்றிபெறுவீர்கள். பொருளாதாரத்தில் இதுநாள் வரை இருந்துவந்த நெருக்கடிகள் மாறி பணப்புழக்கம் நன்றாக இருக்கும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## கடகம்

நண்பர்கள் உறவினர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள். புதிய கடன்கொடுப்பதைத் தவிர்க்கவும். கணவன், மனைவி உறவுகளில் காரணமற்ற .வீண் பிரச்சினைகள் உருவாகி மனக்கசப்புகள் ஏற்படலாம். நீண்டதூரப் பயணங்களின்மூலம் எதிர்பார்த்த காரியங்கள் நிறைவேறும் காலமாகும். காதல் விசயத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பது நன்றாகும். தந்தை வழிப் பூர்வீகச் சொத்துக்கள் கைக்கு வந்துசேரும். உடம்பில் வாயு, வயிறு போன்ற உபாதைகள் வந்துபோகலாம். காதலர்களுக்கிடையில் வாக்குவாதம் ஏற்பட இடமுண்டு. அதனால் கவனமாக இருக்கவும்

## சிங்கம்

உடம்பில் தலைவலி, முதுகுவலி போன்ற உபாதைகள் வந்துபோகலாம். கணவன், மனைவி உறவுகளில் இன்னும் சற்று பிரச்சினைகள் வந்துபோகலாம். உத்தியோகம் இல்லாத படித்த இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கக்கூடிய காலமாகும். உடல்நிலையில் காய்ச்சல் மற்றும் உஷ்ண சம்பந்தமான உபாதைகள் வந்துபோகலாம். வெளிநாடு சென்று வருதல் போன்ற முயற்சிகளில் நல்ல பலன்கள் கிடைக்கும். செய்தொழிலில் பங்காளிகளுடன் இருந்த மனச்சஞ்சலங்கள் தீர்ந்து நிம்மதி அடைவீர்கள். வெளிநாடுகள் சென்றுவருதல் போன்ற விசயங்களில் கவனம் தேவை. பழைய வீடு மற்றும் வாகனங்களைப் புதுப்பித்தலுக்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

## கன்னி

குழந்தைகளின் மனமகிழச்சிக்காக நீண்டதூர உல்லாசப் பயணங்களை மேற்கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். காணாமற்போன பொருட்கள் காவல்துறையினரின் உதவிகளால் திரும்பக் கிடைக்கும். தந்தையின் உடல்நிலையில் இருந்து வந்த பாதிப்புகள் சற்றுக் குறையும். வெகுதூரப் பயணங்களால் எதிர்பார்த்த காரியங்கள் நிறைவேறும் காலமாகும். கணவன், மனைவி உறவுகள் நன்றாக இருக்கும். நீண்டகாலமாக வராமல் இருந்த கடன்கொடுத்த பணம் பொருட்கள் திரும்பக் கைக்கு வந்துசேரும். தாயின் உடல் நிலையில் பாதிப்புகள் ஏற்பட்டு அவர்களால் மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## துலாம்

பழைய கடன்களை அடைத்துவிட்டுப் புதிய கடன் வாங்குவீர்கள். புதிய நண்பர்களின் சேர்க்கையால் வீண் பிரச்சினைகளும் மனக் குழப்பங்களும்வர இருப்பதால் கவனமுடன் இருக்கவும். உற்றார், உறவினர்களின் திடீர்வரவால் மனமகிழ்ச்சியும் பொருள் வரவும் உண்டாகும் அரசியல்வாதிகளிடம் இருந்து எதிர்பார்த்த காரியங்கள் நிறைவேறும் காலமாகும். மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களை கடன்கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். விளையாட்டுத் துறை சார்ந்தவர்களுக்குப் பரிசு மற்றும் பாராட்டுதல்கள் கிடைக்கும். காதலர்களுக்கிடையில் நல்ல புரிந்துணர்வு ஏற்படும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## விருச்சிகம்

அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகக் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லது. வெளிநாடு சென்றுவருவதற்கான முயற்சிகளில் மற்றவர்களிடம் இருந்து எதிர்பார்த்து இருந்த உதவிகள் கிடைக்கும். வெளிநாடு சென்றுவருவதற்கான புதிய முயற்சிகளில் நல்ல தகவல்கள் வந்துசேரும் காலமாகும். கணவன், மனைவி உறவுகளுக்குள் சிறிய பிரச்சினைகளுக்காக வீண் மனக்கசப்புகள் வந்துசேரும். மாமன் வழியின் மூலமாக எதிர்பாராத சில ஆதாயங்கள் அடைவீர்கள். விவசாயிகளுக்கு இலாபம் கிடைக்காது. கணவன், மனைவிக்கிடையில் அந்நியோந்நியம் அதிகரிக்கும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## தனுசு

குடும்பத்தில் மனஅமைதியுடன் சந்தோசம் நிலவும் காலமாகும். பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்படுவதுடன் பொருட்செலவுகளும் ஏற்படலாம். குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உடல்நிலையில் கண், காதுகளில் கவனமுடன் இருந்துவரவும். பெண்களால் தென்திசையில் இருந்து நல்ல செய்திகளுடன் பொருள்வரவுகள் உண்டாலாம். புதிய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்க்கவும். மாணவர்களுக்கு பாராட்டுக்கள் வந்துகுவியும். சொத்து சம்பந்தமான வழக்கு விசயங்களில் பெரியவர்களின் உதவியால் நல்ல தீர்ப்புகள் கிடைக்கும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## மகரம்

கணவன், மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். தந்தை, மகன் உறவுகளில் வெகுகாலமாக இருந்துவந்த பிரச்சினைகள் குறைந்து மனநிம்மதி அடைவீர்கள். கணவன், மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். காதல் விசயங்களில் நல்ல செய்திகள் வந்துசேரும். பொருளாதாரம் சற்றுச் சுமாராகவே இருப்பதால் புதிய கடன்களை வாங்க முயற்சி செய்வீர்கள். மற்றவர்களுடன் பேசிப் பழகும்பொழுது கவனமுடன் இருக்கவும். வீண் பிரச்சினைகள் உருவாகும். பங்காளிகளுடன் செய்தொழில் விசயங்களில் சற்றுப் பொறுமையுடன் நடந்து கொள்வது நல்லது. பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## கும்பம்

உத்தியோகம் இல்லாத படித்த இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கக் கூடிய காலமாகும். பழைய வீடு மற்றும் வாகனங்களைப் புதுப்பித்தலுக்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். வெகுகாலமாகக் காணாமற்போன பொருட்கள் மற்றும் நபர்கள் திரும்ப வீடு வந்துசேர வாய்ப்பு உள்ளது. சகோதர சகோதரர்களின் திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். வேலை இல்லாத படித்த இளைஞர்களுக்கு புதிய வேலை வந்துசேரும் காலமாகும். சகோதர சகோதரகளின் திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். ஒரு சிலருக்குப் புதிய வீடு மாற்றம் ஏற்படலாம். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## மீனம்

வெளிநாட்டு விசயங்களில் எதிர்பார்த்த நபர்களிடம் இருந்து நல்ல தகவல்கள் வந்துசேரும். உறவினர்களின் திடீர் வரவுகளால் மனத்தைரியமும் பொருள்வரவும் உண்டாகலாம். சகோதர சகோதரிகளுடன் வீண் மனச்சஞ்சலங்களும் பிரச்சினைகளும் உருவாகும். தந்தை, மகன் உறவில் பிரச்சினைகள்வர இருப்பதால் கவனமுடன் இருத்தல் நல்லதாகும். புதிய வீடு நிலம் வாங்குவதற்காக வங்கிகள் மூலமாக எதிர்பார்த்து இருந்த உதவித் தொகைகள் கிடைக்கும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு மேலதிகாரிகளுடன் மனக்கசப்புகளும் அவர்களால் பணி இடமாற்றமும் ஏற்படலாம். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)

